
# இலங்கையின் இனப் போராட்டம்

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் இலங்கை இனப் போராட்டத்திற்கு ஒரு நீண்டகால தீர்வைக் காணக் கூடியதா?




அரோ ஸ்மித்தின் இலங்கை வரைபடம்—1803




## கண்ணீர் அஞ்சலி

தமிழ் ஈழமக்கள் தன்மானத்துடனும் சுதந்திரத்துடனும்
எதிர்காலத்தில் வாழவேண்டுமென்பதற்காக
30 நாட்களுக்குமேல் உண்ணா நோன்பு இருந்து
அணு அணுவாய்த் துடித்து தன் இன்னுயிரையே
அர்ப்பணித்து வீரவரலாறு படைத்த

**அன்னை பூபதிக்கு**

எமது கண்ணீர் அஞ்சலி

தமிழ் ஈழம் மக்கள் மன்றம்

# இலங்கையின்

# இனப்போராட்டமும்

# இந்திய — இலங்கை

# ஒப்பந்தமும்

பிரசுரிப்பாளர் :

தமிழ் ஈழ மக்கள் மன்றம்
121, பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 12/-

# உள்ளடக்கம்


## பாகம் 1

| | பக்கம் |
|---|---|
| பழைய தமிழ் ஈழ அரசு | 2 |
| சிங்கள இனவாதத்தின் தோற்றம் | 3 |
| அரச உதவியுடனான சிங்கள குடியேற்றங்கள் | 4 |
| தமிழ் ஈழத்திற்கான முதற் குரல் | 6 |
| தமிழ் ஈழத்திற்கான மக்கள் ஆணை | 7 |
| தமிழர் பங்களிப்பற்ற அரசியல் யாப்புக்கள் | 9 |
| தமிழர் பாராளுமன்ற பிரதிநிதித்துவ மறைவு | 11 |

## பாகம் 2

| | |
|---|---|
| ஒப்பந்தம் — ஒரு சாராரின் சம்மதமில்லாத் திருமணம் | 12 |
| ஒப்பந்தத்தின் நோக்கங்கள் — இந்தியக் கருத்து | 13 |
| நிலம் — தமிழர் தாயகம் | 14 |
| தமிழர் தாயகக் கோட்பாட்டுக்கு விரோதமான கருத்துக் கணிப்பு | 21 |
| சட்டம் — ஒழுங்கு ஆகியவற்றை பேணுவதற்கான சாதனம் | 24 |
| மொழி உரிமைகள் | 29 |
| உத்தேச மாகாணசபை அமைப்பு | 32 |
| மாகாணசபை அமைப்புப் பற்றி உயர் நீதிமன்றத் தீர்ப்பு | 33 |
| மாகாணசபை அமைப்பில் ஆளுநர் | 34 |
| மாகாணசபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் | 38 |
| மாகாணசபை அதிகாரப் பட்டியல் — மட்டுப்படுத்தப் பட்டுள்ள 31 அதிகாரங்கள் | 39 |
| இந்திய மாநில — இலங்கை மாகாண அதிகாரங்கள் — ஓர் ஒப்பு நோக்கு | 43 |
| கல்வி | 50 |
| நிதி ஏற்பாடுகள் | 52 |
| மாகாணசபைகளின் சட்டவாக்க அதிகாரம் | 56 |
| இடைக்கால நிர்வாகம் | 63 |
| வடக்கு கிழக்கு தேர்தல் — இடைக்கால அரசமைப்பு | 65 |
| இலங்கை அரசுமீது சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் | 67 |
| ஒப்பந்த மீறல்கள் | 68 |
| முடிவுரை | 69 |

# முன்னுரை

ஒரு சில மன்ற உறுப்பினர்களின் கூட்டு முயற்சியால் ஏற்கனவே வெளியான ஆங்கில நூலின் தமிழாக்கமாக வெளிவரும் இச்சிறு நூலை எங்கள் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களையே காணிக்கையாகக் கொடுத்த நமது இளைஞர்களின் நினைவுக்கும் தமது இன மக்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமென்ற உயர் நோக்கினால் மற வழிப்போராட்டம் தடைப்பட்டுள்ள கால கட்டத்தில் பாரதத்தின் தவப் புதல்வர் அண்ணல் காந்தி அடிகள் காட்டிய அற வழிப் போராட்டத்தில் இறங்கி அணு அணுவாய்த் துடித்து மடிந்த தம்பி திலீபனின் நினைவுக்கும் ஆண்களுக்குச் சளைத்தவர் அல்லர் பெண்கள் என்று துணிந்து தனது இன்னுயிரை அளித்து வீர காவியம் எழுதிய அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவுக்கும் காணிக்கையாக வைக்கிறோம். 1956 தொடக்கம் இத்தீவை கலக்கி வரும் இன ஒழிப்பு வன்செயல்களின் போதும், சிறீ லங்கா படையினரின் கைகளிலும் இப்பொழுது இந்தியப் படையினரின் கைகளிலும் சிக்குண்டு ஆயிரக்கணக்கில் உயிரிழந்த நம்மக்களையும் இன்னும் ஆயிரக்கணக்காக காயப்பட்டும் உடலுறுப்புக்களை இழந்தும் வாடும் நம் மக்களையும் கோடானுகோடி பெறுமதி வாய்ந்த எமது உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டோ, சிதைக்கப்பட்டோ முற்றாக அழிக்கப்பட்டோ இருக்கும் நிலையையும் - ஆக எல்லா மொத்த இழப்புக்களையும் இந்நேரத்தில் நினைவில் மீட்டுக் கொள்வது நன்று.

''இத்தியாகங்கள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராக வேண்டுமா? அல்லது அவை பொருளுடையனவாயிருக்க வேண்டுமா?'' இக்கேள்வியை இன்று தமிழினம் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அமைதி, மக்களாட்சி என்ற பெயர்களில் இந்திய அரசின் பொது மக்கள் தொடர்புச் சாதனங்கள் இந்திய - சிறீ லங்கா ஒப்பந்தத்தின் அடிப்படையின் கீழான மாகாண சபை அமைப்பினை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய நீதியானதும் நியாயமானதுமான ஒரு தீர்வென அல்லும் பகலும் அனவரதமும் பிரசாரம் செய்து நமக்கு விற்பனை செய்யப் பார்க்கின்றன. ஆனால் இந்த மாகாண சபை அமைப்பு நம்மால் அறவே ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்று என்பதை நாம் மறந்து விடலாகாது.

எனவே இச்சிறு நூலை இரு நோக்கங்களுக்காக வெளியிடுகிறோம். ஒன்று நமது மக்களுக்கு இப்பிரச்சினை பற்றிய விளக்கம் கொடுப்பது; இரண்டாவது நமது நியாயத்திற்கு - கோரிக்கைக்கு சார்பாக நியாய புத்தியும் - அறிவும் நிரம்பிய உலக கருத்தை திரட்டுவது. இவ்விடயம் சம்பந்தமாக எல்லாவற்றையும் முழுமையாக இந்நூலிலே

ஆராய்ந்து விட்டோம் என்று நாம் கூறவில்லை. அதன் காரணமாக இத்தகைய வேறு வெளியீடுகளையும் நாம் வரவேற்கிறோம்.

எமது இனப்பிரச்சினையில் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்ட இந்திய அரசு அத்தகைய சமரச முயற்சிக்குள் தனது பிராந்திய பூகோள நலவுரிமைகளையும் சேர்த்துக்கொண்டதனால் எமது நலவுரிமைகளை பாதிப்படைய விட்டு விட்டது துரதிருஷ்டவசமானது. ஒப்பந்தத்தின் 2.15-ம் பகுதியில் சில பிரேரணைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரேரணைகளை உருவாக்குவதற்காக பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது இந்திய அரசு தான் ஏமாற்றப்படுவதை "அனுமதித்திருக்கிறது" இத்தகைய ஏமாற்றுக்களில் சிலவற்றை நாம் இந்நூலிலே விளக்கியுள்ளோம். இந்தியாவின் இந்த அக்கறையின்மையால் நாம் மிகப்பாதிப்படைந்துள்ளோம் எனவே தான் தனது பூகோள ரீதியான நலவுரிமைகளை பற்றி இந்தியா சரியாகவோ – தப்பாகவோ கொண்டுள்ள நிலைப்பாடுகளை எமது பிரச்சினையுடன் இணைத்ததனால் நமக்கு தீங்கு விழைந்துள்ளது என்று நாம் கூறவேண்டிய நிலையிலுள்ளோம்.

நியாய புத்தி படைத்த மக்களினதும் – உலக நாடுகளினதும் கண்களை திறக்கவும் குறிப்பாக இந்திய – இலங்கை அரசுக்களைச் சார்ந்தோர்களுக்கு ஈழத்தமிழரின் மிக அவலமான நிலையை எடுத்துக் காட்டவும் – இந்நூல் பயன்படுமானால் – இதை வெளியிடுவதன் மூலம் நாங்கள் நமது கடமையைச் செய்தவர்களாவோம்.

வாசகர்களிடமிருந்து இந்நூலைப் பற்றிய விமர்சனங்களை வரவேற்கிறோம்.

க. சிவாஜலிங்கசுந்தரம்
தலைவர்
தமிழ் ஈழம் மக்கள் மன்றம்

121, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
15-5-1988

# இலங்கையின் இனப்போராட்டமும் இந்திய — இலங்கை ஒப்பந்தமும்

இச்சிறு நூல் இரு பாகங்களைக் கொண்டுள்ளது. 1948-ல் இலங்கையின் ஆட்சி ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவருக்கு கைமாறியதைத் தொடர்ந்து சிங்களவர் தமிழர்களுக்கெதிராக மேற்கொண்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளினுல் தமிழர்கள் நடத்திய அரசியல் கிளர்ச்சிகளேயும் — ஈற்றில் 1619-ம் ஆண்டு போர்த்துக்கேயரினுல் அபகரிக்கப்பட்ட தமது பழைமையான தமிழ் ஈழ அரசை மீட்டெடுக்க வேண்டுமென்ற இலங்கைத் தமிழரின் முயற்சிகளேயும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியினேயும் அறிந்து இன்றைய நிலைமையை புரிந்து கொள்ளக்கூடியதாக சுருக்கமான வரலாற்றுப் பின்னணி முதற்பாகத்தில் இடம் பெறுகிறது. எனவே ஏற்கனவே வெளியாகிய பிறவெளியீடுகளிலும் காணப்படும் சில தகவல்கள் இங்கும் இடம் பெறுவது இயல்பானதும் - தவிர்க்க முடியாததுமாகும்.

1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 29ந் திகதி கைச்சாத்தான இந்திய — இலங்கை உடன்படிக்கை இரண்டாம் பாகத்தில் கருத்தூன்றி ஆராயப்பட்டுள்ளது. ''அனைத்து சர்வதேச சட்டங்களின் வரையறைகளுக்குள்ளும் அடங்கக்கூடியதான தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கு மாற்ருக கௌரவமானதும் செயல் சாத்தியமானதுமான ஒரு மாற்றுத்திட்டத்தை உத்தேச மாகாண சபைகள் அமைப்பினுல் வழங்க முடியுமா?'' என்ற கேள்விக்கு விடைகாணும் ஒரு முயற்சியாகவும் இரண்டாம் பாகம் அமைந்துள்ளது.

பாகம் I

## பழைய தமிழ் ஈழ அரசு
## சமய, வரலாற்று, புவியியல் பின்னணிகள்

தமிழர்களும் - சிங்களவரும் இலங்கையில் 2500 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். சிங்கள இனத்தை தோற்றுவித்தவ னெனக் கூறப்படும் விஜயனின் வருகைக்கு பின்பே இலங்கையில் நாகரிகம் வளரத் தொடங்கியதாக சிங்களவர் கூறுகின்றனர். ஆனால் நடுநிலை சிங்கள வரலாற்றாசிரியரான டாக்டர் போல் ஈ.பீரிஸ் என்பவர் விஜய னின் வருகைக்கு வெகுகாலத்துக்கு முன்பே இலங்கையில் ஐந்து சிவன் கோயில்கள் (ஈஸ்வரங்கள்) இருந்தது பற்றிக்குறிப்பிட்டுள்ளார். சிவன் தமிழ் இந்துக்களின் முதற்தெய்வம். இவ்வைந்தில் இரண்டு வடக்கே கீரிமலையிலும், மாதோட்டத்திலும் இருந்தன. ஒன்று மேற்கே சிலாபத்துக்குக் கிட்ட இருந்தது. ஒன்று கிழக்கே திரு கோணமலையிலும், மற்றையது தெற்கே தேவேந்திரமுனையிலும் இருந் தது. ஒரு தமிழ் சரித்திர குறிப்பேட்டின்படி திருகோணேசுவரம் கி. மு. 2589-ல் சோழ குலத்தைச்சார்ந்த குளக்கோட்டு மகராஜா வினல் கட்டுவிக்கப்பட்டது. மகாவம்சத்தின்படி கூட தமிழ் அரசனை எல்லாளனுடன் போரிடப் புறப்படுமுன் துட்டகைமுனு மன்னன் கதிர்காமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் வழிபட்டுள்ளான். மகா வம்சம் புத்தர்பிரான் ஒரு முறை இரு நாக (திராவிட) இளவரசர் களிடையே இரத்தினக்கல் பதிக்கப்பட்ட சிம்மாசனம் பற்றிய பிணக்கை தீர்த்து வைக்க இந்நாட்டிற்கு வந்ததாகக் கூறுகிறது. நிச்சயமாக இச் சிம்மாசனம் அக்காலத்தில் நிலவிய உயரிய நாகரீக நிலையை பிரதிபலிக்குமல்லவா?

கிரேக்க புவியியலாளரான தொலமியினல் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வரை படத்தின்படி தற்போதைய வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு, தெற்கு மாகாணங்களின் சில பகுதிகளை உள்ள டக்கியதான தமிழ் அரசு இருந்ததாகக் கொள்ளப்படுகிறது. இப்படம் கி. பி. 150-ம் ஆண்டளவில் வரையப்பட்டது. 1803-ம் ஆண்டு லண் டனில் அரோஸ்மித் என்பவரினல் தயாரிக்கப்பட்ட வரை படம் இந் நூலின் அட்டைப் படத்தில் இடம் பெறுகிறது. இப்படம் தமிழ் ஈழத்தையும் மேலை நாட்டு சிங்கள அரசு — கீழ் நாட்டுச் சிங்கள அரசு ஆகியவற்றையும் காட்டுகிறது. 1799-ம் ஆண்டு எழுதப்பட்ட கிளெ கோர்ன் குறிப்பின் பின்னணியில் இப்படத்தை கவனித்தால் படத்தின் உண்மையும் முக்கியத்துவமும் தெளிவாகத் தெரியும்.

கிளெகோர்ன் குறிப்பு வருமாறு கூறுகிறது: ''தீவின் ஆட்சியை இரு வெவ்வேருன தேசிய இனங்கள் மிகப்பழைய காலத்திலிருந்தே தங்களுக்குள் பிரித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக சிங்களவர்கள் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரை உள்ள நாட்டின் தெற்கு – மேற்குப் பகுதிகளிலும் அவற்றுடன் கூடிய உட்பகுதிகளிலும் வாழ்கிருர்கள். இரண்டாவதாக மலபார்கள் – இவர்கள் வடக்கு கிழக்கு பிராந்தியங்களை ஆட்சி செய்கிருர்கள். இவ்விரு தேசிய இனங்களும் தங்களின் மதம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் முற்றுக வேறு பட்டு இருக்கிருர்கள்''. (மலபார்கள் என்பது தமிழரை குறிக்கும் சொல்)

## பிரித்தானிய குடியேற்ற அரசு இலங்கையை இணைத்தது

இம்மூன்று அரசுகளும் வெவ்வேருகவே 1833 வரை நிர்வகிக்கப் பட்டு வந்தன. இவ்வாண்டிலே தான் இவை ஒன்ருக இணைக்கப்பட்டு ஒரே ஆட்சியின் கீழ் முழுத்தீவும் கொண்டு வரப்பட்டது. யாழ்ப் பாணத்தை தலைநகராகக் கொண்ட தமிழ் அரசு 1619-ல் போர்த்துக் கேயரால் வெற்றி கொள்ளப்பட்டது. அதன் கடைசி அரசன் சங்கிலியன்.

பிரித்தானிய குடியேற்ற அரசு ஆரம்பத்தில் தமிழர்களுக்கு சலுகைகளை வழங்கிக்கொண்டு வந்தது. ஆயினும் படிப்படியாக சிங்க ளவர் சார்பாகச் செயற்படத் தொடங்கியது. இதற்கான காரணம் முதலாம் உலக யுத்தத்திற்குப் பின் இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய விடுதலை இயக்கத்தினுல் இலங்கைத் தமிழர்களிடையே தோன்றிய தேசிய உணர்வை பிரிட்டிஷ் குடியேற்ற அரசு விரும்பா தமையே. இந்தியாவில் ''வெள்ளையனே வெளியேறு'' என்ற இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே உள்ளூர் சிங்கள அரசியல் வாதிகள் பிரித்தானிய அரசின் யுத்த முயற்சிகளுக்கு தமது முழுமன தான ஆதரவை நல்கி வந்தனர்.

## சிங்கள இனவாதத்தின் தோற்றமும் சர்வ சிங்கள அமைச்சர் சபையும்

டொனமூர் அரசியல் அமைப்பின் படிக்கு 1931-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட அரச சபை உறுப்பினர்கள் ஏழு நிர்வாகக் குழுவினரா கப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் இருந்தார். இவரே சம்பந்தப்பட்ட குழுவின் விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராவார். 1936-ல் இருந்து 1947 பொதுத்தேர்தல் வரை 1942-ல் நியமிக்கப்பட்ட ஒரு தமிழரைத்தவிர – மந்திரிசபை முழுமை யாக சிங்களவரையே கொண்டதாயிருந்தது. இலங்கைக்கு 1948

பெப்ரவரி 4-ம் திகதி சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் "டொமினியன் அந்தஸ்து" வழங்கப்பட்டது. சோல்பரி அரசியல் யாப்பின் 29-ம் பிரிவின்படி வெவ்வேறு இன - மத சமூகங்களிடையே பாகுபாடு காட்டக்கூடிய சட்டங்கள் இயற்றப்படமுடியாது. இப்பிரிவு அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்படமுடியாத ஒரு பிரிவாக இடம்பெற்றது.

## தமிழர்களுக்கெதிரான முதலாவது அடி — அரச உதவியுடனான குடியேற்றத் திட்டங்கள்

இலங்கைக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட முன்னரேயே தமிழ் மக்களை அவர்கள் தாயகத்திலேயே முக்கியமாக திருக்கோணமலையிலே சிறுபான்மையினராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படதொடங்கி விட்டன. இத்திட்டத்தின் சூத்திரதாரி திரு. டி. எஸ். சேனநாயகா. சுதந்திரத்திற்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா குடியேற்றத்திட்டத்தின் விளைவாக அம்பாறை என்ற சிங்களத் தேர்தல் தொகுதியும் அதே பெயரைக் கொண்ட மாவட்டமும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டன திருகோணமலையை சுற்றி நிறுவப்பட்ட சிங்களக் குடியேற்ற திட்டங்களை ஒன்றிணைத்து அங்கு சேருவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

## இரண்டாவது அடி - மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமை பறிப்பு

இரண்டாவது அடி மலைநாட்டுத் தொழிலாளர்களை குறி வைத்தது. 1948-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவர்கள் தங்களுள் ஏழு பிரதிநிதிகளை தெரிவு செய்தனர். அத்துடன் மேலும் 15 தொகுதிகளின் முடிவுகளில் அவர்கள் பங்கு முக்கியமானதாக அமைந்தது. சிங்களவரின் ஆதிக்கம் கொண்ட பாராளுமன்றம் 1947-ல் தெரிவான ஒரு வருடத்துக்குள் 1948-ம் ஆண்டில் இலங்கை குடியுரிமைச் சட்டத்தையும் 1949-ம் ஆண்டு இலங்கை (பாராளுமன்ற தேர்தல்) திருத்தச் சட்டத்தையும் நிறைவேற்றி மலைநாட்டுத் தமிழரை குடியுரிமையற்றவர்களாகவும் வாக்குரிமையற்றவர்களாகவும் செய்தது. இருந்தும் இவ்விதம் குடியுரிமை வாக்குரிமை இழந்தவர்களும் கணக்கில் எடுக்கப்பட்டு பாராளுமன்றத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் அவர்களுக்கோ வாக்குரிமை இல்லை. சிங்களவர்களே அவ்விடங்களுக்கு தெரிவானார்கள். தமிழர்களின் எண்ணிக்கை சிங்களவருக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக கணக்கிலெடுக்கப்பட்டது. இதன் பலனாக 74% வீதத்தினரான சிங்களவருக்கு பாராளுமன்றத்தில் 84% இடங்கள் கிடைக்கப்பெற்றன. தமிழரின் பாராளுமன்றப்பலம் 50 சத வீதத்தால் குறைந்தது.

## தமிழரசுக்கட்சியின் உதயம்

மேலே சொல்லப்பட்டுள்ள மலைநாட்டுத் தமிழருக்கெதிரான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்த ஒரு பகுதியினர் இலங்கை தமிழரசுக் கட்சியை நிறுவினர். இக்கட்சியின் நோக்கம் கூட்டாட்சியின் கட்டமைப்புக்குள் சுய ஆட்சி கொண்ட தமிழரசை நிறுவுவதாகவிருந்தது.

## மூன்றாவது அடி சிங்களம் மட்டும் சட்டம்

தமிழர்களுக்கு விழுந்த அடுத்த பெரிய அடி 1956-ல் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் என்ற சட்டமாகும். இச்சட்டத்தின் தந்தை காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா எனக்கருதப்பட்ட போதும் – இன்றைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன சார்ந்திருந்த ஐ தே. கட்சி 1944-ல் அரச சபையாலும் அக்கட்சியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதான தமிழ் - சிங்கள மொழிகளின் சமநிலைக் கொள்கையை கைவிட்டு 1956 பொதுத் தேர்தலின் போது சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை தேர்தல் பிரகடனமாகக் கொண்டு பிரசாரம் செய்தது என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

## குறைந்து வந்த தொழில் வாய்ப்புக்கள்

சிங்களம் மட்டும் சட்டமும் – இனவாத அரசும் நிலை கொண்டதைத் தொடர்ந்து – நியாய புத்தி அறவே கைவிடப்பட்டது. தமிழர்கள் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் பாகுபடுத்தப்பட்டதுடன் தமிழர் தாயகமும் பாகுபாட்டுக்குள்ளாகியது. தொழில் வாய்ப்புக்கள் குறைந்தன. தொழில் வாய்ப்புக்களுக்கு திறமை கணிக்கப்படாமல் அரசியல் ஆதரவே கவனிக்கப்பட்டது. 1956க்குப் பின் அரசினால் நிறுவப்பட்ட பல்வேறு கூட்டுத்தாபனங்களில் (ஒன்றியங்கள், ஒரு சிறு பகுதியினரே தமிழர். 1977க்குப் பின் சுமார் 500,000 பேர் இத்தகைய கூட்டுத்தாபனங்களில் (ஒன்றியங்களில்) வேலை வாய்ப்புப்பெற்றனர். இவர்களில் 2 சதவிகிதத்தினரே தமிழர். ஜி. சீ. ஈ. (உயர்தர) சோதனை சித்தியடைந்தவர்களிடையே நிலவும் வேலை இன்மையை எடுத்துக் கொண்டால் தமிழர்களில் 41% ஆக இருக்கையில் சிங்களவரில் 29% ஆகவே உள்ளது.

## இறுதி அடி — பல்கலைக்கழக தெரிவுக்கு மொழி வாரியான தரப்படுத்தலும் — தீவிர வாதக்குழுக்களின் தோற்றமும்

1970-ம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி பெறுவதில் ''தரப்படுத்தல்'' என்ற முறைகேடு புகுத்தப்பட்டது. இத்தரப்படுத்

தல் முறையின் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கோரும் தமிழ் மாணவர் சிங்கள மாணவரிலும் பார்க்க கூடுதலான புள்ளிகளை சோதனையில் பெறவேண்டியிருந்தது. இது தமிழ் மக்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட பாரிய அடியாகும். உதாரணமாக, 1970-ம் ஆண்டில் தெரிவான சுதந்திரக்கட்சி – இடதுசாரிக் கூட்டணி கொண்டு வந்த திட்டத்தின்படி 1969-ம் ஆண்டு சோதனையின் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் குறைந்தது 250 புள்ளிகளாகுதல் பெற வேண்டுமென்று விதிக்கப்பட்ட அதேவேளை இது சிங்கள மாணவருக்கு 227 ஆகக் குறைக்கப்பட்டது. அதே போன்று மருத்துவ பீடத் தெரிவுக்கு தமிழருக்கு 250 ஆகவும் சிங்கள மாணவருக்கு 229 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவருக்கு இழைக்கப்பட்ட கொடுமை மாணவர் மன்றம் - பின் இளைஞர் மன்றம் ஈற்றில் தீவிரவாதக் குழுக்கள் என்பன தோன்றக் காரணமாயிருந்தன. ஒரு காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட தீவிர வாதக்குழுக்கள் இயங்கியதாக அறியக்கிடக்கிறது. நாளாவட்டத்தில் சில குழுக்கள் மங்கி மறைய இறுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகப் பலம் வாய்ந்ததாகவும் இன்று பெரும்பான்மையான தமிழ் மக்களால் தமது தாயகத்தின் விடுதலைப் போராட்ட வீரர் குழுவாகவும் கருதப் பட்டு இயங்கி வருகிறது.

## தமிழ் ஈழத்திற்கான முதற்குரல்

தமிழ் ஈழத்துக்கான முதற்குரலைக் கொடுத்தவர் முன்பு டீ. எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் அமைச்சராயிருந்தவரும் முன்னாள் பேராசிரியருமான திரு. செ. சுந்தரலிங்கம் ஆவார். சிங்களத் தலைவர்களை நம்பி தான் மோசம்போனதாக அவர் பல தடவைகளில் கூறியுள்ளார். அவர் அமைத்த ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி அரசியல் செல்வாக்குப் பெறவில்லை அடுத்து திரு. சுந்தரலிங்கத்தையே தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஈழத் தமிழர் விடுதலை இயக்கமும் மக்களிடையே செல்வாக்குப் பெறவில்லை.

## தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி

தமிழரசுக்கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. வி. நவரத்தினம் தமிழர் சுயாட்சி கழகத்தை 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் தொடங்கினர். புதிய கழகம் இளைஞர்களிடையே சிறிது ஆதரவைப் பெறும் நிலையை அடைந்து கொண்டிருந்தது. தமிழரசுக்கட்சியும் ஈற்றில் சுதந்திரமான தமிழ் ஈழக்கொள்கையின் பால் சென்றது. இறுதியில் தமிழரசுக்கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் ஒரு பகுதியினரும் சேர்ந்து தமிழர் ஐக்கிய முன்னணியை அமைத்தனர். இதுவே பின்பு 1972-ல்

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக உருவெடுத்தது. வங்காள தேசத்து விடுதலைப்போர் இக்கூட்டணி உருவாவதற்கான மன உற்சாகத்தை அளித்தது.

## 1977-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் ஈழத்திற்கான மக்கள் ஆணை

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கமைய, ''ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமும் சுயாதிக்கமும் கொண்ட மதச்சார்பற்ற சோஷலிச தமிழ் ஈழ அரசை மீட்டெடுக்கவும் – கட்டியமைக்கவும்'' 1977-ல் நடைபெற்ற தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ மக்களின் ஆணையைக் கோரியது. மக்களும் கூட்டணிக்கு அவ்வாணையை வழங்கினர். ஆனால் கூட்டணியின் தலைமைப்பீடத்தின் தமிழ் ஈழ ஆர்வம் பொதுத்தேர்தலின் பின் குறையத்தொடங்கியது. சிங்கள அடக்குமுறைகளை தடுத்து நிறுத்துவதில் தமிழ் அரசியல் தலைவர்கள் செயலிழந்த சூழ்நிலையில் தீவிரவாத இயக்கங்கள் 1970-ம் ஆண்டுகள் மட்டில் தலைதூக்கின. 1977-ம் ஆண்டின் வன்முறைகளுக்குப் பின் இவ்வியக்கங்கள் ஓரளவு செல்வாக்குப் பெறத்தொடங்கின. 1983 ஜூலை மாதத்தில் திருநெல்வேலியில் ரோந்து வந்த இலங்கை இராணுவத்தை மறைந்திருந்து தாக்கிய நிகழ்ச்சியைத் தொடர்ந்தும் 1983-ம் ஆண்டின் இன வன்செயல்களை தொடர்ந்தும் இவ்வியக்கங்கள் மக்களிடையே கூடுதலாக அறிமுகப்படத் தொடங்கின.

## பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் – 1957

இக்கால நிகழ்ச்சிகளுக்கு வர முன்பு தமிழ்த் தலைவர்களினால் அஹிம்சை முறையில் தமிழர்களின் கோரிக்கைகளைப் பெற பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம். பிரதேச சபைகளை அமைத்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சில அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி ஐக்கிய தேசியக்கட்சியின் தீவிர எதிர்ப்பினால் தோற்கடிக்கப்பட்டது. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ்வெதிர்ப்பியக்கத்திற்கு தலைமை தாங்கி இடையில் குழம்பிய பிரசித்தி பெற்ற கண்டிப்பாத யாத்திரையை மேற்கொண்டார்.

## டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் – 1965

1965-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது ஐ.தே. கட்சியோ சிறீ லங்கா சுதந்திரக்கட்சி – சமசமாசக்கட்சியின் கூட்டோ பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. திரு.

ஜே. ஆர். ஜெயவர்தனவும் திரு. டட்லி சேனநாயகாவும் தமிழரசுக் கட்சியினருடன் பேரம்பேசி ஒரு இணக்கத்திற்கு வந்தார்கள். இதுவே டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தமானது. இவ்வொப்பந்தத்தின்படி தமிழ்மொழி சம்பந்தமான சலுகைகளும் - குடியேற்றப் பிரச்சினையில் தமிழரசுக்கட்சியின் கோரிக்கையும், மாவட்ட சபை அமைப்புக்கள் மூலம் அதிகாரப்பரவலாக்கமும் செய்வதென ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் பௌத்த துறவிகளினதும் - சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் எதிர்ப்பு கடுமையாயிருந்தது. ஈற்றில் செயற்படுத்தப் படாத தமிழ்மொழி உபயோகம் சம்பந்தமான சில விதிகளை நிறைவேற்றியதைத் தவிர அரசாங்கம் ஒப்பந்தத்தின் இதர பாகங்களை அமுல் நடத்தத்தவறியது. தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## இனவிரோத வன்செயல்கள்

1948-ல் இலங்கை சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து அதன் அரசியல் வரலாற்றைக் கவனித்தால் சிங்கள கட்சிகளின் நோக்கமும் செயலும் இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக்கவேண்டும் என்பதே என்பது தெளிவாகும். இக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் அஹிம்சை வழியிலும் பாராளுமன்ற மூலமும் தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளையாவது பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகளும் பயனளிக்காமற் போனதை இக்கால கட்டத்தின் வரலாறு காட்டுகிறது. அது மட்டுமன்றி தமிழ் தலைவர்களின் இம்முயற்சிகளுக்கு மறுமொழியாக தமிழினத்தின் மீது பயங்கர வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்வகையில் 1956, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கெதிரான பயங்கர வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1956, 1958, 1977-ல் வன்முறை வெடித்தபோது தென் இலங்கையிலிருந்த தமிழர் தமது வடக்கு கிழக்கு தாயகத்திற்கு தப்பி ஓடக்கூடியதாகவிருந்தது. ஆனால் 1977க்குப் பின்னர் தமிழ் ஈழத்திலும் நிறுத்தி வைக்கப்பட்ட சிங்கள அரச படைகளின் அட்டூழியங்களின் காரணமாக பல தமிழ் மக்கள் நாட்டை விட்டே ஓட வேண்டி வந்தது. பலர் அகதிகளாக இந்தியா மற்றும் நாடுகளுக்கு ஓடிச்சென்றுள்ளார்கள். இந்நிலையில் தமிழ் இளைஞர்கள் உலகின் பல பகுதிகளிலும் நிகழ்ந்து வரும் விடுதலைப் போராட்டங்களினால் உந்தப்பட்டு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து தங்கள் மூதாதையரின் சொத்தான தமிழ் ஈழ அரசை மீட்டுப்பெற தங்கள் இன்னுயிரைக்கூட தியாகம் செய்ய முன்வந்தது ஒன்றும் வியப்பானதல்ல.

## மார்க்சீய கட்சிகளின் காட்டிக்கொடுப்பும் தமிழ் தொழிற் சங்கங்களின் தோற்றமும்

இலங்கையில் இயங்கும் மார்க்சீய கட்சிகளின் செயற்பாடும் கவனிக்கத்தக்கது இலங்கை கொம்யூனிஸ்ற் கட்சி (மாஸ்கோ சார்பு) லங்கா சமசமாஜக்கட்சி (டிராட்ஸ்கீய கட்சி) ஆகிய இரண்டும் குடியுரிமை சட்டம், தனிச்சிங்களச் சட்டம் ஆகியவற்றை பாராளுமன்றத்தில் எதிர்த்தன. அதுமட்டுமல்லாது 1960-ம் ஆண்டுத் தேர்தலின் போது ஒரு வானொலிப் பேச்சில் கொம்யூனிஸ்ற் கட்சியின் செயலாளர் திரு. கெனமன் ஒரு படி முன்னேறி இலங்கையில் இரு தேசிய இனங்கள், அதாவது சிங்களத் தேசிய இனமும் தமிழ் தேசிய இனமும் இருப்பதை ஏற்கும் ஒரேயொரு தேசியக் கட்சி இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி தான் என்றும் கூறியதையும் நினைவு கூரவேண்டும். காலப் போக்கில் இக் கட்சிகள் தங்கள் கொள்கையைக் கோட்டைவிட்டு போக்கையும் மாற்றிக் கொண்டன. அவற்றின் கட்டுப்பாட்டிலிருந்த தொழிற் சங்கங்கள் கூட இக்கட்சிகளின் கொள்கை மாற்றத்தைக் கடைப்பிடித் தமையால் தமிழ் உறுப்பினர்களுக்கு மொழி காரணமாக இடர் ஏற்பட்ட பொழுது அவற்றின் தமிழ் உறுப்பினர்களைக் கைகழுவி விட்டன. இதனுல் தமிழ் தொழிற் சங்கங்கள் உருவாகின. 1961-ம் ஆண்டு நடுப்பகுதியில் முதலாவது தமிழ் தொழிற்சங்கமான அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தோன்றியது. இச்சங்கம் அதன் உறுப்பினர் ஒருவரான திரு. செ. கோடீஸ்வரன் – தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து ஒரு வழக்கு வைக்கவேண்டுமென முடிவு செய்து அதன்படி அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நடத்தியது. இவ் வழக்கில் முக்கியமாக 1956 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் சோல்பரி அரசியல் யாப்பின் 29-ம் பிரிவிற்கு முரணானது என்று வாதாடப்பட்டது. இவ்வழக்கில் அரசாங்கம் தோல்வி கண்டபோதிலும் - தனது சட்டம் இயற்றும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து நிலைமையை சமாளித்துவிட்டது.

## 1972-ம் ஆண்டின் அரசியல் யாப்பு — தமிழர் பங்களிப் பற்றது

1970-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்றது. இம்முன்னணியில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ற் கட்சி ஆகியன இடம் பெற்றன. 1970-ம் ஆண்டு தெரிவான தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையில் தமிழ் மொழியையும் ஒரு அரசகரும மொழியாக்க வேண்டுமென்ற திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தனர். இத்திருத்தத் தீர்மானம் தோல்வியுற்றதைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள்

அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைகளில் மேற்கொண்டு பங்கெடுக்கா திருந்தனர். எனவே தமிழர் பங்கேற்காமலேயே 1972-ம் ஆண்டின் அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டது. இவ்வியாப்பின்படி இலங்கை ஒற்றை ஆட்சிக் குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது. பல்வேறு மதத்தினர் வாழும் இலங்கையில் பெரும்பான்மையினரின் மதமான பௌத்தத்திற்கு "உரிய" இடம் அளிக்கப்பட்டு அம்மதத்தை பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரச கடமையாக்கப்பட்டது. தமிழர்களுக்கு ஓரளவு பாதுகாப்பளிக்கக்கூடியதான 29-ம் பிரிவை உள்ளடக்கிய சோல்பரி அரசியல் திட்டம் நீக்கப்பட்டது. அது மட்டுமல்லாது குறித்த 29-ம் பிரிவை 1956-ம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் மீறியதாகக் கூறி வெற்றிகரமாக நடத்தப்பெற்று வந்த கோடீஸ்வரன் வழக்கை கேலி செய்வதைப் போல சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் யாப்பிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டது! முன்பு இருந்து வந்த பாராளு மன்ற மேலவை ஒழிக்கப்பட்டது. கோமுகச் சபைக்கான மேன்முறையீட்டு உரித்தும் நீக்கப்பட்டது. இவ்வரசாங்கத்தின் காலத்திலேயே பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியில் விஷமத்தனமான மொழிவாரி தரப்படுத்தல் புகுத்தப்பட்டது. இத்தனை கொடுமைகளையும் நிறைவேற்றிய அவ்வரசிலே மார்க்சீய கட்சிகளும் இருந்தன. இக்கட்சிகள் கடைசி வரை நிலைத்திருக்க முடியவில்லை. அவை சிறீ ல. சு. கட்சியின் வலதுசாரிப் போக்கினரால் "உதைத்து வெளியேற்றப்பட்டது" வேறு விடயம்.

## ஐ. தே. கட்சியின் வட்டமேசை மாநாட்டு உறுதிமொழி

1977-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசீயக் கட்சி மிகப்பெ மளவு வெற்றி பெற்றது. இடதுசாரிகள் மிகவும் வெட்கப்படக்கூடிய வகையில் தோற்றுப்போனார்கள். ஐ. தே. கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலே கல்வி, குடியேற்றத் திட்டங்கள், தமிழ்மொழி உபயோகம், அரச மற்றும் அரச கூட்டுத் தாபனங்களில் தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களில் தமிழர் களுக்கு இருந்த குறைபாடுகளை ஆராய சகல கட்சிகளினதும் வட்ட மேசை மாநாடு ஒன்றை கூட்டுவதாகவும் அம்மாநாட்டில் எடுக்கப் படும் முடிவுகளை அமுல் செய்வதாகவும் வாக்குறுதி அளித்திருந்தது. இவ்வாக்குறுதியின் காரணமாக வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் ஐ. தே. க. விற்கு பெருமளவில் வாக்களித்தனர் என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஆயினும் சிங்கள அரசியல் தலைவர்களின் பாரம்பரியத்திற்கு அமைய தமிழர்களுக்குக் கொடுத்த இந்த வாக் குறுதியும் விரைவிலே மறக்கப்பட்டது. வட்டமேசை மாநாட்டை எதிர்பார்த்திருந்த தமிழர்களுக்கெதிராக 1977 வன்முறை கட்ட விழுத்துவிடப்பட்டது. ஆட்சிப்பீடமேறிவிட்ட திரு. ஜெயவர்தன "அமைதி வேண்டுமெனில் அமைதி - போர் வேண்டுமெனில் போர்" என்று போர் முழக்கம் செய்தார்.

1978-ன் யாப்பும் தமிழர் பங்கேற்காமல் நிறைவேற்றப் பட்டதே.

தற்போதைய ஐ. தே. க. அரசு 1978-ல் ஒரு புதிய அரசியல் யாப்பை அமைத்தது. இதன் ஆக்கத்திலும் தமிழரின் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகளில் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் கலந்து கொள்ள வில்லை. இந்த ஒருவர் மிகச்சிறிய பெரும்பான்மை வாக்குகளைத்தான் பெற்ருர் என்பதுடன் அவர் வெற்றி பெற்ற தொகுதியில் சிங்கள வாக்காளரும் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. புதிய யாப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி முறைக்கு இடம் கொடுக் கப்பட்டுள்ளது. திரு. ஜெயவர்த்தன இந்த யாப்பை தனித்துவம் வாய்ந் தது என்று கூறியுள்ளார். ஒருவகையில் இது தனித்துவம் வாய்ந்தது தான். ஒரு அரசியல் தலைவரான ஜனதிபதி பாராளுமன்றத்திற்கு வெளியே ஒருவருக்கு மானநட்டம் ஏற்படும் விதத்தில் பேசினல் கூட ஜனதிபதியை நீதிமன்றின் முன் நிறுத்த முடியாது. இத்தகைய பயங் கர அதிகாரங்களை ஒருவருக்கு வழங்கியுள்ள ''ஜனநாயக'' யாப்பு ஒரு வகையில் பார்த்தால் ''தனித்துவம்'' வாய்ந்ததே.

தமிழரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ மறைவு

1983 ஜூலையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழினக் கொலையின் போது பல இடங்களில் அரச ஆயுதப்படையும் பொலிஸ் படையும் காடையர்களுடன் இணைந்து தமிழர்களையும் அவர்கள் உடமைகளையும் தாக்கினர்கள். சில தினங்கள் மௌனமாகவிருந்த ஜனதிபதி ஜெய வர்த்தன தமது மௌனத்தை கலைத்து சிங்களவர்களுக்கு உற்சாகமூட் டப் பேசினர். தனிநாடு கோருவதை அரசியல் யாப்பின் மூலம் தடை செய்யப் போவதாகக் கூறினர். பேரிழப்படைந்த தமிழருக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூறவில்லை. அவ்வாறே அரசியல் யாப்பிற்கு திருத்தம் கொண்டு வந்தார். திருத்தத்திற்கு விசுவாசப் பிரமாணம் எடுக்காத பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி வகிக்கமுடியாது. ஒரு துரோகியையும் – இன்னெரு துரோகியின் இடத்திற்கு நியமிக்கப் பட்ட துரோகியையும் தவிர ஏனைய தமிழ் உறுப்பினர் விசுவாசப் பிரமாணம் எடுக்கவில்லை. அதனல் இன்று இலங்கைப் பாராளுமன் றத்தில் தமிழருக்கிடமில்லை. பல நூற்றுண்டுகளாக இத்தீவிலே தமக்குச் சொந்தமான சுதந்திர அரசை நடத்தி வந்த தமிழர்கள் இன்று அவர்களின் பிரதிநிதிகள் கூட இடம்பெருத ஒரு பாராளு மன்றத்திலே அவர்கள் பெயராலும் ஆக்கப்படும் சட்டங்களினல் ஆளப்படுகிருர்கள் என்று சொல்வதிலும் பார்க்க அழிக்கப்படுகிருர் என்று சொல்வது பொருந்தும்.

பகுதி II

# 1987 ஜூலை 29-ந் திகதிய இந்திய — இலங்கை உடன்படிக்கை — இனமோதல்களுக்கு இது ஒரு நீண்ட காலத்தீர்வைத் தரமுடியுமா?

## ஒப்பந்தத்தை வரவேற்கும் உலகம் – வாசகர்கள் முடிவுக்கு வரவேண்டும்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது. ருஷ்யா வரவேற்றுள்ளது. ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் வரவேற்றுள்ளன. இங்கிலாந்து வரவேற்றுள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள மார்க்சீய கட்சிகள் வரவேற்றுள்ளன. ஜனாதிபதி ஜயவர்தன இதைக்கூறி ஏனைய ''பயங்கரவாதக் குழுக்களும்'' ஏற்றுக்கொண்டுள்ள ஒப்பந்தத்தை தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் மட்டும் ஏன் ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை என்பது தனக்கு விளங்கவில்லை எனப் பிரலாபித்துள்ளார். ஜனாதிபதியின் இக்கூற்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இலட்சியப் பிடிக்கும் - மக்களை ஈர்க்கும் வல்லமையும் மலை புரண்டாலும் மனங்கலங்காத இதயமும் கொண்ட அவ்வியக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் கொடுக்கப்பட்ட — மனதால் விரும்பாத — புகழாரமா என்பதையும் ஈழத் தமிழரைப் பொறுத்தமட்டில் இவ்வொப்பந்தம் உண்மையில் வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்பதையும் இந்நூலைப் படித்த பின் வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

## ஒப்பந்தம் – ஒரு சாராரின் சம்மதமில்லாத திருமணம்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவரின் சம்மதமின்றியே இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு கைச்சாத்தானது. கொழும்பில் இவ்வொப்பந்தம் கைச்சாத்தானவுடன் இந்தியப்பிரதமர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த ஒப்பந்தம் ஒரு சாராரின் சம்மதம் இன்றி செய்யப்படும் திருமணம் என்று வர்ணித்தார். மேலும் அவர் அம்மாநாட்டில் ஒப்பந்தத்தில் காணப்படும் திட்டங்கள் சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவருடன் இறுதி இணக்கம் எதுவும் காணப்படவில்லை என்றும் ஆனால் அவர்கள் (புலிகள்) தங்களுடன் ஒத்துவருவார்கள் எனத்தான் நினைப்பதாகவும் கூறியிருந்தார். இந்தியப்பிரதமரின் இக்கூற்றுக்கு மாறாக அவர் பிற்பட்ட காலங்களில் வேறுவிதமாகக் கூறியிருந்தாலும் – மேலே அவரால் கூறப்பட்டவை ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் வெளியிடப்பட்டவை என்பதையும் உலகமும் இதை தெரிந்து வைத்திருக்கிறது என்பதும் வெளிப்படை.

1985 ஜூலை - ஆகஸ்டு மாதங்களில் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது சகல போராளிக்குழுக்களும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் கலந்து கொண்டு நான்கு அடிப்படை கோரிக்கைகளை கூட்டாக முன் வைத்தன. அவையாவன:-

1) தமிழர்கள் ஒரு தனித்தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
2) வடக்குகிழக்கு மாகாணங்கள் அவர்களின் மரபுவழித் தாயகமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
3) தமிழர்களுக்குரியதான சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
4) இலங்கையில் வாழும் சகல தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்கப்படல் வேண்டும்.

மேற்படி திம்பு பேச்சுவார்த்தையின் போது பங்கேற்றதைத்தவிர தற்போதைய இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாகுவதில் முடிவடையக் காரணமாயிருந்த வேறு எந்தப் பேச்சு வார்த்தைகளிலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இலங்கை – இந்திய அரசுகளுக்குமிடையே பேச்சு வார்த்தை நடந்ததுண்டு. ஆகையினால் தற்போதைய உடன்பாட்டில் காணப்படும் குறைபாடுகளுக்கு இந்திய அரசும் – தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுமே பொறுப்பேற்க வேண்டும். இதை விடுத்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை நிறுத்தவும் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் ஒரு முன் நிபந்தனையாக புலிகள் இயக்கம் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்தியா கேட்பதற்கு எதுவித தார்மீக உரிமையும் இந்தியாவிற்குக் கிடையாது. தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இன்னொருவர் — புலிகள் — ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தவறின் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை தொடர்வோம் என்றும் கூறவும் எந்த அரசியல் அறமும் இடமளிப்பதில்லை. புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் சார்புப் பாதிப்பு தமிழ் மக்களின் அழிவு என்பதை நாம் மறந்து விடமுடியாது.

## ஒப்பந்தத்தின் மூன்று நோக்கங்கள்

1) இனப்பிரச்சினைக்கு நீதியானதும் நியாயமானதுமான தீர்வு காணல்
2) இந்தியாவின் பூகோள - அரசியல் நலவுரிமை பேணல்
3) தீவிரவாத இளைஞர்களின் மறுவாழ்வு

இவை மூன்றுமே ஒப்பந்தத்தின் நோக்கங்களென இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சென்னையில் நடை

பெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்ததாக சென்னை வானொலி அறிவித்திருந்தது.

இவ்வொப்பந்தம் கீழ்க்கண்டனவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது என இந்தியப் பாராளுமன்றத்தில் ஒப்பந்தத்தை தாக்கல் செய்து பேசும் பொழுது இந்தியப் பிரதமர் கூறியதாக ஒரு தமிழ் வெளியீடு செய்தி வெளியிட்டிருந்தது. அவை:

1) ஒரு தனிச்சிறப்பு மிக்க இனமாக ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் என்ற தமிழர்களின் போராட்டத்தின் அடிப்படை ஆவலை நிறைவேற்றுவது.
2) அவர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்வகிக்கும் வகையில் அரசியல் சுய ஆட்சி வழங்குதல்.
3) இந்த குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவையான அரச சக்தி வ்ழங்குதல்
4) இலங்கையின் வடக்கு மற்றக் கிழக்குப் பகுதிகளை தமிழரின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த இடமாக அறிவித்தல்
5) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் தமிழை ஒரு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளுதல்

ஆனல் ஒப்பந்தத்திலே தெற்றெனத் தெரியும் குறைபாடுகளையும் எந்த அளவிற்கு மேற்கூறப்பட்ட ஐந்து விடயங்களும் அடங்கியுள்ளன என்பதையும் கீழ்க்கண்ட தலைப்புக்களில் ஆராயலாம்.

(அ) நிலம் — அதாவது தமிழர்களின் தாயகம்
(ஆ) சட்டமும் ஒழுங்கும் பேணும் சாதனங்கள்
(இ) மொழி உரிமைகள்
(ஈ) மாகாண சபை அமைப்பு
(உ) ஆளுநரும் அவரின் அதிகாரங்களும்
(ஊ) மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட விருக்கும் அதிகாரங்கள்
(எ) இடைக்கால நிர்வாகம்

## (அ) நிலம் — அதாவது தமிழர்களின் தாயகம்

## இது சிங்களவரினுல் எவ்விதம் தமிழர்களிடமிருந்து சூறையாடப்படுகிறது.

மக்கள் சமூகம் ஒன்று ஒரு தேசிய இனமாகக் கருதப்படுவதற்கு அவர்களுக்கென வரையறுக்கப்பட்ட நிலப் பிரதேசம் வேண்டும். இஸ்ரேல் உருவாக்கப்படுவ்தற்கு முன் யூதர்களுக்கு இத்தகைய நிலம்

இல்லாதிருந்தமையே "அலைந்து திரியும் யூதர்களை ஒரு தேசிய இனமாக ஏற்க முடியாது" என்று ருஷியத் தலைவர் ஸ்டாலினைக் கூற வைத்தது. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே சிங்களவரின் அரசியல் யுக்தி தமிழர் நிலங்களை - தாயகத்தை - கொள்ளையிட்டு அவர்களை அவர்களின் சொந்த நிலத்திலேயே சிறுபான்மையினராக்கி - முன்பு தென் இலங்கையின் சில பாகங்களில் சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்களவராக மாற்றப்பட்டதைப்போல அனைத்து தமிழர்களையும் சிங்களவராக்கி இந்நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கே உரியதாக்க வேண்டும் என்ற நோக்கை அடைவதையே குறியாகக் கொண்டிருந்தது.

சிங்களவரின் இந்த யுக்தி கீழ்க்கண்ட வழி வகைகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது:-

1) தமிழ் நிலத்திலுள்ள நீர்ப்பாசன திட்டங்களில் ஏனைய ஏழு மாகாணங்களிலும் இருந்து சிங்கள கிராமவாசிகளைக் கொண்டு வந்து குடியமர்த்தல்
2) தமிழர் தாயகத்திலுள்ள அரச காணிகளில் வெளியூர் சிங்களவரை வலோத்காரமாக குடியேற ஊக்குவித்தல்
3) தமிழர் பிரதேசக் கரையோரங்களில் வெளியூர் சிங்கள மீனவரை குடியமர்த்தல்
4) தமிழர் பகுதியில் நிறுவப்பட்டுள்ள அரச கூட்டுநிறுவனங்களில் வெளியூர் சிங்களவருக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களைக் குடியமர்த்தல்
5) தமிழ் நிலத்தில் காடுகளால் மூடப்பட்டுள்ள பௌத்த விகாரைகளை மீட்டெடுத்து அவற்றைச் சுற்றி சிங்கள பௌத்தரை குடியமர்த்தல்

## டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தம் — குடியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி.

தமிழ்நாடு பிடி படலத்தின் முக்கிய முனையாக மேலே முதலில் குறிப்பிட்ட நீர்ப்பாசன குடியேற்றத்திட்டங்கள் அமைந்தன. அதனுல் இவ்விசயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் மிகக்கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ்வொப்பம் நிறைவேறியதில் முக்கிய பங்களிப்புச் செய்தவர் தற்போதைய ஜனுதிபதி திரு. ஜெயவர்தனு. அவ்வொப்பந்தத்தில் கீழ்க்கண்ட உடன்பாடு இடம் பெற்றது:-

''காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்வரும் காணிகளில் வழங்கப் படும் காணித்துண்டுகளைப் பெறும் உரிமை இலங்கை குடிமக்களுக்கு கிடைக்கக் கூடியதாக காணி அபிவிருத்திச் சட்டம் திருத்தப்படும். குடியேற்றத்திட்டங்களின் கீழ் காணிகள் வழங்கப்படுகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கீழ்க்கண்ட முன்னுரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதை திரு. சேனநாயகா மேலும் ஏற்றுக்கொண்டார்.

அ) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் முதற்கண் அம் மாவட்டத்தில் உள்ள காணியற்ற மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஆ) இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இ) மூன்றாவதாக இலங்கையின் ஏனைய குடிமக்களுக்கு, ஆனால் இவர் களுள் தீவின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் குடிமக்களுக்கு முன் னுரிமை கொடுக்கப்படும்''.

## காணிக்கபளீகரம் — புள்ளி விபரம் காட்டும் செய்தி

1965இல் ஐ. தே. கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் கோட்பாடு எவ்வளவு தூரம் ஏற்கப்பட்டு இவ்வொப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பின்னர் ஆராய்வோம். ஆனால் எவ்வளவு தூரம் தமிழர் நிலம் கபளீகரம் செய்யப்பட்டு தமிழர் தாயகம் ஆபத் துக்குள்ளாக்கப் பட்டிருக்கிறதென்பதை அரசாங்க புள்ளி விபர அறிக் கையே காட்டுகிறது. புள்ளி விபரக்கணக்கு வருமாறு:-

| ஆண்டு | மொத்த குடிசனம் | சிங்களவர் | முழுகுடிசன எண்ணிக் கையில் சிங்களவரின் வீதம் |
|---|---|---|---|
| | | வடக்கு மாகாணம் | |
| 1921 | 374,829 | 3,795 | 1 |
| 1946 | 479,572 | 9,602 | 2 |
| 1981 | 1,111,468 | 33,149 | 3 |
| | | கிழக்கு மாகாணம் | |
| 1921 | 192,821 | 8,744 | 4.5 |
| 1946 | 279,112 | 23,456 | 8.4 |
| 1981 | 976,475 | 243,358 | 24.9 |

## ஒப்பந்தத்தின் மிகப் பாரதூரமான குறைபாடு

தமிழ் நிலம் சிங்களக் குடியேற்றங்களின் மூலம் அபகரிக்கப்படு வதற்கு முற்றுப்புள்ளி வைக்கத்தவறியது ஒப்பந்தத்தின் மிகப் பார தூரமான குறைபாடாகும்; 1948க்கு பின்பு நடைபெற்ற சிங்களக்

குடியேற்றங்களை படிப்படியாக அகற்ற வேண்டும் என்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இடம் கொடுக்காதது மட்டுமல்ல 1983 ஜூலை கலவரத்திற்கு பின்பு சிறிலங்கா அரச படைகள் தாக்குதலை ஆரம்பித்தபின் தங்கள் உறைவிடங்களை விட்டு ஆயிரக் கணக்கில் தமிழர்கள் ஓடியபொழுது நடத்தப்பெற்ற குடியேற்றங்களை அகற்ற இடம் வைக்காதது மட்டுமல்ல — **இன்னும் மோசமான நிலை என்னவெனில் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும் கூட குடியேற்றங்கள் நடைபெறுவதை தடுக்க ஒப்பந்தத்தில் எந்த வகையான ஏற்பாடும் இல்லை.** 1987 ஜூலைக்குப் பின் நடைபெற்ற - இன்றும் திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெறும் சிங்கள குடியேற்றங்களை அகற்றவோ - தடுத்து நிறுத்தவோ இந்திய அமைதி காக்கும் படைக்கு அதிகாரம் இல்லை. உதாரணமாக, முல்லைத் தீவு மாவட்டத்தில் மணல் ஆறு என்னும் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் துண்டிக்கும் நோக்குடன் "வெலி ஓயா" என்ற சிங்களப் பெயருடன் ஒரு பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டம் 1984 ஆண்டுக்குப் பின் நடைபெற்று வருகிறது. 4000 குடும்பங்கள் வரை குடியேற்றப்பட்டுவிட்டார்கள். இதுபற்றி முல்லைத்தீவு பிரஜைகள் குழுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பாரதப் பிரதமருக்கு மகஜர்களை அனுப்பியும் இதுவரை பலன் ஏதும் காணப்படவில்லை. **எனவே சிங்களக் குடியேற்றத் திட்ட பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை அசாமில் நடைபெறுவதைப்போல வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1948க்குப் பின் குடியேற்றப்பட்ட சகல சிங்களக் குடியேற்ற வாசிகளினதும் அவர்கள் வழித்தோன்றல்களினதும் பெயர்கள் இம் மாகாணங்களின் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப் பட்டு அவர்களின் பழைய இடங்களில் அவர்கள் வாக்காளர்களாகப் பதியப்பட வேண்டுமென்ற ஆலோசனையை நாம் முன்வைக்கின்றோம்.** இவ் யோசனையை எமது ஆங்கில நூலின் மூலம் சமர்ப்பித்த பின் இதற்கு பக்க சார்பான ஆதரவு ஒரு அமெரிக்கப் பேராசிரியரின் நூலில் கிடைத்துள்ளதையிட்டு மகிழ்வெய்துகிறோம். லொக் ஹேவின் (Lock Haven) பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் துணைப் பேராசிரியராக இருக்கும் கலாநிதி லோறன்ஸ் ரீ. பா(f)ர்லி (Lawrence T.Farley) அவர்கள் எழுதிய கருத்து கணிப்புகளும் இறைமையும் (Plebiscites & Sovereignty) என்ற நூலில் பல இடங்களில் கருத்துக் கணிப்புக்கான வாக்காளர் பட்டியல்களில் பல வருடங்களுக்கு முன்னர் குடியிருந்தவர்களின் பெயர்கள் மட்டும் கொண்டு புதிதாகத் தயாரிக் கப்பட்டு அவற்றின் அடிப்படையிலேதான் கருத்துக் கணிப்புகள் நடத் தப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். உதாரணமாக 1935ல் நடந்த (Sar) கருத்துக்கணிப்புக்கு அப் பிரதேசத்தில் 28.6.1919இல் குடியிருந்த 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வாக்களிக் கும் உரிமை வழங்கப்பட்டது.

ஒரு நிலப் பரப்பில் வாழும் நியாயபூர்வமான உரிமை பெற்றவர்களுக்கு அப் பிரதேச நலனை முன்னிட்டு நடத்தப்படும் தேர்தல்களில் வாக்குரிமை வழங்கப்படல் வேண்டுமென்ற அடிப்படையில் 1948ஆம் ஆண்டுக்குப்பின் நியாயமற்ற முறையிலும் வட-கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் அப் பிரதேசத்தின் பூர்வீக குடிமக்களின் நலன்களுக்கு மாறுபட்டவர் என்ற அடிப்படையிலும் அவர்களுக்கு வாக்குரிமை மறுப்பது நியாயமானதே.

நிலப் பிரச்சனையின் முக்கியத்துவம் கருதி அதை தனி விடயமாகக் கையாண்டுள்ளோம். ஒப்பந்தத்தின் 2.15ம் பந்தியின்படி 1986 மே 4-ம் திகதி முதல் 1986 டிசம்பர் 19-ம் திகதி வரை விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பது நிபந்தனையாகக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் மேற்கண்ட காலத்தில் இறுதியாக்கப்படாத விபரங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே பேசித் தீர்வு காணப்படும். இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட "வரைவுப் பிரேரணைகள் (30.8.85 இலிருந்து 19.12.86 வரை) என்ற வெளியீடு இணக்க நிபந்தனைகள் சிலவற்றைக் குறிக்கிறது. இவை ஸ்ரீ லங்கா குழுவிற்கும் இந்திய வெளி விவகார அமைச்சு அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின்போது உருவானவை. 1985 செப்டெம்பர் 10-ம் திகதிக்கும் 13-ம் திகதிக்கும் இடையே ஒத்துக்கொள்ளப்பட்ட பிரேரணைகளில் தமிழர்களுக்கு சார்பான ஒன்றிரண்டு விடயங்கள் பிந்திய பேச்சுவார்த்தைகளின் போது விடுபட்டுள்ளன. இத் தவறு வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது அகஸ்தமாக கவலையீனமாக விடப்பட்டதா என்று சம்பந்தப்படாதவர்களால் சொல்ல முடியாது. ஆனால் இதனால் தமிழர்களுக்கே பாதிப்பு என்று மட்டும் கூறமுடியும்.

இப் பேச்சுக்களின் போதுதான் ஸ்ரீ லங்கா தூதுக்குழு காணி வழங்கலில் இனவாரியான ஒதுக்கீடு பற்றியும் - பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் சிறு நீர்ப்பாசன திட்டங்கள் என்ற வேறுபாடு உருவாக்கியும் கருத்துக்களை முன்வைத்துள்ளது. இக் கருத்துக்கள் டட்லி, செல்வநாயகம் ஒப்பந்தத்தை மீறுவதானது. எமது சார்பில் பேசப் புகுந்துவிட்டவர்கள் அந்நேரம் ஏன் யூ. என். பி. அரசை அக்கட்சியே ஏற்றுக்கொண்டு அதன் தலைவர் திரு. டட்லி சேனநாயகா தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீற விடாது பார்க்கவில்லை?

## பங்களூர் பேச்சுவார்த்தைகளின் போது நிலப்பங்கீட்டு கொள்கை.

தமிழர்களைப் பொறுத்தளவில் காணிப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்திய அரசு 1986 - டிசம்பர் 19ல் நடைபெற்ற

பங்களூர் பேச்சுவார்த்தைகளின்போது கூட இப்பிரச்சினையை மீண்டும் எழுப்பியிருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அரசின் வெளியீட்டில் ( தமிழ்ப் பகுதிப் பக்கம் 39 ) மாகாணசபைகள் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. இதன்படிக்கு 30-8-85 தேதிய இணக்க கட்டமைப்புக்கான பின்னிணைப்பு I லும் பெரும் படியாக இந்திய யாப்பின் ஏழாவது அட்டவணையின் II-ம் III-ம் பட்டியல்களில் உள்ள பதிவுகளில் உள்ள விடயங்கள் மாகாணசபைகளுக்கு அதிகாரப்பரவலாக்கஞ்செய்யப்படும் எனக்கூறப்பட்டுள்ளது.

காணி விடயம் மாகாண சபை நிரலில் ( நிரல் 1 ) 26-ம் விடயமாக இடம்பெறுகிறது (பக்கம் 27 — தமிழ்) அது வருமாறு கூறுகிறது:-

காணி --- **பின்னிணைப்பு (11) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு.** காணி, அதாவது காணியின் மீதான உரிமைகள், காணி ஆட்சி, காணியைக் கைமாற்றுதலும் பராதீனப்படுத்தலும், காணிப்பயன்பாடு, காணிக்குடியிருப்பும் காணிச்சீர்திருத்தமும்.

பின்னிணைப்பு மிக விரிவாகவுள்ளது. ஆயினும் வரைவு பிரேரணைகளினின்றும் (பக்கம் 107 — தமிழ்) அரசமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 13வது திருத்தப்பிரேரணை பல்வேறுவகையில் மாறுபாடுடையதாயிருக்கிறது. இத்தகைய வேறுபாடுகள் கபடத்தனமாக புகுத்தப்பட்டவையா?

வரைவு பிரேரணைகளினின்றும் கபடத்தனமாக மாற்றப்பட்டவை வருமாறு:-

(1) பின்னிணைப்பு II ன் தொடக்கப்பந்தியில் கூறிய காணி விடயம் மாகாணசபைகளுக்கு கீழ்க்கண்ட பிரேரணைகளுக்கமைய பரவலாக்கப்படும் என்ற அரசியல் யாப்பின் 13-ம் திருத்தத்தில் இடம்பெறவில்லை. பதிலாக கீழ்க்கண்டபடியுள்ளது:

"அரச காணி தொடர்ந்தும் குடியரசிடமே இருக்கும். விதி 33 (b)க்கும் ஏனைய எழுத்திலான சட்டங்களுக்கும் அமைய இது கையாளப்படலாம். மேலே சொன்னதற்கமைவாகவும் கீழ்க்காணும் ஏற்பாட்டுக்கு அமைவாகவும் காணி மாகாணசபை விடயமாக இருக்கும்."

அனைத்து அரச காணிகளும் குடியரசிடம் இருக்கவேண்டும் என்ற கருத்தை இந்திய அரசு ஏற்றிருக்கவில்லை. பங்களூர் பேச்சுவார்த்தைகளின்போது இலங்கைக் குழுவினருக்கும் தமிழ் குழுவினருக்குமிடையேயிருந்த வேறுபாடுகளை தீர்க்க மூன்று மாற்றுத்திட்டங்களை இந்தியா கூறியிருந்தது. ( பக்கம் 122 — தமிழ் )

அ) சகல அரச காணிகளையும் 99 வருட குத்தகைக்கு மாகாண சபைகளுக்கு கொடுப்பது.

ஆ) சகல அரச காணிகளையும் காணி சபை அல்லது ஆணைக்குழுவிற்கு கையளித்து அத்தகைய சபை அல்லது ஆணைக்குழுவிலிருந்தே மத்திய அரசும் மாகாண சபையும் தங்கள் தேவைக்குரிய காணிகளை பெற்றுக்கொள்ளுதல்.

இ) அரச காணி மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்டு – மத்திய அரசு தன் தேவைக்கு மாகாண சபையிடமிருந்து பெற்றுக் கொள்வது.

இலங்கை அரசு மேலே (ஆ)வில் சொல்லப்பட்ட மாற்றுத் திட்டத்தை கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக்கொள்ள ஒத்துக்கொண்டது:-

"ஒரு தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்படும். **அரசின் நம்பிக்கைப்பொறுப்பாக ஆணைக்குழு காணியின் உரிமை உடையதாய் இருக்கும்**. காணி ஆணைக்குழுவின் வேலைகள் கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கும்.

அ) அரச காணி உபயோகம் சம்பந்தமாக தேசியக்கொள்கை வகுத்தல்.

ஆ) மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கப்பட்ட விடயங்களின் தேவைகளுக்காக மாகாண சபைகளுக்கு காணி கிடைக்கச் செய்தல்.

இ) அரசாங்க முகவர் நிறுவனங்களுக்கு அவற்றின் வேலைக்கு தேவையான காணிகளை அவற்றிற்கு கிடைக்கச் செய்தல்.

தேசிய ஆணைக்குழுவில் ஒவ்வொரு மாகாண சபையின் பிரதிநிதியும் இடம் பெற்றிருப்பதுடன் அது ஒரு பல்தொழில் நுட்ப செயலகத்தின் உதவியையும் பெற்றதாயிருக்கும்.

பிரதான அமைப்பிற்கு ஆலோசனை சபையாக இயங்கின் தேசிய காணி ஆணைக்குழுவின் துணைக்குழுக்கள் நிறுவப்படுவதற்கு ஆட்சேபனை கிடையாது".

இந்திய அரசின் மாற்றுத்திட்டத்திற்கு இலங்கை அரசினால் கொடுக்கப்பட்ட மேற்படி திருத்தம் அரச யாப்பின் 13-ம் திருத்தச் சட்டத்திலிருந்து முற்று முழுதாகக் கைவிடப்பட்டுள்ளது. **இலங்கை அரசினால் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் இவ்விதம் அதனாலேயே மீறப்பட்டுள்ளது. இலங்கை அரசு தனது வாக்குறுதியை மீற இந்திய அரசு ஏன் அனுமதித்தது? தமிழ் மக்களுக்கு இந்திய அரசின் மறுமொழி தான் என்ன?**

மேலே சொல்லப்பட்ட இலங்கை அரசின் வெளியீட்டின் பின் இணைப்பு II-ல் உபபந்தி 1.4 (பக்கம் - 107 தமிழ்) கீழ்க்கண்டபடி குறிப்பிடப் பட்டிருக்கிறது:-

"அத்தகைய திட்டங்களின் கீழ் எவரேனும் பிரசைக்கு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு அத்தகைய காணிகளைப் பராதீனப் படுத்தும் அல்லது கையுதிர்க்கும் பணி (*1*) **மாகாண சபையின் நியதிச் சட்டங்களுக்கு இணங்கவும் வேறு எச்சட்டங்களின் கீழ் மாகாண சபைகள் செயற்படுவதற்கு உரித்தளிக்கப்பட்டதோ அத்தகைய வேறு சட்டங்களுக்கிணங்கவும்** மாகாண சபையின் ஆலோசனையின் பேரில் அம்மாகாண சபையின் (*2*) **ஆளுநரினால்** செய்யப்படும்".

மேலே (*1*), (*2*) என அடையாளமிட்டு இந்நூலில் தடித்த எழுத்தில் காணப்படும் பகுதிகள் இலங்கை அரசியல் யாப்பின் 13-ம் திருத்தத்தில் கீழ்க்கண்டபடி மாற்றப்பட்டுள்ளன:-

1) முறையே இவ்விடயத்தைப் பொறுத்த சட்டங்கள்

2) ஜனாதிபதி

குறித்த பின் இணைப்பின் 1.2-ம் பந்தி வரைவுப் பிரேரணைகளின் 1.3 பந்தியிலிருந்தும் கணிசமான அளவு வேறுபடுகின்றது. ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவு பிரேரணைகளிலிருந்து இலங்கை அரசு கணிசமான அளவு மாற்றங்களைச் செய்துள்ளது. **இவற்றை எப்படி இந்திய அரசு ஏற்றுக்கொண்டதென்பதற்கு இந்திய அரசு தமிழ் மக்களுக்கு என்ன சமாதானம் சொல்லவிருக்கிறது?**

இந்திய யாப்பில் இந்திய மத்திய அரசின் அதிகாரங்கள் சம்பந்தமான பட்டியலில் 56வது விடயமாக "பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டங்களுக்கமைய மாநிலங்களுக்கிடையேயான ஆறுகள் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும்" மத்திய அரசின் விடயங்கள் ஆகும். ஆனால் காவேரி ஆற்று நீர் பிணக்குப் போன்ற மாநிலங்களுக்கிடையேயான பிணக்குகளைப் பார்க்கும் போது மத்திய அரசு இவ்விடயத்தில் எவ்வித சட்ட ஆக்கமும் செய்யவில்லை என்றும் இதுவெறுமனே மத்திய அரசின் அதிகாரப் பட்டியலில் மட்டும் இருக்கிறது என்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இலங்கை அரசோ தமிழ் மக்களைப் பொறுத்த இந்த அதிமுக்கிய விடயத்தில் எத்தனையோ கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறது.

## கிழக்கு மாகாணத்தில் கருத்துக்கணிப்பு — தமிழர் தாயக கோட்பாட்டுக்கு எதிரானது

ஒப்பந்தத்தில் காணப்படும் கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு என்ற விடயம் இங்கேயே ஆராயப்படலாம். ஏனெனில் இது

தமிழர்களுக்கான தாயகம் என்ற கோட்பாட்டுடன் பின்னிப்பிணைந்த விடயமாகும். ஒப்பந்தத்தின் பந்தி 2:3 கீழ்க்கண்டபடி உள்ளது:-

I) கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன் ஒரே நிர்வாக பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து பந்தி 2.2-ல் கண்டுள்ளபடி ஆளப்படுவதா அல்லது

II) தனி நிர்வாகப் பகுதியாக தனக்கென தனி மாகாணசபை, தனி ஆளுநர், தனி முதல்வர், தனி அமைச்சரவையுடன் இயங்குவதா? என்பதை கிழக்கு மாகாண மக்கள் தீர்மானிக்க 1988 டிசம்பர் 31-ம் திகதிக்கு முன் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்கள் வரலாற்றுக் காலந் தொடங்கி வாழ்ந்து வரும் இடங்கள் என இப்போது ஒப்பந்தம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கருத்துக்கு முற்றிலும் முரணானதே இந்த வாக்கெடுப்பு பற்றிய பிரேரணை.

ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இனக்குழுக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியராவர். போர்த்துக்கேயர்களின் வருகைக்கு பின்பே பறங்கியர் ஒரு இனமாக உருவெடுத்தனர். அத்துடன் அவர்கள் கொழும்பைச் சுற்றியே நெருங்கி வாழ்கின்றனர். அதனால் இவ்வாக்கெடுப்பு நோக்கத்திற்கு அவர்கள் நிலை ஆராயப் படத்தேவையில்லை. முஸ்லீம்கள் இலங்கைக்கு எப்போது வந்தார்கள் என்பதோ – தமிழர்களில் எவ்வளவு பேர் இஸ்லாத்தை தழுவினார்கள் என்பதோ வேறு விடயங்கள். இலங்கை முஸ்லிம்கள் (அவர்கள் சோனகர் என அழைக்கப்படுகின்றனர்) தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பது பொதுவாக ஏற்கப்பட்டதொன்று. சிங்களவரைப் பொறுத்தளவில் 1921-ம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டின்படி வடக்கு கிழக்கு மாகாணத்தில் அவர்கள் எண்ணிக்கை 2.2 சத வீதம் மட்டுமே. ஆயினும் இந்நூலின் 1ம் பாகத்தில் விளக்கியுள்ளபடி போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபொழுது இங்கு மூன்று அரசுகள் இருந்தன. பின்பு இவை பிரித்தானிய ஆட்சியின் போது 1833-ல் ஒரு நிர்வாக அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டு முழு இலங்கையும் **ஐந்து** மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்கள் எப்பொழுது தனி மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டன என்ற விபரம் தெரியவில்லை. **ஆனால் நிர்வாக வசதிக்கா பிரித்தானிய குடியேற்ற அரசினால் செய்யப்பட்ட இப்பிரிவு சரித்திர காலம் தொட்டு பூகோள ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் தமிழ் இராச்சியம் ஒன்றிணைந்திருந்தது** என்ற உண்மையை அழித்துவிட முடியாது.

## ஸ்ரீ லங்காவிலிருந்து பிரிய விரும்பின் பிரிவதற்குரிய உரிமையை தமிழர்களுக்கு ஏன் மறுக்க வேண்டும்?

நீதிக்கு மிகவும் விரோதமான செயல் எமது தாயகத்தில் வலோத்காரமாகக் குடியேறியிருக்கும் சிங்களவர்கள் கூட கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் வாக்களிப்பில் வாக்களிக்க இருப்பது. இலங்கையின் ஐக்கியமும் பிரதேச ஒருமைப்பாடும் பேணப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் அதேபோல தமிழர் தாயகத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் பேணப்படவேண்டும் என்ற கருத்தையும் ஏற்றுத்தானே ஆக வேண்டும். அதுவே தர்க்க ரீதியானதும் நீதியானதுமாகும். ஆகவே தமிழர் தாயகத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் வாக்கெடுப்பில் தங்கியிருக்க முடியாது-கூடாது. இரண்டாவதாக கிழக்கிலங்கை மக்கள் (சிங்கள வலோத்கார குடியேற்றவாசிகள் உட்பட) வடக்கு மாகாணத்திலிருந்து பிரிந்து செல்ல வாக்கெடுப்பு நடத்தப்படலாம். என்றால் அதே நியாயத்தின் அடிப்படையில் வடக்கு மாகாண மக்களும் - அதற்கு அடுத்துள்ள கிழக்கு மாகாணமக்களும் ஸ்ரீ லங்காவிலிருந்து பிரிந்து தமிழ் ஈழத்தை நிறுவுவதற்காக அவர்களிடையேயும் ஏன் ஒருவாக்கெடுப்பு நடத்தக்கூடாது?

**காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இருக்க விரும்புகிறார்களா அல்லது பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார்களா என்பதை அறிய காஷ்மீரில் ஒரு வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றிய பொழுதும் இந்திய அரசு கடந்த 40 வருடங்களாக இத் தீர்மானத்தை அமுல் நடத்த மறுத்துவருகிறது. அப்படியிருக்கையில் எவ்விதம் இந்திய அரசு கிழக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பு நடத்த ஒத்துக்கொண்டது? இந்தியாவிற்கு பொருத்தமான இந்த விடயம் ஏன் ஈழத் தமிழர்களுக்கு பொருத்தமாய் இருக்கக்கூடாது?**

## தமிழர் அபிலாஷைகள் பற்றி திரு. டீக்சிற்றின் கரிசனை

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இலங்கை அரச அதிகாரிகளுக்குமிடையே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் வட மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு கிழக்கு மாகாண ஆட்சிப் பொறுப்பை இலங்கை அரசிடம் ஒப்படைக்க சம்மதமான அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறுவதாக சில பத்திரிகைகளில் சில நாட்களுக்கு முன் செய்தி வந்தது. 1988 பெப்ரவரி 28ந் திகதிய ஞாயிறு ஒப்சேவர் பத்திரிகையில் இது சம்பந்தமாக திரு. டீக்சிற் சில கருத்துக்கள் வெளியிட்டதாக இன்னொரு செய்தி வந்தது. இச் செய்தியின் படி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது பரிமாற்றப்படும்

பிரேரணைகள் மூலம் தமிழர்களின் அபிலாஷைகள் குறைக்கப்படுவதாக அமைந்துள்ளதாகத் திரு. டீக்சிற் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பை கைவிடுவது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதை குறைப்பதாக அமையும் என நன்கு இந்தியா உணர்ந்திருந்தும் அவருடைய அரசு எதற்காக கிழக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டது என்பதற்கு திரு, டீக்சிற்றே விடை கொடுக்க வேண்டும். நன்கு அறிந்து கொண்டே இத்தகைய பிழையை ஒப்பந்தத்தில் இடம்பெறச் செய்துகொண்ட இந்திய அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த புலிகள் இயக்கம் அதே பிழையான ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என முன் நிபந்தனை விதிப்பது எந்த நியாயத்தின் அடிப்படையில் என்று கேட்க விழைகிறோம்.

## (ஆ) சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பேணுவதற்கான சாதனம்

ஒப்பந்தத்தின் 1.5ம் பந்தி இலங்கையின் பல இன, பல மொழி, பல மதங்கள் கொண்ட சமூகத்தின் தன்மையை பாதுகாப்பதன் தேவையையும் உணர்ந்து அதன் அனைத்து குடிமக்களும் சம உரிமையுடனும் பாதுகாப்புடனும் வாழக்கூடியதாயும் சுமுக உறவுடன் வாழ்ந்து வளம் பெறுவதுடன் அவரவர் அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றக் கூடியதாயும் இருக்க வேண்டுமெனக் கூறுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான வாழ்வு பற்றி முதலில் பார்ப்போம். அதிலும் முழு இலங்கையிலுமான பாதுகாப்பை விடுத்து தமிழர்களுக்கு தமது தாயகத்திலேயே கிடைக்கக்கூடிய பாதுகாப்புப் பற்றிப் பார்ப்போம். 1956, 1958, 1977 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற வன் செயல்களின் போது சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர் பாதுகாப்புக்காக தங்கள் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஓடக்கூடியதாகவிருந்தது. ஆனல் 1977க்கு பின்பு இனவாத மனப்பான்மை கொண்ட சிங்கள அரசபடையினர் மேலதிகமாக இங்கு குவிக்கப்பட்ட பின் பல தமிழர்கள் பாதுகாப்புத் தேடி இந்தியா உட்பட பல வெளிநாடுகளுக்கு ஓட வேண்டி வந்தது.

### மகாவன்ச மனப்பான்மை

தமிழ் உயிர்களைத் தூசாக மதிக்கும் மனப்பான்மைக்கான காரணம் மகா வம்சத்தின் உபதேசம் எனலாம். இது சிங்களவர் மனதில் பதிக்கப்பட்டுள்ளது. தமிழ் மன்னனை எல்லாளனைப்போரில் வென்ற துட்டகெமுனு அரச மாளிகையின் உப்பரிகையில் இருந்துகொண்டு கோடிக் கணக்கான உயிர்களைக் கொன்று விட்டேனே என்ற மன

வேதனையுடன் இருந்தபொழுது எட்டுத் துறவிகள் அவனிடம் சென்று அச் செய்கையால் சொர்க்கத்தை அடைவதற்கான வழியில் அவனுக்கு தடைகள் ஏதுமில்லையென்றும் அவன் ஒன்றரை மனிதர்களையே கொன்றிருப்பதாகவும் கூறினார்கள் என மகாவம்சம் கூறுகிறது. இந்த ஒன்றரை மனிதரில் ஒருவர் பௌத்த மதத்தை தழுவியவர். பௌத்த மதத்தை தழுவாது பஞ்சசீலத்தை மட்டும் ஏற்றுக்கொண்டவர் அரை மனிதர் என துட்டகைமுனுவிற்கு மேலும் விளக்கப்பட்டது. அவன் கொன்ற ஏனையவர்கள் **பௌத்த மதத்தை நம்பாதவர்களும்—கெட்ட வாழ்க்கை உடையவர்களும் என்றும் அவர்களை மிருகங்களுக்கு மேலாக மதிக்கத் தேவையில்லையென்றும்** இந்தத் துறவிகள் துட்டகைமுனுவிற்கு 'அறிவுரை' 'வழங்கியதாக மகாவம்சம் மேலும் கூறுகிறது. துட்டகைமுனுவைப் பொறுத்தளவில் அவன் புத்தரின் தத்துவங்களுக்கு மேலும் பல வகையில் பெருமை சேர்ப்பான் என்றும் அதனால் அவன் அவனது மனதிலிருந்த சுமையை தூக்கி எறிந்துவிடவேண்டும் எனவும் துட்டகைமுனுவுக்கு உற்சாகமூட்டப்பட்டது. மகாவம்சத்தின் கருத்துப்படி மிருகங்களிலும் மேலாக மதிக்கப்பட தேவையற்ற எல்லாளனின் எஞ்சிய படை வீரர் இந்துக்கள்! இவர்கள் தெய்வ நம்பிக்கை அற்றவர்கள்!! இவர்களை கொன்றதனால் அரசன் சொர்க்கத்தை அடையத் தடை ஏதுமில்லை!!!

## இந்திய ஆலோசனைகள்

ஆயுதப் படையிலும் பொலிஸ் படையிலும் அபரிமிதமான எண்ணிக்கையில் சிங்களவர் உள்ளனர். தூர கிழக்கு பொருளியல் விமர்சகர் (Far Easter Economic Review) என்ற பத்திரிகையில் *30–10–1984*ல் ஒரு சிங்களவரான திரு. மேர்வின் டி சில்வா ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக் கட்டுரையின்படி படைப் பிரிவுகளில் தமிழர் எண்ணிக்கை 2%க்கும் குறைவானது. பொலிஸ் படையில் தமிழர் எண்ணிக்கை 5%க்கும் குறைவானது. இன்று நிலைமை இன்னும் மோசமாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இப் படைகளில் சிங்களவர் அபரிமித எண்ணிக்கையில் இருப்பதாலும் 1977க்குப் பின் தமது சொந்தத் தாயகத்திலேயே தமிழர் பாதுகாப்பு அற்றவர்களாயிருந்ததாலும் அவர்களின் அச்ச உணர்வைக் குறைக்க இந்திய தரப்பினர் இரு ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

## படைப் பிரிவுகளில் இன விகிதாசாரம் பிரதிபலிக்கப்பட வேண்டும்

சகல படைப் பிரிவுகளுக்குமான ஆட்களை சேர்க்கும்பொழுது இன விகிதாசார அடிப்படையில் சேர்க்கப்படல் வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடைபெற வேண்டுமென்பது இந்திய தரப்

பின் ஒரு ஆலோசனை. ஆனல் பின்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த ஆலோசனை ஆராயப்படவில்லை. இந்திய அரசே இதற்கான விளக்கத்தை கொடுக்க வேண்டும்.

## பொலிஸ் படை – குறைந்தது 80% மாகாணசபைப் பிரிவிலிருந்து தெரிவாக வேண்டும்

பொலிஸ் படை பற்றி இந்திய அதிகாரிகளுடன் பேசியபோது இலங்கை பிரேரணைகள் கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கியிருந்தன:-

1) "மாகாணத்தின் பொலிஸ் படை தலைவர் (ஒரு உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அல்லது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அல்லது பொலிஸ் அத்தியட்சர்) பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரிலினல் நியமிக்கப்படுவார். அத்தகைய நியமனம் மாகாணத்தின் பிரதம நிறைவேற்றுனரின் ஆலோசனையுடன் செய்யப்படும். இவ்விதம் நியமிக்கப்படும் தலைவர் மாகாணத்தின் பெரும்பான்மை மக்களின் மொழியை தெரிந்தவராயிருப்பார்.

2) பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படும் பொழுது இவற்றின் ஒரு பகுதி மாகாண சபைப் பகுதிகளுக்கும் இன்னொருபகுதி மத்திய அரசிற்கும் பகிர்ந்தளிக்கப்படும். மாகாண சபைகளுக்கு அளிக்கப்படும் வெற்றிடங்களுக்கான தெரிவு மாகாணங்களிலேயே செய்யப்படும். அத்தகைய தெரிவுக்காக ஒரு ஆரம்ப நேர்முகச் சோதனை மூவர் கொண்ட குழுவினல் நடத்தப்படும். இம் மூவர் குழுவின் தலைவராக பிரதம நிர்வாகியின் நியமனஸ்தர் செயலாற்றுவார். ஏனைய இருவரில் ஒருவர் பொலிஸ் படைத் தலைவரின் நியமனஸ்தராகவும் மற்றவர் பிரதம நிர்வாகியின் இன்னொரு நியமனஸ்தராகவும் இருப்பார்.

இறுதி நேர்முகச் சோதனையும் மூவர் கொண்ட குழுவினல் நடத்தப்படும். இக் குழுவில் பாதுகாப்பு அமைச்சரின் நியமனஸ்தர் தலைவராக இருப்பார். ஏனைய இருவரில் ஒருவர் பொலிஸ் படைத் தலைவரின் நியமனஸ்தர். மற்றவர்பிரதம நிர்வாகியின் நியமனஸ்தர். ஒரு மாகாண சபைப் பகுதியின் உதவி இன்ஸ்பெக்டர்களுக்கான ஆரம்ப நேர்முக சோதனை மூவர் குழுவினல் நடத்தப்படும். இக் குழுவின் உறுப்பினர்களாக பிரதம நிர்வாகியின் இரு நியமனஸ்தர்களும் பொலிஸ் படைத் தலைவரின் ஒரு நியமனஸ்தரும் இடம் பெறுவர். இக் குழுவின் தலைவராக பிரதம நிர்வாகியின் ஒரு நியமனஸ்தர் கடமையாற்றுவார். இறுதி நேர்முக சோதனைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனல் கான்ஸ்டபிள்கள், உதவி இன்ஸ்பெக்டர் பதவிகள் நியமனம் சம்பந்தமான ஆரம்ப நேர்முகச் சோதனையின் போது பிரதம நிர்வாகியின் கருத்துக்கு பெருமிடம் அளிக்கப்பட்டிருந்தது.

3) ஒரு மாகாணசபைப் பகுதியில் இயங்கும் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிசாரில் பெரும்பான்மையினர் **அப் பகுதியின் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழியில் பரிச்சயம் உடையவர்களாயிருப்பதை உறுதி செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.''**

மேலே காட்டப்பட்டுள்ள இலங்கைப் பிரேரணைகளுக்கு இந்திய தரப்பினர் ஒரு மாற்று ஆலோசனையை முன்வைத்தனர். இதன்படி ஒரு மாகாண சபைப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஆட்கள் சேர்க்கப்படும் போது அவ்விதம் சேர்க்கப்படுவோரில் குறைந்த பட்சம் 80% வீதத்தினராவது அம்மாகாண சபை எல்லைக்குள்ளிருந்து தெரிவானவர்களாயிருத்தல் உறுதி செய்யப்படவேண்டும். இவ்வாலோசனை சம்பந்தமாக இலங்கைத் தரப்பு மீண்டும் கதைக்கும் என்ற குறிப்பு இருந்த பொழுதும் அவ்விதம் மீண்டும் இவ்விடயம் கதைக்கப்படவில்லை. **இது தமிழர் நலத்தை மிக மிகப்பாதிப்பதாகும். பிந்திய பேச்சு வார்த்தைகளின் போதும் இலங்கை அரசியல் யாப்பின் திருத்தத்தின் போதும் இப்பிரச்சினை மீளப் பரிசீலிப்பதாக கூறப்பட்டிருந்தபோதும் பரிசீலிக்கப்படவில்லை. இத்தவறுக்கு - தமிழர்களை மிக வெகுவாகப் பாதிக்கும் தவறுக்கு — யார் பொறுப்பு? இது விடயத்தில் இந்திய அரசு என்ன சொல்லப்போகிறது?**

இலங்கை அரசியல் யாப்பிற்கான 13வது திருத்தம் ஒரு தேசிய பொலிசும் டீ. ஐ. ஜி. ஒருவரின் தலைமையிலான ஒரு மாகாண பொலிசும் மாகாணப்பொலிஸ் ஆணைக்குழுவும் நியமிக்கப்படுவதற்கு வகை செய்கிறது. இந்த மாகாண பொலிஸ் ஆணைக்குழு மாகாண (கீழ்மட்ட) பொலிஸ் நியமனத்திற்கு பொறுப்பாயிருக்கும். இக்குழுவில் மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் (டீ. ஐ. ஜி.) ஜனதிபதியின் ஆலோசனையுடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவினல் நியமிக்கப்படும் ஒருவர், மாகாணத்தின் முதல் அமைச்சரின் நியமனஸ்தர் ஆகியோர் இடம்பெறுவர். இதன்படிக்கு இக்குழுவில் மாகாண முதலமைச்சரின் குரல் சிறுபான்மையாய்விடும். இதிலும் மோசமானவையுமுள. மாகாண மொழியில் பிரதி பொலிஸ் மாஅதிபர் (டீ. ஐ. ஜி.) பரிச்சையமானவராய் இருப்பார் என்ற இலங்கை அரசின் பிரேரணையே அதன் சட்டவாக்கத்தில் இடம்பெறவில்லை. அதேபோல பொலிஸ்சாரில் பொரும்பான்மையினர் மாகாணத்தின் பெரும்பான்மையினரின் மொழியில் பரிச்சயமாயிருப்பர் என்ற பிரேரணையும் சட்ட வலுப்பெறவில்லை. இந்நிலையில் இந்திய தரப்பு வழங்கிய 80 சத வீதத்தினர் மாகாணத்திலே தெரிவானவராயிருத்தல் வேண்டும் என்ற ஆலோசனையைப்பற்றிப் பேசவே தேவையில்லை. அது மறைந்த--மறந்த கதையாய் போய்விட்டது.

இலங்கை அரசாங்க வெளியீட்டின் பின்னிணைப்பு I ன் (பக்கம்—100 தமிழ்) படி மாகாணப்பிரிவு மாகாணத்தில் தெரிவுசெய்யப்படும் மாகாண உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதம இன்ஸ்பெக்டர்கள், உதவி இன்ஸ்பெக்டர்கள், சார்ஜன்டுகள், கான்ஸ்டபிள்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகவிருக்கும் என்றிருக்கிறது. ஆனால் ஆகிய அனைவரையும் என்ற சொல் இடம்பெருதது பிரச்சினையைச் சிக்கலாக்குகிறது. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பொலிசாருக்கான மொழித்தகைமைகள் காரணமாக இச் சொற்ருெடர் பிரச்சினைகளை உருவாக்க இடமுண்டு. பொலிசாருக்கான மொழித்தகைமை பற்றி கூறுகையில் தேசியப்பிரிவு — மாகாணப்பிரிவு ஆகிய இரண்டிலும் உள்ள கசற்றட் அதிகாரிகள் எனப்படும் பொலிஸ்சார் சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தகைமை பெற்றிருப்பவர்களாயிருந்தல் வேண்டும். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களும் அவர்களுக்கு மேல் உயர்பதவி வகிப்பவர்களும் ஆங்கிலத்தில் தகைமைபெறவேண்டும். மாகாணப்பிரிவை உள்ளடக்கிய இலங்கை பொலிஸ்படைக்கு தெரிவாகும் ஒவ்வொருவரும் தன்னுடைய தாய்மொழியில் தகைமைபெற்றவராயிருத்தல் வேண்டும். அவரது முதலாவது பதவி உயர்வுக்கு அவர் தமது தாய் மொழி அல்லாத இன்னொரு மொழியில் தகைமை பெறவேண்டும். அடுத்த பதவி உயர்வுக்கு அவர் மூன்ருவது மொழியில் தகைமை பெற வேண்டும் — சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பன மும்மொழிகளாகும். மொழித்தகைமை பற்றிய இந்த நியதிகள் தமிழும் ஆங்கிலமும் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கமுன்பு முடிவுசெய்யப்பட்டவையாகும். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை அரசாங்க மொழிகளாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டபின் தேவையான மாற்றங்களை இலங்கை அரசைக்கொண்டு செய்விக்க இந்திய அரசு ஏன் தவறியது என்பது தெளிவாகவில்லை. பின்னிணைப்பு 1 ன் 13-ம் பந்தி மாகாணப்பொலிஸ் பிரிவின் அதிகாரங்கள் ஒரு ஆண்டுக்கு அல்லது அதற்கு முன்ஞல் மாகாணப்பொலிஸ் பிரிவு அமைக்கப்படும்வரை தேசிய பொலிஸ் பிரிவிஞல் மேற்கொள்ளப்படும் எனவும் கூறுகிறது.

## ரிசேர்வ் பொலிஸ் - வரைபு பிரேரணையில் இடம் பெருதது

ஆனுல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் உண்மையில் நடந்ததென்ன? இடைக்கால அரசாங்கத்தை உருவாக்காது, பொலிஸ் படையில் தமிழர் எண்ணிக்கையை கூட்டுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காது - சட்டப்படி தனியாக இயங்க முடியாத ஒரு ரிசேர்வ் பொலிஸ் படையை அமைப்பதற்கு அரசாங்கம் விண்ணப்பங்களைக் கோரியது. இதிலும் யாழ்ப்பாணம், மன்னர், முல்லைத்தீவு மாவட்ட விண்ணப்பதாரிகள் தமிழ்மொழி மூலம் விண்ணப்பிக்கலாம். ஆனுல் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பிலிருந்து விண்ணப்பிப்பவர்

கள் தமிழ் அல்லது சிங்கள மொழி விண்ணப்பதாரிகளாயிருக்கலாம். கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களிலிருந்து விண்ணப்பம் கோரப் படவில்லை.

## இந்திய ஆலோசனைகள் தட்டிக்கழிக்கப்பட்டன

1) ஆயுதப் படைப்பிரிவுகளில் இனவிகிதாசாரம் பேணப்படக் கூடிய தாக நியமனங்கள் செய்யப்படவேண்டும்.

2) மாகாண பொலிஸ் பிரிவுக்கு சேர்க்கப்படுவோரில் குறைந்த பட்சம் 80 சதவீதத்தினர் குறித்த மாகாண சபைப் பகுதியிலிருந்து தெரி வானோராயிருத்தல் வேண்டும் என்று இந்தியாவினால் முன்வைக்கப் பட்ட இரு ஆலோசனைகளும் இலங்கை அரசினால் அதன் அரசியல் யாப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபொழுது அப் பட்டமாக தட்டிக்கழிக்கப்பட்டன. **எனவே தமிழர்களைப் பொறுத் தளவில் அவர்கள் தமது தாயகத்திலேயே கூட தொடர்ந்தும் சிங்கள ஆயுதப்படை சிங்களப் பொலிஸ் படையின் இரக்க சிந்தனையை நம்பி வாழவேண்டி வரலாம்**. ஒப்பந்தத்தின் 2.16(c) யில் குறிப்பிட்டிருப் பதைப் போல தமிழர் சமூகத்தின் உடல் பாதுகாப்பை இலங்கை அரசுடன் சேர்ந்து எவ்வாறு இந்திய அரசு வடக்கு கிழக்கு மாகாணங் களில் உறுதிப்படுத்தப் போகிறது? **இந்த 2.16(c) பிரிவைப் பயன் படுத்தி தனது துருப்புக்களை நிரந்தரமாக வடக்கு – கிழக்கு மாகாணங் களில் நிலைகொள்ளச் செய்ய இந்திய அரசு யோசிக்கிறதா? இந்நிலை யில் விடுதலைப் போராளிகளை தனது இராணுவ நடவடிக்கை நிறுத் தத்திற்கு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி முன்நிபந்தனை விதிக்க இந்திய அரசுக்கு என்ன தார்மீக உரிமையுண்டு?**

## (இ) மொழி உரிமை

## தமிழ் மொழி உபயோகம் சம்பந்தமான சலுகைகள்

1956 ஜூன் மாதத்தில் சிங்களம் மட்டுமே இலங்கைத் தீவின் ஒரே அரசகருமமொழி என்ற சட்டத்தை காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயகா நிறைவேற்றினார். அதன் பின்பு அவர் 1958ல் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தை நிறைவேற்றினார். டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கிணங்க 1966 மார்ச் மாதத்தில் ஐ. தே. க. அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங் களில் தமிழ் நிர்வாக மொழியாகவும் பதிவு மொழியாகவும் அமை யக்கூடியதான சில விதிகளை இயற்றியது. டட்லி — செல்வநாயகம் ஒப் பந்தத்தின் படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற நடவடிக்கை களும் நீதிமன்றப்பதிவேடுகளும் தமிழில் இருக்கக்கூடியதாகச்செய்வதற்கு சிங்களமொழிக்கு மட்டுமே நீதிமன்றங்களில் இடமளித்ததான நீதிமன்ற மொழிச்சட்டம் திருத்தப்படுமென இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால் இந்த இணக்கத்திற்கு ஏற்ப வேண்டிய திருத்த சட்டத்தை நிறைவேற்ற ஐ. தே. க. அரசாங்கம் தவறியது.

1972ல் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. அந்நேரம் லங்கா சமசமாஜக்கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்த ஐக்கிய முன்னணி அரசு வகித்தது. இந்த ஐக்கிய முன்னணியே புதிய அரசியல் யாப்பை கொண்டு வந்தது. சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களே அரசியல் அமைப்பு விவகார அமைச்சராக இருந்தார். ஆயினும் இந்த இடதுசாரிக்கட்சியினர் தாங்கள் முன்னின்று உருவாக்கிய அரசியல் யாப்பில் தாங்கள் முன்பு சொல்லி வந்த தமிழ் – சிங்கள மொழிகளுக்கு சம அந்தஸ்து என்ற கொள்கையை கைவிட்டார்கள். மாறாக 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் 1958ஆம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட) ஏற்பாடுகள் சட்டம் ஆகியவற்றைப் பேணப் போவதாகக் கூறியிருந்தனர். நீதிமன்ற மொழியைப் பொறுத்தளவில் சிங்களமே நீதிமன்ற மொழியாக, பதிவு மொழியாக, நீதிமன்ற நடவடிக்கைகள், விளக்கங்கள், கட்டளைகள், தீர்ப்புகள் வழங்கப்படும் மொழியாக முழு இலங்கையிலும் அமையவேண்டுமென சட்டம் விதித்தனர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களில் தமிழ் உபயோகத்துக்கு சில சலுகைகளை வழங்கினார்களானாலும் பதிவுத் தேவைக்காக சகல தமிழ் நடவடிக்கைகளினதும் சிங்கள மொழிபெயர்ப்பு இருக்க வேண்டுமெனச் சட்டம் வகுத்தனர்.

தற்பொழுது அமுலிலுள்ள அரசியல் யாப்பை இன்றைய அரசு 1978ல் நிறைவேற்றியது. இந்த யாப்பின் 4ஆம் அத்தியாயம் 18 தொடக்கம் 25 வரையான விதிகள் - உத்தியோக மொழி நீதிமன்ற மொழியாகியன பற்றிக் கூறுகின்றன. சிங்களமும் தமிழும் 19ஆம் விதியின்படி தேசிய (**உத்தியோகவல்ல**) மொழிகளாக்கப்பட்டுள்ளன. 1966 மார்ச் மாதத்தில் ஐ. தே. க. அரசினால் தமிழ் மொழி உபயோகம் பற்றி நிறைவேற்றப்பட்ட விதிகளும் இன்னும் நீதிமன்றங்களில் தமிழ் மொழி உபயோகம் சம்பந்தமாக மேலும் சலுகைகளும் இந்த யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

## உத்தியோக மொழியாகத் தமிழ்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 2.18ஆம் பந்தியில் கீழ்க் கண்டபடி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "இலங்கையின் உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கும். அத்துடன் தமிழ், ஆங்கிலம் உத்தியோக மொழிகளாக இருக்கும்." ஒப்பந்தத்தின் இந்தப் பகுதி இலங்கை அரசினால் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. தற்போதைய இலங்கை அரசியல் யாப்பின் 18ஆம் விதி கீழ் கண்டபடி இருக்கிறது :– "இலங்கையின் உத்தியோக மொழி சிங்களமாக இருக்கும்"

யாப்பின் 13ஆம் திருத்தப்படி 18ஆம் விதிக்கு சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. "இலங்கையின் உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கும்" என்ற விதி அப்படியே இருக்க புதிய உப விதிகள் சில சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1) தமிழும் ஒரு உத்தியோக மொழியாக இருக்கும்.
2) ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும்.
3) இவ் வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த பாராளு மன்றம் சட்டங்களை இயற்றும்.

தற்போதைய யாப்பில் உள்ள மொழி சம்பந்தமான ஏனைய விதிகள் - 19 தொடக்கம் 25 வரை அப்படியே இருக்கின்றன. ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் என்ற ஏற்பாட்டினதோ அல்லது மொழி சம்பந்தமான 4ஆம் அத்தியாயம் – விதிகள் 18 தொடக்கம் 25 வரை - அமுலாக்கத்திற்கு பாராளுமன்றம் என்ன சட்டம் இயற்றும் என்பது பற்றியோ எவ்வித விளக்கமும் இல்லை. இவ் விளக்கங்கள் தெளிவாக்கப்படாத நிலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென இந்திய அரசாங்கம் எப்படி எதிர்பார்க்க முடியும்? மொழி சம்பந்தமான இந்த இணக்கத்தையாவது இலங்கை அரசு தூய்மையான மனதுடனும் உண்மையாகவும் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளதா? இக் கேள்வியை எழுப்புவதற்கு நியாயம் உண்டு. 1978ஆம் ஆண்டு யாப்பில் தமிழ் ஒரு தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் "தேசிய மொழி" என்ற சொல்லுக்கு வியாக்கியானம் கொடுக்கப்படவுமில்லை தேசிய மொழியின் அந்தஸ்து தெளிவாக்கப்படவுமில்லை. இந்த ஏற்பாடு அமுல் நடத்தப்படாமல் மரணப்படுக்கையிலேயே வைக்கப்பட்டது. ஒப்பந்தம் உண்டோ இல்லையோ சிங்களம் மட்டும் கொள்கை கனகச்சிதமாக தொடர்ந்தும் அமுல் நடத்தப்படுகிறது. 21-3-1988 திகதிய வீரகேசரி செய்தி இதழில் ஒரு செய்தி வெளிவந்தது. அச் செய்தியின்படி நுவரெலியாவில் ஐந்து நாட்களாக ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கு நுவரெலியா மாவட்ட கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு. இக் கருத்தரங்கின் சகல நிகழ்ச்சிகளும் சிங்களத்தில் மட்டுமே நடைபெற்றன. இக் கருத்தரங்கில் கலந்துகொண்டோரில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தமிழ் பாடசாலை அதிபர்கள். 1981ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடு புள்ளி விபரத்தின்படி நுவரெலியா மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் எண்ணிக்கை 236. ஆனால் சிங்களப் பாடசாலைகளின் எண்ணிக்கை 217 மட்டுமே. தமிழ் பாடசாலைகளே பெரும்பான்மையாக உள்ள ஒரு மாவட்டத்தின் பாடசாலை அதிபர்கள் கருத்தரங்கு தனிச் சிங்களத்திலேயே நடத்தப்பட்டது. தமிழுக்கு இடமில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் தமிழுக்கு இடமுண்டு என்று தமிழர்

கள் இந்நிலையில் ஆறுதல் அடையலாமா? பாராளுமன்ற தொடக்க வுரையின் தமிழாக்கம் தமிழில் வாசிக்கப்படுவது மரபு. ஆனல்1988 பெப்ரவரி 25ல் இம்மரபு கைவிடப்பட்டது. இது ஒப்பந்தத்தின் மகிமையோ?

## சிங்களம் மட்டும் சட்டமும் அரசாங்க ஊழியரும்

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக ஆயிரக்கணக்கான அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்கள் தமது ஒய்வு வயதை அடையமுன்பே நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ முன் கூட்டியே இளைப்பாற நிர்ப்பந்திக்கப்பட்டனர். பல நூற்றுக்கணக் கானவர்கள் அரசாங்க சேவையிலிருந்து விலத்தப்பட்டனர். இன்றும் பல ஆயிரக்கணக்கானவர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்படாதோ ஊதி உயர்வு அல்லது பதவி உயர்வு வழங்கப்படாதோ இன்னலுறு கின்றனர். 6-2-1988 திகதிய வீரகேசரி இதழில் – யாழ்ப்பாணம் கச்சேரியின் புள்ளிவிபரப் பகுதியில் கடமையாற்றிய 52 வயதுடைய தமிழ் எழுதுவினைஞர் ஒருவர் சிங்களத்தில் 3-ம் தரம் சித்தியடைய வில்லை என்ற காரணத்தினல் வேலையிலிருந்து விலக்கப்பட்ட செய்தி வந்துள்ளது. இவ்வூழியர் சிங்களச் சோதனையில் 1ம், 2ம் தர சோதனைகளில் ஏற்கனவே சித்தியடைந்தவர் என்ற விபரமும் அச் செய்தியில் இடம்பெற்றிருந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பாவது இலங்கை அரசாங்கம் நிர் வாக ரீதியிலேனும் தமிழை ஒரு உத்தியோக மொழியாக அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்க நியாயம் உண்டு. மொழி சம்பந்தமாக ஒப்பந்தத்தில் கண்டிருக்கும் இணக்கத்தையாவது சிங்க ளத்தை மட்டும் தனி அரசாங்க மொழியாக்கி அதனல் வேலை இழந்தோ ஒய்வுபெற்ருே அல்லது வேறுவகையில் இன்றும் சேவையிலிருந்தும் கஷ்டப்படும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கு முகமாக சிங்களம் மட்டும் அரசமொழியான சட்டம் வந்த தினத்தி லிருந்து - அதாவது 1956 ஜூன் 5-ம் திகதி தொடக்கம் அமுல் செய் யும்படி இந்திய அரசு ஏன் இலங்கை அரசைக் கேட்கவில்லை.

## (ஈ) உத்தேச மாகாணசபை அமைப்பு

திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் ஈழத் தமிழர்கள் தங்கள் அரசியல் கோரிக்கைகளில் எதையும் குறைக்க வேண்டும் என்று ஒரு பொழுதும் கூறவில்லை. தமிழ் ஈழ கோரிக்கையை கைவிடவேண்டும் என்றும் கேட்கவில்லை. ஆனல் திரு. ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவி ஏற்ற பின் தமிழ் ஈழம் என்ற பேச்சிற்கே இட மில்லை என்று கூறினர். ஈழத்தமிழர்கள் இந்திய மாநிலமொன்றின் மக்களுக்கிருக்கக்கூடிய உரிமைகளிலும் கூடுதலாக கோரும் எதற்கும்

தான் ஒத்துப்போக முடியாது என்று பல முறை கூறினர். இந்தியா அளவில் பெரிய நாடு தான். ஆனல் அதன் விஸ்தீரணமும் பெருமை யும் அதன் அயல்நாடு ஒன்றில் உள்ள மக்களின் அரசியல் அபிலாட்சை களில் தனது முடிவை திணிக்க எந்தவிதமான தார்மீக உரித்தையோ சட்ட உரித்தையோ இந்தியாவிற்கு கொடுத்துள்ளதா? இக்கேள்விக் கான மறுமொழி தான் ஒரு புறம் இருக்கட்டும். தாம் இழந்த தமது பழைமையான அரசை மீட்கப்போராடும் ஈழத்தமிழர்களுக்கு ஒரு மாற்று திட்டமாக இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசுக்கு இணை யான ஒரு மாற்று அரசியல் அமைப்பையாவது இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதா? இக்கேள்விக்கு "**நிச்சயமாக இல்லை**" என்ற பதிலை இலங்கை உயர் நீதிமன்றம் இலங்கை அரசியல் யாப்பின் 13-ந் திருத்தம் சம்பந்தமாக வழங்கிய தீர்ப்பில் உறுதியாகக் கூறி யுள்ளது. இந்த திருத்தம் தான் மாகாண சபை திட்டத்தை உருவாக்கி யுள்ளது. இந்த மாகாண சபைத் திட்டத்தைத் தான் இந்தியப்பிரதமர் தமிழர்களுக்கு **சுயாட்சி** வழங்கும் திட்டம் என்று கூறியுள்ளார். ஆனல் இலங்கை உயர் நீதிமன்றமோ பாரதப் பிரதமரின் பேச்சுக்கு ஆப்பு வைத்துள்ளது.

## மாகாண சபை அமைப்பு பற்றி உயர் நீதிமன்றத் தீர்ப்பு

"சட்ட ஆக்க அதிகாரங்களைப் பொறுத்தளவிலோ அன்றி நிறை வேற்று நிர்வாக அதிகாரங்களைப் பொறுத்தளவிலோ தனக்கேயுரிய தும் சுதந்திரமானதுமான அதிகாரங்களை மாகாண சபைகள் பெற் றிருக்கவில்லை. பாராளுமன்றத்திற்கும் ஜனதிபதிக்கும் ஈற்றில் மாகாண சபைகளை கட்டுப்படுத்தும் அதிகாரமுண்டு. மேலும் பாராளுமன்றத் தினல் ஆக்கப்படும் எச்சட்டமும் - ஜனதிபதியினலோ அல்லது சபா நாயகரினலோ பொருத்தமான இடத்தில் உறுதி செய்யப்பட்டவுடன் சட்டமாகிவிடும். அவ்வாறன சந்தர்ப்பத்தில் எந்த நீதிமன்றத்திற்கும் அச்சட்டம் வலுவுடையதா என்பதை ஆராயவோ தீர்ப்பளிக்கவோ யாப்பின் பிரிவு 80(3)ன் பிரகாரம் முடியாது. ஆனல் மாகாண சபை யால் ஆக்கப்படும் ஒரு சட்டத்திற்கு இத்தகைய பாதுகாப்பு கிடை யாது. அதுவே இறுதியான சட்டமாக இருக்ககூடியதான தகைமை களும் அதற்கு கிடையாது. அது எப்பொழுதும் நீதிமன்றினல் பரிசீ லிக்கக்கூடியது. அத்தகைய ஒரு சட்டம் நிறைவேற்றிப் பல ஆண்டு களின் பின்பும் அதன் வலிமைக்கு எதிராக நீதிமன்றத்திலே சவால் விடுக்கலாம்". மேற்படி தீர்ப்பு இலங்கையின் பிரதம நீதியரசர் உட் பட நான்கு பெரும்பான்மை நீதியரசர்களால் வழங்கப்பட்டது. ஐந் தாவது நீதியரசர் பிரதம நீதியரசரின் தீர்ப்புடன் இணங்கியதுடன். குறித்த அரசியல் யாப்பு திருத்தச் சட்டம் யாப்பின் 2, 3, 4 அல்லது 9ஆம் பிரிவுகளுக்கு முரணனதல்ல என்றும் கூறியுள்ளார்.

உயர் நீதிமன்றில் குறித்த திருத்த யாப்பை ஆதரித்த ஒரு மூத்த வழக்கறிஞர் (ஜனதிபதி வழக்கறிஞர்) மாகாணசபை அமைப்புக்கள் கிராமோதய மண்டலங்கள் பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி சபைகளின் விஸ்தரிப்பு மட்டுமே என்ற சட்ட வாதத்தை முன்வைத்துள்ளார். இன்னெரு சந்தர்ப்பத்தில் அவர் அவற்றை அரைவாசி சுயாட்சி அங்கங்கள் என்று வருணித்துள்ளார்.

## மாகாண சபைகள் அமைப்பை நாம் ஏற்றுக்கொண்டால் நாம் செய்த தியாகம் விழலுக்கிறைத்த நீராகும்

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையின் பிரதம தளபதியாகவிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் புனேயில் உழைக்கும் பத்திரிகையாளரிடையே சில மாதங்களுக்கு முன் பேசுகையில் "இந்திய அமைதிப்படை அதன் கடமையின் அரைவாசியை மட்டுமே முடித்துள்ள நிலையில் திருப்பி அழைக்கப்பட்டால் நாம் இதுவரை செய்த தியாகங்களும் செலவு செய்த காலமும் வீணுகும்" என்று கூறியுள்ளார். இந்தியத் தளபதியின் இதே கூற்றையே மாகாணசபை திட்டம் சம்பந்தமாக நம் கொண்டுள்ள நிலைப்பாட்டை விளக்க உபயோகிக்க விரும்புகிறேம். எங்கள் விடுதலைப் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களாகிய நாம் சுமார் இருபதாயிரம் இன்னுயிர்களை பலிகொடுத்திருக்கிறேம். இதில் 2000 பேருக்குக் குறையாதவர்கள் நமது பெறுமதிமிக்க விடுதலைப் போராளிகள். நாற்பதாயிரம் பேர்வரை காயப்பட்டோ அங்க இழப்புக் குள்ளாக்கப்பட்டோ இருக்கிறேம். எங்கள் பெண்கள் நூற்றுக் கணக்கில் கற்பழிக்கப்பட்டு இருக்கிறுர்கள். பல கோடிக்கணக்கான நமது ஆதனங்கள் அழிந்து போய்விட்டன. நம்மவர் இலட்சக் கணக்கில் வெளிநாடுகளில் அகதிகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் அலைந்து அல்லலுற்றுத் திரிகிறுர்கள். முழுத்தமிழினமும் இன்றுவரை மிகக்கடுமையாக உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு தியாகங்களையும் நாம் செய்தது இந்த அரைச்சுயாட்சி உள்ளூராட்சி அமைப்புக்களை பெறுவதற்காகவோ? நிச்சயமாக இல்லை என்பதே எமது மறுமொழி.

சுதந்திரம் வேண்டி நிற்கும் ஈழத் தமிழர் உத்தேச மாகாணசபை அமைப்பை நிராகரிப்பர். **எனவே மாகாணசபைத் தேர்தல்களில் தமிழர் கலந்துகொள்ள வேண்டுமென இந்திய அரசோ இலங்கை அரசோ எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.**

## (உ) மாகாணசபை அமைப்பில் ஆளுநர்

மாகாணசபைகளின் நிறைவேற்றுத் தலைவராக ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்ற பிரேரணை முதன்முதலாக 1986 மே

4ந் திகதி இலங்கை அரசால் பிரேரிக்கப்பட்டுள்ளது. இப் பதவியை உருவாக்க வேண்டிய அரசியல் யாப்புத் திருத்தப் பிரேரணைகள் முதன் முதலில் வரையப்பட்டபோது ஆளுநருக்கு மாகாணசபைகளை ஒத்தி வைக்கும் அதிகாரம் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் மாகாணசபைகளை கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆளுநரின் ஏனைய அதிகாரங்கள் இந்திய அரசியல் யாப்பின் அடிப்படையில் பிரேரிக்கப்பட்டிருந்தன. பங்களூர் மாநாட்டைத் தொடர்ந்து கீழ்கண்ட மாற்றங்கள் உருவாக்கப்பட்டன.

## இந்திய ஆலோசனைகள்—இந்திய யாப்பின் சீர்திருத்தமாயிருந்தன

இலங்கை அரசு இந்திய மாநில ஆளுநருக்குரிய அதிகாரங்கள் கொண்டவராக மாகாண ஆளுநர் இருப்பார் என பிரேரித்த பொழுதும் இந்திய அரசு கீழ்க் கண்டவற்றை கருத்தில் எடுத்து ஆளுநரின் அதிகாரங்கள் வரையப்பட வேண்டுமெனக் கூறியிருந்தது. இந்திய அரசின் இந்த ஆலோசனை அதன் சொந்த அனுபவத்தில் ஏற்பட்டதாயும் இந்தியாவில் உள்ள தெளிவின்மை - சிக்கல்களை இலங்கை யாப்பில் சேர்க்காதிருக்கும் நோக்கம் கொண்டனவாயுமிருக்கலாம். இந்திய ஆலோசனைகள் வருமாறு:-

அ) மாகாண ஆளுநர் தமது கடமைகளை நிறைவேற்ற அவருக்கு உதவி செய்யவும் அறிவுரை வழங்கவும் ஒரு முதலமைச்சரின் கீழான மந்திரி சபை அமைக்கப்படவேண்டும்.

ஆ) ஆளுநர் தமது சொந்த முடிவின்படி செயற்பட வேண்டுமென அரசியல் யாப்பில் குறிப்பிடப்படும் விவகாரங்கள் தவிர்ந்த ஏனைய சகல விவகாரங்களிலும் மந்திரி சபையின் **ஆலோசனைப்படியே செயற்படவேண்டும்**

இ) ஆளுநரின் சொந்த முடிவுகளை அவர் கீழ்க்கண்ட விடயங்களில் மட்டுமே பிரயோகிக்கக் கூடியதாக அவரின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்படவேண்டும்.

I) முதல் அமைச்சர் நியமனம்

II) ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்த வேண்டிய அளவுக்கு அரசியல் திட்டம் செயலிழப்பின் அந்நிலை பற்றி ஜனாதிபதிக்கு அறிக்கை கொடுத்தல்

ஆளுநர் பதவியின் பாற்பட்ட ஏனைய சகல விடயங்களிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினருடன் இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்திய பின் இலங்கை அரசு தனது திட்டங்களை சமர்ப்பித்திருந்தது.

இந்தியா கொடுத்திருந்த ஆலோசனைகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் கீழ்க்கண்டபடி தனது மறுமொழிகளைக் கொடுத்திருந்தது:-

1.1 ஆளுநர் - 1986 செப்டம்பர் மாதப் பிரேரணைகளின் வடிவமைப்பு யாவும் சம்பந்தப்பட்ட இந்திய அரசியல் யாப்புடன் ஒத்திருக்கிறது.

1.2 இந்திய யாப்பில் கட்டுப்பாடுகள் இல்லாதபோதும் இலங்கை அரசாங்கம் ஆளுநரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் பல விடயங்களிலும் ஏற்கனவே ஒத்துக்கொண்டுள்ளது. உதாரணமாக:-

அ) முதல் அமைச்சர் நியமனம் – இந்திய யாப்பு பிரிவு 164 இலங்கை வரைபுப் பிரிவு 154F(H) – இந்திய பிரிவு 164(I) கடைசிப் பகுதி நீக்கப்படுகிறது.

ஆ) மாகாண சபையை கலைத்தல் இந்திய யாப்பின் பிரிவு 174(Z) இலங்கை வரைபுப் பிரிவு 152B(8) – **இந்த அதிகாரம் கைவிடப்படுகிறது.**

1.3 சில விவகாரங்களைப் பொறுத்தளவில் இந்தியாவில் இருப்பதைப் போன்று ஆளுநர் தமது சொந்த முடிவின் படி செயற்படவேண்டும். அமைச்சரின் ஆலோசனையின் பேரில் செயற்படவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படலாகாது.

உதாரணம்:-

அ) மன்னிப்பு – இந்திய யாப்பின் பிரிவு 161 – இலங்கை வரைபுப் பிரிவு 154B(9)

ஆ) சட்டங்களுக்கு சம்மதம் அளித்தல் - இந்திய யாப்பு பிரிவு 200 – 201. இலங்கை வரைபுப் பிரேரணை 154(H) இது ஆளுநரும் ஜனாதிபதியும் சட்டங்களுக்கு சம்மதம் கொடாதிருப்பதற்கான உரித்தைை கூறுகிறது.

இ) சபைக்கு கருத்து தெரிவித்தல் இந்திய அரசியல் யாப்பின் 175-ம் பிரிவு இலங்கை வரைபுப் பிரிவு 154B(10)

1.4 இந்திய யாப்பின் 161, 164, 175, 176, 200, 201, 202, 203(3) 207 ஆம் பிரிவுகள் அவ்விதமே சேர்க்கப்பட்டு, அவ்வியாப்பின் 160-ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணையான ஏற்பாடுகளும் இலங்கை யாப்பில் சேர்க்கப்படுமானால் ஏனைய விடயங்களில் ஆளுநரின் அதிகாரங்களுக்கு, கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு ஆட்சேபனை இருக்காது.

1.5 மேலே சொல்லப்பட்டவை ஏற்கப்படாவிடின் 1986 செப்டம்பர் பிரேரணைகளின்படியே ஆளுநரின் நிலைமை இருக்க வேண்டுமென இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

ஆனால் பின்பு நடைபெற்றவற்றைப் பார்த்தால் இந்திய அரசாங்கம் தான் ஏமாற்றப்படுவதற்கு இடம் கொடுத்துவிட்டதா? மேலே காட்டப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் மறுமொழியில் 1.4-ம் பந்தியில் காட்டப்பட்டுள்ள இந்திய யாப்பின் பல்வேறு பிரிவுகளும் அப்படியே சொல்லுக்குச் சொல் இலங்கை அரசியல் யாப்பின் 13-ம் திருத்தச் சட்டத்திலும் மாகாணசபைகள் சட்டத்திலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் இந்திய யாப்பின் 160-ம் பிரிவிற்கு இணையான பிரிவு இலங்கையின் திருத்தச் சட்டத்தில் இடம்பெறவில்லை. இந்திய யாப்பின் 160-ம் பிரிவு வருமாறு:-

> ''இந்த அத்தியாயத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளுக்கு அப்பால் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதாவது நிலை எழும் பட்சத்தில் ஒரு மாநில ஆளுநரின் கடமைகளை நிறைவேற்ற பொருத்தமானவை என தான் நினைக்கும் ஏற்பாடுகளை ஜனாதிபதி வகுப்பார்''.

ஆனால் 160-ம் பிரிவிற்கு ஒத்த இத்தகைய பிரிவு இலங்கையின் திருத்தச்சட்டத்தில் இல்லாதபோதும் இந்திய யாப்யில் இல்லாத பல விடயங்கள் இலங்கை யாப்பின் திருத்தச்சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன. ஆகவே தமிழர்களுக்கு கொடுக்கப்பட்டவை என்ன? எந்த அளவிற்கு ஆளுநரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன? இக்கேள்விகளுக்கு இந்திய அரசாங்கத்தின் மறுமொழி என்ன?

## நம்பிக்கை மோசடி

எல்லாவற்றிலும் பாரதூரமானது இது:- இலங்கை அரசின் மேலே காணப்பட்ட மறுமொழியின் 1.2(ஆ) பந்தியில் மாகாண சபையை கலைக்கும் ஆளுநரின் அதிகாரம் கைவிடப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த அதிகாரம் கபடத்தனமாக யாப்பு திருத்த சட்டத்தில் இடம் பெறுகிறது. யாப்பு திருத்தச்சட்டத்தின் 154 B(8)(c) பிரிவு வருமாறு:-

''ஆளுநர் மாகாண சபையை கலைக்கலாம்'' இந்திய அரசிற்கு ஒன்றைச் சொல்லிவிட்டு அதற்கு நேர்மாறானதை இலங்கை அரசு செய்துள்ளது. இலங்கை அரசு செய்துள்ள இந்த நம்பிக்கை மோசடி பற்றி இந்திய அரசு என்ன சொல்ல இருக்கிறது?

மேலும் இந்திய அரசு ஆளுநரின் அதிகாரங்களை கட்டுப்படுத்த வேண்டுமென ஆலோசனை கூறியிருக்கத்தக்கதாக அவ்வாலோசனை

களை இலங்கை அரசாங்கம் தூக்கி எறிந்துவிட்டு கீழ்க் கண்ட புற நடைப் பிரிவை 154ஆம் பிரிவின் 9ஆம் பகுதியில் சேர்த்துள்ளது.

"மந்திரி சபையினரின் ஆலோசனையை ஆளுநர் ஏற்காத எந்த இடத்தும் பொது நன்மைக்காக தாம் அப்படிச் செய்ய வேண்டுமென ஆளுநர் கருதுமிடத்து அவர் விடயத்தை ஜனாதிபதியின் கட்டளையைப் பெற அனுப்பலாம்."

இந்த மேலதிக விதியை இலங்கை அரசாங்கம் தமது யாப்புத் திருத்தத்தின்போது கபடத்தனமாக உட்புகுத்தியுள்ளது. இந்திய அரசு இதனை ஏன் அனுமதித்தது? இந்திய அரசு இதற்கு என்ன கூறுகிறது?

## (ஊ) மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள்

ஏனைய ஏழு மாகாணங்களுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரே தராசில் வைத்து கணித்து எல்லா மாகாணங்களுக்கும் ஒரே மாதிரியான அதிகாரப்பரவலாக்கும் மாகாணசபை அமைப்பு முறையானது கடந்த 40 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகளை – கொடுமைகளை – நீக்கும் என நினைப்பது தர்க்க ரீதியானதல்ல. தமிழ் மக்கள் பிரச்சனையை தீர்க்கவே மாகாணசபை அமைப்பு முறையென்றால் அதே மாகாணசபை அமைப்பு முறை யார் பிரச்சனையை தீர்க்க காலியிலும், அனுராதபுரத்திலும் அமுலாக்கப்பட வேண்டும்? இந்திய மாநிலங்களோடு இலங்கை மாகாணங்களை ஒப்பிட முடியாது. இந்திய மாநிலங்கள் மொழி, பண்பாட்டு முறைகளில் வேறுபடும் இனங்களின் தாயகங்கள். பொதுப்படையாக இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம். ஏனையவை சிங்களவரின் தாயகம். இன, பண்பாட்டு ரீதியில் வடக்கு கிழக்கு மக்கள் ஒருவராக இருக்கையில் ஏனைய மாகாணங்களில் உள்ளவர்கள் மலை நாட்டுத் தமிழர் நீங்கலாக–வேறு ஒரு மொழி, இன, மத அடிப்படையில் ஒன்றிய இனமாகும். இந்தியாவிலிருக்கும் வேறுபாடுகள் காரணமாக அங்கு மாநிலங்களுக்கு கூடுதலான அதிகாரம் வேண்டும் என்ற குரல் பொதுவாக அனைத்து மாநிலங்களிலும் எழுகின்றது. இதன் காரணமாகவே இந்திய அரசு சக்காரியா ஆணைக்குழுவை நியமித்தது. இக் குழு வெளிநாட்டுச் செலவாணியில் கூட பங்கு பெறக்கூடிய உரிமை உட்பட மேலும் கூடுதலான அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென விதந்துரை செய்திருப்பதாக அறியக் கிடக்கிறது. ஆகவே இந்தியாவில் இருக்கின்றளவு அதிகாரப் பரவல் தானும் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் போதுமானதாயில்லை. இலங்கையின் ஏனைய ஏழு மாகாணங்களைப் பொறுத்தளவில் அவை அதிகாரப் பரவலாக்கலில் அக்கறையற்றவை. அவைகளைப் பொறுத்தளவில் மத்

திய அரசுகூடஒரு பெரிய மாகாணசபைதான் – அதாவது கூடுதலான இடங்களை தன்னகத்தே கொண்டுள்ள சிங்கள மாகாணம். இந்த முன்னுரையுடன் அதிகார பரவலாக்கல் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்.

## மாகாண சபைப் பட்டியல் - 31 அதிகாரங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

மாகாணசபைக்கு 37 அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன இவற்றின் பல்வேறு உப பிரிவுகளையும் கூட்டும்போது தொகை 77ஆகிறது. இந்திய மாநிலங்களின் அதிகாரப்மட்டியல் 61 விடயங்களை கொண்டுள்ளது. ஆனால் இலங்கையில் பரவலாக்கப்பட்ட 77 அதிகார விடயங்களில் 31ன் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களின் அதிகார விடயங்களில் 11க்கே கட்டுப்பாடு உண்டு. இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ள 31 அதிகார விடயங்களும் வருமாறு:

3. **கல்வி** கட்டுப்பாடுகள் யாப்பு திருத்தச் சட்டத்தின் பின்னிணைப்பு IIIல் வெளியிடப்பட்டுள்ளன. கல்விக் கொள்கை, திட்டம் எதையும் தீர்மானிக்க மாகாணசபைக்கு அதிகாரமில்லை. ஏன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி போன்ற "தேசிய" கல்லூரிகளை மாகாணசபை நிர்வகிக்க முடியாது. இந்தப் பட்டியல் வளர்வதையும் தடுக்க முடியாது.

4.1 **உள்ளூராட்சி சபைகள்** - இவற்றின் அமைப்பு வடிவம் அதிகாரம் ஆகியன பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கமையவே இருக்கும்.

(உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் மேற்பார்வையும் கணக்காய்வு, நீதி வழங்கல் சம்பந்தமான விசாரணைகள் பாராளுமன்ற சட்டத்திற்கமைவாக இருக்கும்.)

5.1 **மாகாண வீடமைப்பு நிர்மாணம்** – தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை திட்டங்கள் மாகாண சபைக்கு அப்பாற்பட்டவை.

6. தேசிய நெடுஞ்சாலைகள், பாலங்கள் அத்தகைய நெடுஞ்சாலைகளிலுள்ள பாதைகள் (ferries) மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டவை. (குறிப்பு:- தேசிய நெடுஞ்சாலைகள் யாவை என்பதற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்படவில்லை)

9.1 **விவசாயம் – கமத்தொழிற்சேவை** மாகாணங்களுக்கிடையேயான நீர்ப்பாசனம் – காணி வழங்கல் திட்டங்கள், அரச காணி, பெருந்தோட்ட விவசாயம் மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டவை.

9.3 தேசிய விவசாய ஆய்வு நிலையங்கள் மாகாண சபை அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவை.

11. சுகாதாரம்

11.1 போதனு வைத்தியசாலைகள் – விசேஷ தேவைகளுக்கான வைத்தியசாலைகள் மாகாண சபைக்கு அப்பாற்பட்டவை. இதன்படி யாழ்ப்பாணம் வைத்தியசாலையும் நமது அதிகாரத்தில் இல்லை.

11.4 மாகாணசபைகளின் கீழ் இயங்கும் ஏனைய வைத்தியசாலைகளுக்கான மருந்துகளை தருவிக்கும் அதிகாரமும் மாகாண சபைக்கு கிடையாது,

12. **சுதேச வைத்தியம்** – தமிழ் முஸ்லிம் வைத்திய முறைகளான சித்த – யூனுனி வைத்தியசாலைகளை நிறுவும் அதிகாரம் மாகாண சபைகளுக்கில்லை.

14. **நகை அடைவு** – வங்கிகளினுல் நடத்தப்படும் இந்த அடைவு மாகாண சபை அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது.

18. **காணி** - இவ்விடயம் சம்பந்தமான கட்டுப்பாடுகள் யாப்பு திருத்தச் சட்டத்தின் பின்னிணைப்பு II-ல் உள்ளன.

19. **நீர்ப்பாசனம்** – ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களினூடாக பாயும் ஆறுகளும் அவற்றிலிருந்து நீர்ப்பாசனமும் காணி அபிவிருத்தித்திட்டங்களும் மாகாண சபை அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவை.

21. **விவசாய – கைத்தொழில் முயற்சிகளும் பிறவும்** – இவை தேசியக் கொள்கைக்கு அமைவாகவும் - அரசாங்கமும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் அதிகாரத்துக்கு அமைவாகவும் மட்டுமே இருக்கும். இது பற்றி மேலும் கீழே விளக்கப்படுகிறது.

24. **சடலம் புதைத்தலும் - சவச்சாலைகளும்** – தேசிய நினைவு நிலையங்களாக பாராளுமன்றத்தாலோ அதன் சட்டங்களாலோ பிரகடனப்படுத்தப்படுபவை மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டவை.

25.2 **பழைய – வரலாற்று நினைவுச்சின்னங்கள்** – தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென பாராளுமன்ற சட்டத்தினுல் பிரகடனப்படுத்தப்படுபவை - மாகாண சபை அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவை.

26. **சுரங்கங்களும் – கனிப்பொருள் அபிவிருத்தியும்** - பாராளுமன்றத்தினுல் ஆக்கப்படும் சட்டம் **அனுமதிக்குமளவே** இவ்வதிகாரங்களை மாகாண சபைகள் பெறலாம்.

27. **மாகாணத்துக்குள் மட்டுமே இயங்கக்கூடிய கூட்டுத்தாபனங்களை உருவாக்குதல்** – வியாபாரக் கூட்டுத்தாபனங்கள், வங்கி, காப்புறுதி, நிதிக் கூட்டுத்தாபனங்கள் மாகாண சபைக்கு அப்பாற்பட்டவை. இது சம்பந்தமாக கீழே மேலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

29.1 **கலையரங்குகளும் பிறவும்** – படக்காட்சிக்கான திரைப் படங்களை அனுமதிக்கும் அதிகாரம் மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது.

29.2 **விளையாட்டுத்துறை** – தேசிய விளையாட்டுச் சங்கம் மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது.

30. அனுமதிக் கட்டணங்கள் – வரி அறவிடல் மாகாண சபை அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது.

33. எந்த நீதி மன்றத்திலும் அறவிடப்படும் கட்டணம் மாகாண சபைக்கு அப்பாற்பட்டது.

34. **மின்சக்தி** – நீர் மின்சக்தியும் – தேசிய தேவை வலயத்திற்கு தேவைப்படும் மின் சக்தி உற்பத்தியும் மாகாண சபைக்கு அப்பாற்பட்டவை.

35. **கடன் பெறுதல்** – பாராளுமன்றத்தினல் ஆக்கப்படும் சட்டம் நிர்ணயிக்கும் எல்லைக்குள் மட்டுமே மாகாண சபைக்கு அதிகாரம் உண்டு.

36.1 **மொத்த விற்பனை வரவு வரிகள்** – எல்லைகளும், விலக்களிப்புகளும் பாராளுமன்றத்திஞல் இயற்றப்படும் சட்டத்திற்கு அமையும்.

36.2 **பணைய வரிகள் முதலியன** – தேசிய லொத்தர்களும், இலங்கை அரசிஞல் ஒழுங்கு செய்யப்படும் அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளும் மாகாண சபைக்கு அப்பாற்பட்டவை.

36.4 **மோட்டார் வாகனங்கள் – அனுமதிக்கட்டணம்** – பாராளுமன்றத்திஞல் இயற்றப்படும் ஏதும் சட்டத்தின் வரம்புகளுக்குள்ளும் புற நடைகளுக்குள்ளும்.

36.17 **காணி முதலியவற்றிற்கான வரி அறவிடல்** - பாராளுமன்றம் இயற்றும் சட்ட மூலம் அனுமதிக்கும் வரையறைக்குள் மட்டும்

36.18 **கனிப்பொருள் உரிமைகள் மீதான வரி** – பாராளுமன்றம் இயற்றும் ஏதும் சட்டத்திஞல் நிர்ணயிக்கப்படும் வரையறைகளுக்குள்ளும் புறநடைகளுக்குள்ளும்.

36.20 **ஏனைய வரிகள்** – பாராளுமன்றம் இயற்றக்கூடிய எந்த சட்ட வரைகளுக்குள்ளும் – அவற்றின் கீழும்.

37. **சுற்றுடல் பாதுகாப்பு** – பாராளுமன்றத்தினுல் இயற்றப்படக் கூடிய எந்த சட்ட வரையறைக்குள்ளும் மட்டும்.

மேலே காட்டப்பட்டுள்ள 31 விடயங்களில் 12 விடயங்கள் பாராளு மன்றம் இயற்றக்கூடிய சட்டங்கள் விதிக்கும் எல்லைக்குள்ளேயே மாகாண சபையால் செயற்படுத்தலாம். இந்தப் பன்னிரண்டில் எட்டு வரி விதிப்பு சம்பந்தமானது. இந்தப் பாராளுமன்றச் சட்டங்கள் என்ன என்பது குறிப்பிடப்படவில்லை. எனவே மாகாணங்களின் அபி விருத்தி – செலவு மதிப்பீடு முதலியனவற்றை மாகாண சபைகளினுல் முன் கூட்டியே திட்டமிட முடியாது. இந்திய மாநிலங்களின் அதிகாரங் களில் இரண்டு மட்டுமே மத்திய பாராளுமன்ற சட்டங்களின் வரை யறைக்கு கீழ்ப்படிய வேண்டியனவாய் இருக்கின்றன. கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களைப் பொறுத்தளவில் மத்திய அரசு அதிகாரப் பட்டியலில் உள்ள விடயங்கள் அதே அதிகாரம் மாநில அரசுகளுக்கும் இருக்குமிடத்து முன்னையவை எந்த அளவுக்கு கட்டுப் பாடு பின்னையவற்றின் மீது கொண்டு வரும் என்பது இந்திய அரசியல் யாப்பிலே கூறப்பட்டுள்ளது.

## தேசிய நலன் — புதிய கண்ணேட்டம் தேவை

பல விடயங்களிலும் "தேசிய நலன்" பற்றி பிரஸ்தாபிக்கப்பட் டுள்ளது. "தேசியம்" "தேசியமயமாக்கல்" என்ற பதங்களுக்கு "சிங்களம்" "சிங்களமயம்" என்பதே இலங்கையின் வரலாறு தரும் அர்த்தம். ஆனுல் இந்திய – இலங்கை உடன்பாடு இந்த தேசியம் பற்றிய கருத்தை மீளாய்வு செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத் துகிறது. இலங்கையிலுள்ள நான்கு இனத்தவர்களும் சம நிலையுடைய வர்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளபடியால் நான்கு இனத்த வரும் ஒரு விடயத்தில் ஒரே கருத்தை தெரிவிக்கும் பொழுதுதான் ஒரு தேசிய நோக்கு அல்லது கருத்து அல்லது கொள்கை கோட்பாடு எதுவேனும் உருவாகமுடியும். பெரும்பான்மை சிறுபான்மை என்ற நிலை எந்த தேசிய அமைப்பிலும் உருவாகக்கூடாது. இதை உறுதி செய்ய தேசிய அமைப்புக்களில் இருக்கவேண்டி உள்ள நான்கு இனப் பிரதிநிதிகளுக்கும் எந்தத் தீர்மானத்தையும் நிராகரிக்கும் "வீற்றே" அதிகாரம் வேண்டும்.

## மாகாணங்கள் எட்டு அதிகாரங்களை பிரயோகிக்கமுன் பாராளுமன்றம் சட்டம் இயற்றவேண்டும்.

மாகாண அதிகாரப்பட்டியலில் காணப்படும் 26, 35, 36.1, 36.4 36.17, 36.18, 36.20, 37-ம் அதிகாரங்களை மாகாணங்கள் செயற்

படுத்தமுன் பாராளுமன்றம் அதற்கான சட்டத்தை நிறைவேற்றவேண்டு மென்று இலங்கை அரசியல் யாப்பின் திருத்தச்சட்டம் சொல்கிறது. இவற்றில் மிகப் பிரதானமான கடன் வாங்கும் அதிகாரமும் (35) உள்ளடங்கியிருக்கிறது. இற்றை வரை பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டிய இச்சட்டங்கள் சம்பந்தமான குசுகுசுப்பும் இல்லை! கிசு கிசு வும் இல்லை!!

## இந்திய மாநில அதிகாரங்கள் — மாகாண சபை அதி காரங்கள் — ஓர் ஒப்பு நோக்கு.

இலங்கை அரசு தனது வரைபு பிரேரணைகளில் "இந்திய யாப்பில் காணப்படும் மாநில அதிகாரப்பட்டியலில் காணப்படும் அதிகாரங்களில் பெருமளவு ஒத்த அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்" என வலியுறுத்தியுள்ளது. ஆனால் இந்திய மாநிலங்களின் அதிகாரப் பட்டியலையும் – இலங்கை மாகாண சபைகளின் அதிகாரப்பட்டியலையும் ஒப்புப்பார்க்கும்பொழுது இந்திய மாநிலங்களின் அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களில் ஆறு மட்டுமே இலங்கை மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை இந்திய மாநிலப்பட்டியலிலுள்ள 12, 20, 43, 54, 64, 66-ம் அதிகாரங்களாகும். இந்திய மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள 27 அதிகாரங்கள் இலங்கை மாகாண சபைகளுக்கு இல்லை. இந்த 27-ல் 13 இறைவரி சம்பந்தப்பட்டவை என்பதும் கவனிக் கத்தக்கது. இந்திய மாநில அதிகாரப்பட்டியலில் காணப்படும் 17 அதி காரங்கள் இலங்கை மாகாண சபைப்பட்டியலில் **பாரிய மாற்றத்துடன்** இடம் பெறுகின்றன. இவ்விதம் **பாரிய மாற்றத்துடன்** இடம்பெறும் அதிகாரங்கள் வருமாறு:-

### இந்திய மாநில பட்டியல்

**இல.**

5. **உள்ளூராட்சி** – உள்ளூராட்சி சபைகளின் வடிவம் அமைப்பு இலங் கைப் பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படுவதுடன் – கணக்காய்வு நீதி விசாரணைகள் பற்றியவையும் இலங்கைப் பாராளுமன்றச் சட்டத்திற்கமைவாக இருக்கும் - (மேலேயுள்ள மாகாண சபைப் பட்டியலின் 4-ம் இலக்கத்தைப்பார்க்க)

6. **சுகாதாரம்** – போதனு வைத்தியசாலைகள், விசேட தேவைகளுக் கான வைத்தியசாலைகள், இன்னும் மாகாண சபைகளுக்கு விடப் பட்ட வைத்திய சாலைகளுக்கான மருந்துகள் உட்பட சகல மருந்து வகைகளையும் பெறும் உரிமை மாகாண சபைக்கு இல்லை. (யாழ்ப் பாண வைத்தியசாலையைக்கூட நிர்வகிக்க மாகாண சபைக்கு உரிமை இல்லை)

4. **சீர்திருத்த நிலையங்கள்** – மறியல் சாலைகள் மாகாண சபையின் கட்டுப்பாடுக்குள் இல்லை.

8. **குடிவகை** – குடிவகை உற்பத்தி (இது கள்ளிறக்குதலை உள்ளடக்கும்) மாகாண சபைக்கு இல்லை. (இது சம்பந்தமான குறிப்பு கீழும் இடம்பெறுகிறது. பார்க்க)

14. **விவசாயம்** – மாகாணங்களுக்கிடையேயான நீர்ப்பாசனம், காணி குடியமர்த்தும் திட்டங்கள், அரச காணி, பெருந்தோட்ட விவசாயம் ஆகியன மாகாண சபை அதிகாரங்களுக்குள் இல்லை.

15. **விலங்கு விவசாயம்** – விலங்கு வைத்தியமும் பயிற்சியும் மாகாண சபைகள் அதிகாரப் பட்டியலில் இல்லை. (ஆனால் இவை ஒருங்கியை நிரலில் இடம் பெறுகிறது.)

21. **மீன்பிடித்தல்** – இது மாகாணப்பட்டியலில் அறவே கிடையாது. ஒருங்கியை நிரலில் தான் இடம்பெறுகிறது. நாட்டுக்குரிய கரையோரம் தவிர்ந்த பரந்த கடலில் மீன் பிடிக்கும் அதிகாரம் மாகாணங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

23. **சுரங்கம் முதலியன** - இவ்விடயம் சம்பந்தமாக – இந்திய மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் மத்திய அரசிற்காக ஒதுக்கப்பட்டதைத்தவிர இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் இவ்வதிகாரங்கள் இலங்கைப் பாராளுமன்றம் தீர்மானிக்கும் அளவிற்கு மட்டும் மாகாணங்களுக்கு வழங்கப்படும் என்றிருக்கிறது. ஆனால் இலங்கைப் பாராளுமன்றம் எவ்வித சட்டவாக்கமும் இதுவரை செய்யவில்லை. பாராளுமன்றம் ஏதும் சட்டம் ஆக்காவிட்டால் முழு அதிகாரமும் மத்திய அரசுக்கே இருக்கும் என்பது சொல்லத்தேவையில்லை.

24, 26, 27. **கைத்தொழில் முதலியன** - இதுபற்றி பின்னால் பிறிதாக ஆராயப்பட்டுள்ளது.

31. **தங்குமிடங்கள்** – "ஓட்டல்கள்" – மாகாண சபை பட்டியலில் இடம்பெறவில்லை. ஆனால் ஒருங்கியை பட்டியலில் இடம்பெறுகிறது.

33. **விளையாட்டுகள்** – "தேசிய விளையாட்டு கழகம்" மாகாண சபையின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

34. **பந்தயங்கள் – சூதாட்டங்கள்** – இவற்றிற்கு அனுமதிப்பணம் பெறும் அதிகாரமும் வரி அறவிடும் அதிகாரமும் மாகாண சபைக்கு இல்லை.

45. **காணி இறைவரி** - உரிமைப்பதிவுகளுக்கான அளப்பனவுகள் – வரி பராதீனப்படுத்தல் ஆகியவை மாகாண சபை அதிகாரத்துக்குள் இல்லை.

49. **காணிகள், கட்டடங்கள் மீதான வரி**- பாராளுமன்றம் சட்டமூலம் அனுமதிக்கும் அளவே இவ்வதிகாரம் மாகாண சபையால் அமுல் செய்யப்படலாம். பாராளுமன்றம் சட்டம் எதையும் இன்னும் நிறைவேற்றவில்லை.

62. **ஆடம்பரப் பொருட்கள் முதலியன மீதான வரி** – பந்தயங்களின் போது அவற்றிற்கு மட்டும் வரிவிதிக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய மாநில அதிகாரப்பட்டியலில் உள்ளவை — ஆனல் இலங்கை மாகாண சபைக்கு இல்லாதவை.

7. யாத்திரைகள் – (ஒருங்கியை நிரலில் இது சேர்க்கப்பட்டுள்ளது.)

13. பட்டிகளும், கால்நடை அத்துமீறல்களும்.

17. தண்ணீர் – நீர் விநியோகம், நீர்ப்பாசனம், வாய்க்கால், வடிகால் நீர்தேக்கம், நீர் சேமிப்பு, நீர் மின்வலு – இவை மத்திய அரசின் அதிகாரப்பட்டியல் 55-ல் இருப்பதற்கு அமைவாக.

22. பராபரிப்பு நீதிமன்றங்கள்

25. வாயு, வாயு உற்பத்தி

30. காசு கடன் கொடுத்தலும் - காசு கடன் கொடுப்போரும் - விவசாய கடன் நிவாரணம்.

31. தங்குமிடங்களும் – தங்குமிடம் நடத்துவோரும்.

35. மாநிலத்திற்குரிய அல்லது மாநிலத்தின் ஆட்சியிலுள்ள காணிகள் கட்டடங்கள், வேலைகள்.

37. மாநில அரச சபைகளுக்கான தேர்தல்கள் - மத்திய பாராளுமன்றின் ஏதேனும் சம்பந்தப்பட்ட சட்டத்துக்கமைய.

39. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் – மாநில உறுப்பினர்களுக்கு.

40. மாநில அமைச்சர்களின் சம்பளங்களும் ஏனைய கொடுப்பனவுகளும்.

42, மாநில ஓய்வூதியப் பணம்

44. புதையல்கள்

46. விவசாய வருமான வரி

47. விவசாயக்காணி உரிமை பெறும்பொழுதான வரிகள்

48. விவசாயக் காணிகள் சம்பந்தமான பூதல் வரி.

51. மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் கீழ்க்காணும் பொருள்களின் மீதான கலால்வரியும் இந்தியாவில் ஏனைய இடங்களில் உற்பத்தியாக்கப்படும் ஒத்த பொருள்களின் வரிகளைச் சமமாக்க வரிவிதிக்கும் அதிகாரமும்.

அ) மக்களின் உபயோகத்துக்கான மதுபானங்கள்

ஆ) அபின், கஞ்சா மற்றும் போதைப்பொருள்கள் - ஆனால் மருந்து, சுகாதார உற்பத்தி பொருள்களில் உபயோகப்படுத்தப்படும் மது அல்லது (ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் புறநீங்கலாக.

52. உள்ளூர்பகுதியில் நுகர்ச்சி, உபயோகம் அல்லது விற்பனைக்கு உள்ளூருக்கு வரும் பொருள்களின் மீதான வரி.

53. மின் பாவனை அல்லது விற்பனை மீதான வரி.

54. பொருள் விற்பனை அல்லது கொள்முதலின்போது வரி. ஆனால் செய்திப் பத்திரிகை இதில் அடங்காது. இவ்வதிகாரம் மத்திய அரசின் அதிகாரப்பட்டியல் 92 A க்கு அமைவாக இருக்கும் (மத்திய அரசின் 92 A இலக்க அதிகாரம் மாநிலங்களுக்கிடையேயான வியாபாரம், வர்த்தகம் சம்பந்தமானது).

55. செய்திப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, விளம்பரங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்கள் மீதான வரி.

58. மிருகங்கள், வள்ளங்கள் மீதான வரி.

60. உயர்தொழில்கள், சுயதொழில்கள், தொழில்கள்மீதான வரி.

61. ஆள் வரி,

62. பொழுதுபோக்கு, பந்தயம் கட்டல், சூது முதலியன உட்பட ஆடம்பரப் பெருட்கள் மீதான வரி.

63. மத்திய அரசுப் பட்டியலில் காணப்பட்டுள்ள ஆவணங்கள் தவிர்ந்த ஏனைய ஆவணங்களிற்கான முத்திரை வரி.

65. இந்தப் பட்டியலில் உள்ள எந்தவொரு அதிகாரம் சம்பந்தமாக உயர் நீதிமன்றம் (Supreme Court) தவிர்ந்த ஏனைய நீதிமன்மன்றங்களின் நீதி அதிகாரமும் ஏனைய அதிகாரங்களும்.

இலங்கை அரசு வலியுறுத்திய பிரகாரம் எந்த அளவிற்கு அது இந்திய யாப்பின் பட்டியல்களை அனுசரித்துள்ளது என்பதை வாசகர்களே இப்பொழுது தீர்மானித்துகொள்ளலாம்.

மாகாண சபைப் பட்டியல்களில் உள்ள சில விடயங்களின் முக்கியத்துவம் கருதி அவற்றைச் சிறிது கூடுதலாக இனி ஆராயவேண்டியுள்ளது.

## விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் ஏனைய திட்டங்கள்.

இது மாகண சபையின் 21-ம் இலக்க அதிகாரமாகக் காட்டப்பட்டு கீழ்க்கண்டபடி அமைந்துள்ளது.

"அபிவிருத்தி, திட்டமிடல் ஆகியவை சம்பந்தமான தேசியக் **கொள்கை உருவாக்கப்பட்டு அமுலாக்கப்படுவதற்கு அமைவாக** மாகாண எல்லைக்குள் விவசாய, கைத்தொழில், வர்த்தக, வியாபார மற்றும் வருவாய் உருவாக்கும் முயற்சிகளை உருவாக்கவும், முன்னேற்றவும், ஈடுபடவுமான அதிகாரம். **ஆனால் அரசாங்கமும் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் அதிகாரத்தை பாதிக்காமல் இவ்வதிகாரம் மாகாண சபைகளுக்குண்டு".**

இவ்விடயங்கள் சம்பந்தமாக இந்திய அரசியல் யாப்பில் கீழ்க் கண்டபடி இருக்கிறது:-

## மாநில அதிகாரப் பட்டியல்

14. விவசாயம் – விவசாயக்கல்வி, ஆராய்ச்சி, பயிர் அழிக்கும் பூச்சிகளுக்கு எதிரான பாதுகாப்பும் பயிர் நோய்களுக்கெதிரான பாதுகாப்பும்

24. மத்திய அரசப்பட்டியலின் 7ம், 52ம் இலக்கங்களுக்கு அமைவாக கைத்தொழில்கள்

மத்திய அரசுப் பட்டியலின் 7ம் இலக்க அதிகாரம் தேசிய பாதுகாப்பு அல்லது யுத்தம் நடத்துதல் ஆகிய விடயங்களுக்கு அவசியமான கைத்தொழில்கள் என பாராளுமன்றம் இயற்றும் சட்டம் நிர்ணயிக்கும் கைத்தொழில்களை குறிப்பிடுகிறது.

மத்திய அரசுப் பட்டியலின் 52-ம் இலக்க அதிகாரம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது பொது நன்மைக்கு உகந்ததானது எனப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டத்தில் குறிப்பிடப்படும் கைத்தொழில்கள் எனக்கூறுகிறது.

இந்திய யாப்பில் காணப்படும் குறித்த 7, 52-ம் பிரிவுகள் அப்படியே சொல்லுக்குச்சொல் இலங்கை யாப்பில் ஒதுக்கிய நிரலில் இடம் பெறுகின்றன. ஏற்கனவே "தேசிய கொள்கை" பற்றி விமர்சித்து எப்படி இந்த "தேசியம்" என்ற சொல் "சிங்களம் மட்டும்" என்ற சொற்களுடன் ஒத்த கருத்தையே இலங்கையில் கொண்டிருக்கிறது என்பதை விளக்கியுள்ளோம். தற்பொழுது தமிழ் பகுதியிலுள்ள அனைத்து அரச கூட்டுத்தாபன கைத்தொழில்களும் கொழும்பிலிருந்து கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த கூட்டுத்தாபன இயக்குநர்கள் சபைகள் கிட்டத்தட்ட முழுமையாக சிங்களவரையே கொண்டுள்ளன. இக் கூட்டுத்தாபனங்கள் சிங்களவருக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க பயன்படுத்தப்படுகின்றன. இவ்விதம் வேலை வாய்ப்புக்களை கொடுப்பதன் மூலம் சிங்களவர்களை தமிழ் பகுதிகளில் குடியேற்றவும்

முடிகிறது. இத்தனைக்கும் வேலையற்றோர் தமிழ்ப்பகுதிகளில் இருந்து கொண்டேயிருக்கின்றனர். இவ்விடயத்தில் வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கும் ஏனைய ஏழு சபைகளுக்கும் இடையே ஏற்பட்டே தீரப் போகும் நலமுரண்பாடுகளை நாம் வலியுறுத்தவேண்டும். இந்தியாவில் போன்று கூடிய அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கவேண்டுமென நாங்கள் கோரும் அதே வேளை ஏனைய ஏழு மாகாண சபைகளும் இது பற்றி கவனம் செலுத்துவது மிகக்குறைவாகவேயிருக்கும். இவ்விடயம் சம்பந்தமாக காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலைக்கான சிங்கள பாதுகாப்பு ஊழியர்கள், கந்தளாய், ஹிங்குரான (இதன் பழம் தமிழ் பெயர் இறக்காமம்) ஆகிய இடங்களில் உள்ள சீனித்தொழிற்சாலை களில் ஆயிரக்கணக்கான சிங்களவருக்கு வேலை கொடுத்து அவர்களை தமிழ்ப் பகுதியில் குடியமர்த்தியமை, கொண்டாச்சி முந்திரிகைப் பெருந்தோட்ட விவசாயத்துக்கென ஆயிரக்கணக்கான சிங்களவர்களை அங்கு கூலியாட்களாக நியமித்து குடியமர்த்தியமை ஆகியவை நினைவு கூரத்தக்கன. சில வாரங்களுக்கு முன் கூட 2000 சிங்களவர் ஹிங்கு ரான சீனித்தொழிற்சாலைக்கு கரும்பு பயிரிடும் விவசாயிகளாக நியமிக் கப்பட்டு தமிழ் பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். ஆகவே உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதியாகவும் – அத்துடன் தமிழ் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிங்கள குடியேற்றங்களை நீக்கவும் வருங்காலத்தில் சிங்கள குடியேற்றங்களை தடுக்கவும் மேலே காட்டப் பட்டுள்ள புறநடை ஏற்பாடு அவசியம் நீக்கப்படவேண்டும் வடக்கு கிழக்கில் தற்போதுள்ள அரச கைத்தொழில், கூட்டுத்தாபனங்கள், சபைகள், மற்றும் கைத்தொழில் யாவும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டும்.

**மதுபானங்கள்**

இது மாகாண சபைப் பட்டியலில் 23-ம் இலக்க அதிகாரமாகக் காட்டப்பட்டு இவற்றை வைத்திருத்தல், கொண்டு செல்லல், வாங்கு தல் விற்றல் ஆகியவை மட்டும் மாகாண அதிகாரங்களாகக் குறிப் பிடப்பட்டுள்ளன. மதுபான உற்பத்தி அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஆனால் மதுபான உற்பத்தி அதிகாரம் இந்திய மாநிலங்களின் அதிகா ரங்களுள் ஒன்றாக மாநில அதிகாரப்பட்டியலின் 8-ம் இலக்கத்தில் இடம்பெறுகிறது. இலங்கையில் இந்த அதிகாரம் மாகாண சபை அதிகாரப்பட்டியலிலிருந்து கைவிடப்பட்டது வேண்டுமென்றே செய் யப்பட்டதா அல்லது தவறுதலாக நடைபெற்றதா? எமக்குத் தெரி யாது. எது எப்படியிருந்தபொழுதும் இது சம்பந்தமான விளக்கத்தை இந்திய அரசு தான் தமிழ் மக்களுக்கு கொடுக்கவேண்டும். ஆனால் இது ஒருபுறமிருக்க இவ்வதிகாரம் மாகாண சபைக்கு கொடுக்கப்படா தது பனைக் கைத்தொழிலை வெகுவாகப் பாதிக்கும். இக்கைத்தொழில் எமது பகுதியில் முக்கியமானது. இது நிவர்த்தி செய்யப்படவேண்டி யது அவசியம்.

**கூட்டுத்தாபனங்களை உருவாக்கல்**

இலங்கை யாப்பின் மாகாண சபைப்பட்டியலின் 27-ம் பிரிவு மாகாணத்துக்குள் அடங்கக்கூடிய நோக்கங்களை கொண்ட கூட்டுத் தாபனங்களை உருவாக்கவும் ஒழுங்குபடுத்தவும் சட்டப்படி மூடிவிடவு மான சில புறநடைகளுக்கமைய மாகாண சபைக்கு உண்டெனக் கூறுகிறது. **அந்தப்புற நடைகள் வியாபார கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், காப்புறுதி மற்றும் நிதிக்கூட்டுத்தாபனங்களை மாகாண சபைகள் நடத்த முடியாதென்பதாகும்.**

தற்பொழுது பங்கு வியாபாரங்களை கச்சேரிகளில் பதிவு செய்ய லாம். ஆனால் கம்பனிகள் கொழும்பிலுள்ள கம்பனிப் பதிவாளர் அலு வலகத்திலே தான் பதியப்படவேண்டும். இன்றுள்ள கம்பனிகளை ஆக்கு வதும் சட்டப்படியான ஆவணங்களை தாக்கல் செய்வதும் இன்றுள்ள நிலையில் மாகாணங்களிலிருந்து செயல்படுவது சிரமமானது. இவ்விதம் அதிகாரம் கொழும்பில் குவிக்கப்பட்டிருப்பதானது மாகாணங்களில் கம்பனிகள் உருவாவதைப் பாதிக்கும் ஒரு காரணியாக இருக்கலாம். எனவே மாகாண சபைகள் பட்டியலிலிருந்து புறநடையாக நீக்கப் பட்டுள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கே வழங்குவது மாகாணங் களின் பொருளாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதாக அமையும். **மாகாண கடன்** – இது மாகாண சபை பட்டியலின் 34-ம் இலக்க அதிகாரம். இந்த விடயம் மாகாண சபைக்கே உரியதானலும் – மாகாண சபையின் கடன் பெறும் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றம் இயற்றும் சட்டத்தின் கீழ் அச்சட்டம் அனுமதிக்கு மளவே இந்த அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் ஆக்கவேண்டிய சட்டம் இன்னும் ஆக்கப்பெறவில்லை.

இந்திய அரசியல் யாப்பின் 293-ம் பிரிவு கீழ்க்கண்ட படி கூறு கிறது:-

"இந்தப் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒரு மாநிலத்தின் நிறை வேற்று அதிகாரம் அம்மாநிலத்தின் ஒருங்கு சேர்க்கப்பட்ட நிதியை (Consolidated fund) பிணையாகக் கொண்டு இந்தியாவின் எல்லைக்குள் கடன் வாங்கும் அதிகாரத்தை உள்ளடக்கியதாகும். இத்தகைய கடன் கள் அவ்வவ்மாநிலத்தின் சட்டசபைகள் இயற்றும் சட்டங்களின் வரை யறைக்குள் இருப்பதோடு சட்டசபையால் ஏதேனும் உத்தரவாதம் விதிக்கப்படவேண்டுமென விதிக்கப்பட்டால் அத்தகைய வரையறை களுக்குள் உத்தரவாதம் வழங்குவதையும் உள்ளடக்கும்''.

இதிலிருந்து நாம் காணக்கூடியது என்னவெனில் இந்திய மத்திய பாராளுமன்றத்திற்கு மாநில அரசுகளின் கடன் வாங்கும் அதிகாரத் தில் கட்டுப்பாடு விதிக்க எத்தகைய அதிகாரமும் இல்லை என்பதாகும்.

எனவே இலங்கையில் மாகாண சபைகளின் கடன்வாங்கும் அதிகாரத்தை இலங்கைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தும் அதிகாரம் இலங்கை அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்படவேண்டும்.

ஒரு மாநிலத்துக்குள்ளான வியாபாரமும் வர்த்தகமும் மாநில அதிகாரப்பட்டியலில் 26-ம் இலக்க அதிகாரமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரம் மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் 83-ம் இலக்கத்துக்கு அமைவானது. ஆனுல் இத்தகைய அதிகாரம் ஒன்று இலங்கை அரசின் பட்டியலில் 23-ம் இலக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளதெனிலும் "அருந்தக்கூடிய விதைகள் - எண்ணைகள்" ஆகியன உணவுப்பண்டங்களாக சேர்க்கப்படவில்லை. "எண்ணைப்பிண்ணுக்கும் ஏனைய சக்கைகளும்" கால்நடை உணவாகச் சேர்க்கப்படவில்லை. அத்துடன் இந்திய பட்டியலில் (d)(c) கூறுகளில் உள்ளவையும் சேர்க்கப்படவில்லை.

## கல்வி

இது இலங்கை அரசின் மாகாண சபைப் பட்டியலில் 3-ம் இலக்க அதிகாரமாகும். கல்வி இந்திய யாப்பில் முன்பு மாநில அரசு அதிகாரப் பட்டியலில் இருந்தது. இட்பொழுது இது மத்திய – மாநில பொது அதிகாரப்பட்டியலின் 25-ம் இலக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது அது வருமாறு:-

கல்வி – இது தொழில் நுட்பக்கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழகக்கல்வி ஆகியவற்றை பட்டியல் I-ன் (அதாவது மத்திய அரசு அதிகாரப்பட்டியல்) 63, 64, 65ம் பிரிவுகளுக்கு அமையவும் மற்றும் தொழிலாளர் தொழில் நுட்ப பயிற்சி ஆகியவற்றையும் உள்ளடக்கும்". மேலே குறிப்பிடப்பட்ட 63-ம் குறிப்பு விசேட பல்கலைக்கழகங்களான காசி இந்துப்பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், டெல்லி, ஆந்திரா பல்கலைக்கழகங்களைப் பற்றியது.

64, 65, 66-ம் குறிப்புகள் இலங்கையின் ஒதுக்கப்பட்ட பட்டியலில் (மத்திய அரசுப்பட்டியலில்) வேண்டுமென்றோ அல்லாமலோ செய்யப்பட்ட ஒரு மாற்றத்துடன் இடம் பெற்றிருக்கின்றன. இந்த மாற்றம் இந்திய மத்திய அரசின் அதிகாரப்பட்டியலின் 65-ம் குறிப்பில் ஏற்பட்டுள்ளது. இந்திய **மத்திய அரசு** முகவர் நிலையங்களை – அமைப்புகள் எனக்கூறுகிறது. இலங்கை யாப்பில் "உயர் தொழில்களும் பயிற்சியும்" **மாகாண முகவர்கள்** எனக் குறிக்கிறது. இதைவிட இலங்கை அரசியல் 13-ம் திருத்த சட்டத்தின் பின்னிணைப்பு III மேலதிக கட்டுப்பாடுகளை விதிக்கிறது. தமிழ் பிள்ளைகளின் கல்வியின் குரல்வளையை நெரிப்பதே அரசின் நோக்கம். இந்த கட்டுப்பாடுகளுக்கு வேறு பொருள் கிடையாது.

## பின்னிணைப்பு III ல் உள்ள கட்டுப்பாடுகள்

1) தேசியப் பாடசாலைகள் (II) பாதுகாப்புப்படையினருக்கான விசேட பாடசாலைகள் (III) குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களுக்கான பாடசாலைகள் மாகாண சபை கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. பாதுகாப்பு விடயம் மத்திய அரசின் விடயம் என்பதில் கருத்து வேறுபாடு இல்லையானதால் மேலே காட்டப்பட்டுள்ள (ii)ம் விடயம் மட்டுமே மாகாண அதிகாரத்திலிருந்து நீக்கப்படல் வேண்டும்.

3-ம் பந்தி : "தேசிய சேவை" என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்படவில்லை. பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அமைப்பு தெளிவானதாயில்லை. எனெனில் கல்விச் சேவைக்கு ஒரு கல்விச் சேவை ஆணைக்குழுவே அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒத்த கல்விச்சேவை ஆணைக் குழு தேவை. பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் திட்டம் நீக்கப்படவேண்டும்.

பந்தி 7 : 1 A. B. C. கல்லூரிகளின் அதிபர்கள் நியமனம் மாகாண சபையின் அதிகாரவிடயமாயிருக்க வேண்டும். இவ்விடயத்தில் வரைவுப் பிரேரணைகளின்போது "மாகாண அதிகாரியின் சம்மதத்தோடு" அதிபர்கள் நியமனம் செய்யப்படும் என்றிருந்தது. ஆனால் 13-ம் அரசியல் திருத்த யாப்பில் "மாகாண அதிகாரியின் சம்மதத்தோடு" என்ற சொற்றொடர் கபடத்தனமாக கைவிடப்பட்டிருக்கிறது.

பந்திகள் 8, 15, 19 : "கல்விக்கான தேசிய நிறுவனம்" என்ற அமைப்பில் மாற்றம் செய்யப்படுவதுடன் தேசிய கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்று நாம் ஏற்கனவே கூறியுள்ள அடிப்படையில் அது உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். 'தேசியம்' என்பது இது நாள்வரை போன்று 'சிங்களம்' ஆக இருக்கக்கூடாது. பல்வேறு இனங்களின் அபிலாஷைகளை ஒன்றுபடுத்திய கொள்கையாக இருக்க வேண்டும்.

பந்தி 8, 9 : ஆசிரியர் பயிற்சியும் மாகாண கல்விச் சபைகள் நியமனமும் மாகாணசபை அதிகார விடயமாயிருத்தல் வேண்டும்.

பந்தி 10 : கல்வி அமைச்சின் திட்டங்களுக்கமைய கல்லூரிச் சபைகள் அமைக்கலாம் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கல்வி அமைச்சு ஏற்கனவே மாகாணசபைகள் அமைந்துவிட்ட மாகாணங்களுக்குக்கூட இத் தகைய திட்டங்களை அறிவிக்கவில்லை. அரசின் தலையீடு உள்ள விட

யங்கள் எப்படி இருக்கும் என்பதற்கு இது உதாரணம். மாகாண சபைகள் அமைக்க முன் அல்லவா திட்டங்கள் வெளியிடப்பட வேண்டும்?

பந்தி 22 : சில விஞ்ஞான உபகரணங்களைப் பெறுவதும் வினியோகிப்பதும் மாகாணசபைகள் செய்யமுடியாது. அப்படி மாகாணசபை பெறவோ வினியோகிக்கவோ முடியாத விஞ்ஞான உபகரணங்கள் யாவை என கல்வி அமைச்சு அறிவிக்கும் என இருக்கிறது. அப்படியாஞல் கல்வி அமைச்சின் இம் முடிவு மாகாணசபைகள் செயற்படத் தொடங்க முன் அல்லவா வெளியிடப்படவேண்டும்?

பந்தி 24 : இப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'தேசிய நூலக சேவை' யின் அமைப்பு உறுப்புரிமை ஆகியவை முன்கூட்டியே தெளிவாக்கப் படல் வேண்டும்.

## நிதி ஏற்பாடுகள்

நிதி ஏற்பாடுகள் விடயத்தின் முக்கியத்துவம் கருதி மாகாணசபை அதிகார பட்டியல் என்ற விடயத்திலேயே இது ஆராயப்படவேண்டியிருக்கிறது.

இலங்கையின் 13வது அரசியல் திருத்த யாப்பின் 154 R பிரிவின்படி உருவாக்கப்படவிருக்கும் நிதி ஆணைக்குழுவின் அமைப்பு அதிகாரங்களையும் இந்தியயாப்பின் 280, 281-ம் பிரிவுகளின்படி உருவாக்கப்பட்டிருக்கும் இந்திய நிதி ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்:

### 1. அமைப்பு:

| இந்திய யாப்பின் கீழான இந்திய நிதி ஆணைக்குழு | இலங்கை யாப்பின் கீழான இலங்கை நிதி ஆணைக்குழு |
| --- | --- |
| தலைவர்—மற்றும் நான்கு உறுப்பினர். உறுப்பினர் தகைமை, அவர்களைத் தெரிவு செய்யும் முறை பாராளு மன்றத்திஞல் ஆக்கப்படும் சட்டத்திற்கமைய இருக்கும். | மத்திய வங்கி ஆளுநர் திறைசேரி செயலாளர் ஒவ்வொரு பெரும் இனத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியவகையில் மேலும் மூவர். இத்தகையவர் நிதி, சட்டம், நிர்வாகம், வர்த்தகம் அல்லது கல்வித்துறையில் பிரபல்யம் அடைந்தவராய் அல்லது பெரும்பதவி வகித்தவராயிருத்தல் வேண்டும். |

**2. ஆணைக்குழுவின் கடமைகள் :**

| | |
|---|---|
| ஜனாதிபதிக்குக் கீழ்க்கண்டவை பற்றி சிபாரிசுகளைச் செய்தல் :- | மாகாணங்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கோடு அரசாங்கம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரிலும் ஆலோசனையுடனும், நிதி ஒதுக்கீடு செய்யும். ஆணைக்குழு ஜனாதிபதிக்கு கீழ்க்காண்பவை பற்றி சிபாரிசு செய்யும் :- |
| (அ) தேசிய நிகரவரி வருமானத்தை மத்திய மாநில அரசுகளிடையே பகிர்ந்தளித்தலும் மாநிலங்களுக்கிடையே அவ்வவற்றின் பங்குகளைப் பிரித்துக் கொடுக்கும் முறையும். | (அ) வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் பணம் என்ன கொள்கைகளின் அடிம்படையில் பல்வேறு மாகாணங்களிடையேயும் பகிர்ந்தளிப்பது என்ற விடயம். |
| (ஆ) இந்திய மத்திய அரசின் பொது நிதியிலிருந்து மாநிலங்களுக்கு உதவு தொகைகள் வழங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள். | (ஆ) இந்திய யாம்பில் காணப்படுவது போன்ற பிரிவு இலங்கை யாப்பில் இல்லை. |
| (இ) உறுதியான நிதிநிலைபேண ஜனாதிபதியால் ஆணைக் குழுவின் ஆலோசனைக்கு விடப்படும் ஏனைய எந்த விடயமும். | (இ) மாகாண நிதி சம்பந்தமாக ஜனாதிபதியினுல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு விடம்படும் ஏனைய எந்த விடயமும். |

மேலே காட்டப்பட்டவற்றிலிருந்து இந்திய யாப்பின்படி இந்திய நிதி ஆணைக்குழுவின் மேலே (அ) வில் காட்டப்பட்டுள்ள அதிகாரம் மிக அதிகமாக உள்ளது என்பது காணக்கிடக்கிறது. அத்துடன் நிதி பெறப்படும் மூலகம் யாப்பிலேயே முன்கூட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனுல் இலங்கை யாப்பில் இப்படியில்லை. இலங்கையில் அரசாங்கம் தன் சொந்த விருப்பத்தில் ஆண்டுதோறும் மாகாணங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் தொகையை தீர்மானிக்கலாம்.

## மாகாண பொது நிதியும் தேவைக்கான (அவசர) நிதியும் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள நிலை

இந்திய அரசியல் யாப்பின் 283 (2) ம் பிரிவின்படி ஒரு மாநில அரசின் பொது நிதி — தேவைக்கான நிதி ஆகிய இரண்டு நிதிகளிலும் பணங்களை போட்டு வைப்பதும் அந் நிதிகளிலிருந்து பணத்தை மீள எடுப்பதும் இது தொடர்புடைய இதர சகல நடவடிக்கைகளை எடுப்பதும் மாநில சட்டசபையினால் ஆக்கப்படும் சட்டங்களுக்கு அமையவே செய்யப்படவேண்டும். மாநில சட்டசபை அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யும்வரை மாநில ஆளுநரினால் செய்யப்படும் சட்டங்களுக்கமையவே இந்நிதி செயற்படுத்தப்படும்.

இலங்கையின் அரசியல் யாப்பு திருத்தச்சட்டத்தில் இத்தகைய ஒரு ஏற்பாடு இல்லை. 1987-ம் ஆண்டின் 42-ம் இலக்க மாகாண சபைச் சட்டத்திலேயே இவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் 19(5)ம் பிரிவு மாகாண நிதி பற்றிக்கூறுகிறது. 20(2) அவசர நிதி பற்றிக்கூறுகிறது. **ஆனால் இரு நிதிகளையும் பொறுத்தளவில் இவற்றின் செயற்பாடு ஆளுநரால் செய்யப்படும் விதிகளுக்கு அமையவே இருக்கும் — மாகாண சபைகளினால் அல்ல.**

இறைவரி மத்திய மாநில அரசுகளிடையே பகிர்ந்தளிக்கப்படுவது சம்பந்தமாக இந்திய அரசியல் யாப்பு கீழ்க்கண்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது :-

268ம் பிரிவு : மத்திய அரசு அதிகாரப்பட்டியலில் கண்டுள்ள முத்திரை வரிகள், மருத்துவ அல்லது சுகாதார உற்பத்தியில் விதிக்கப்படும் கலால் வரிகள் ஆகிய மத்திய அரசால் விதிக்கப்பட்டு மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு பகிரப்படும் வரிகள் சம்பந்தமானது.

269ம் பிரிவு : மத்திய அரசினால் விதிக்கப்பட்டு மத்திய அரசினால் வசூலிக்கப்பட்டு ஆனால் மாநில அரசுகளுக்கு சாட்டுதல் செய்யப்படும் ஏழு குறிக்கப்பட்ட வரிவிடயங்கள் சம்பந்தமானது.

270ம் பிரிவு : மத்திய அரசினால் விதிக்கப்பட்டு மத்திய அரசினால் வசூலிக்கப்பட்டு மத்திய மாநில அரசுகளிடையே 2ம் உபபிரிவில் கண்டுள்ளபடி பகிர்ந்தளிக்கப்படும் வரிகள் சம்பந்தமானது.

272ம் பிரிவு : மத்திய அரசினால் விதிக்கப்பட்டு மத்திய அரசினால் வசூலிக்கப்பட்டு மத்திய அரசிற்கோ அல்லது மாநில அரசுகளுக்கோ பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டத்திற்கமைய பகிர்ந்தளிக்கப்படக்கூடிய வரிகள் சம்பந்தமானது.

275ம் பிரிவு : உதவி தேவை நிலையிலுள்ள மாநிலங்களென பாராளு மன்றத்தினால் தீர்மானிக்கப்படும் மாநிலங்களுக்கு வளங்கப்படும் உதவு தொகைகள் சம்மந்தமானது.

282ம் பிரிவு : மத்தியபாராளுமன்றமோ-மாநில சட்டமன்றமோ சட்டம் நிறைவேற்றும் அதிகார விடயமாயில்லாதிருந்த போதிலும்— மத்திய மாநில அரசுகள் பொதுத்தேவைகளுக்கு கொடுப்பனவு செய்யும் அதிகாரத்தை இப்பிரிவு மத்திய மாநில அரசுகளுக்கு லழங்குகிறது.

298ம் பிரிவு : மத்திய அரசினதும் ஒவ்வோரு மாநில அரசினதும் நிறைவேற்று அதிகாரம் — எத்தகைய வர்த்தகம் அல்லது வியாபாரம், ஆதனங்களை கொள்ளுதல், வைத்திருத்தல், பாராதீனப் படுத்தல், எத்தேவைக்கும் ஒப்பந்தங்களைச்செய்து கொள்ளல் ஆகிய சகல அதிகாரங்களையும் சில புறநடைகளுக்கமைய — தன்னகத்தே கொண்டுள்ளதாய் அமையும் எனக்கூறுகிறது.

மாகாண சபைகளுக்கு நிதி சேர்ப்பதற்கு மேலே காட்டப்பட்டிருப்பதைப் போன்ற திட்டவட்டமான ஏற்பாடுகளை இலங்கையின் அரசியல் யாப்பு திருத்தச்சட்டம் கொண்டிருக்கவில்லை. எனவே வடக்கு கிழக்கு மாகாண சபை போதிய நிதியின்மை காரணமாக அதன் தொடக்கத்திலேயே அமிழ்ந்தத் தொடங்கிவிடும்.

## ஒப்பந்தங்களும் வழக்குகளும்.

இந்திய யாப்பின் 299 (1) -ம் பிரிவின்படி மாநில அரசின் நிறைவேற்று அதிகாரசெயற்பாட்டின்போது செய்யப்படும் அனைத்து ஒப்பந்தங்களையும் ஆளுநரினால் நியமிக்கப்படுபவர்கள் அவர் பணிக்கும் அல்லது அனுமதிக்கும் விதத்தில் செய்து கொள்ளலாம்.

ஆனால் இலங்கையின் மகாணசபைகள் சட்டம் மாகாணசபைகள் வழக்குகள் சம்பந்தமாக ஒரு கூட்டு அமைப்பாக (body corporate) இயங்கவே இடமளித்துள்ளது. இந்திய யாப்பின் 299 (2)-ம் பிரிவு அரசியல் யாப்பின் செயற்பாட்டின்போது ஆளுநர் அல்லது ஒப்பந்தத்தில் அவர் சார்பில் கையொப்பமிடும் வேறு எவரும் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படாமல் இருக்க வகை செய்கிறது.

இந்திய யாப்பின் 300-ம் பிரிவு ஒரு மாநில அரசு மாநிலத்தின் பெயரில் வழக்குகள் தாக்கல் செய்யவும், மாநிலத்தின் பெயரில் அதற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யவும் வழிவகுக்கிறது.

**( நீதிமன்றங்கள் )**

இந்திய மாநிலங்களின் அதிகார விடயங்கள் பட்டியலின் **65**-ம் இலக்கம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது :-

" இந்தப்பட்டியலில் உள்ள எந்த விடயமாகவும் உயர்நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களின் நியாயாதிக்கமும் அதிகாரமும்."

மத்திய — மாநில அரசுகளுக்குப் பொதுவான அதிகாரவிடயங்களின் பட்டியலின் 11 A இலக்கம் கீழ்க்கண்டபடி உள்ளது :-

"உயர்நீதிமன்றம், மேல்நீதிமன்றம் ஆகியவை தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களினதும் நீதி நிர்வாகம், அமைப்பு, ஆக்கம்."

இப்பட்டியலின் 46-ம் இலக்கம் கீழ்க்கண்டபடி கூறுகிறது :-

" இப்பட்டியலில் காணப்படும் எந்த விடயம் சம்பந்தமாகவும் உயர்நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கமும் அதிகாரமும்". இந்திய மத்திய அரசின் அதிகாரப்பட்டியலின் 95-ம் இலக்கப்பதிவு வருமாறு கூறுகிறது :-

" இப்பட்டியலில் உள்ள எந்த விடயங்கள் சம்பந்தமாகவும் — உயர் நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கமும் அதிகாரமும்; கடற்படை நியாயாதிக்கமும்."

இலங்கை அரசியல் திருத்த யாப்பில் மாகாண சபைகளின் அதிகாரப்பட்டியலிலோ அல்லது மத்திய அரசு மாகாணசபைகள் ஆகியவற்றிற்கு பொதுவான அதிகாரவிடயப்பட்டியலிலோ இந்திய யாப்பில் காணப்படும் இத்தகைய ஏற்பாடுகள் இல்லை. மேன்முறையீட்டு நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கம் அதிகாரம் யாவும் — மத்திய அரசு அதிகாரவிடயப் பட்டியலிலேயே காணப்படுகின்றது. இந்திய யாப்புடன் ஒத்ததாக இருக்கக்கூடியதாக இந்த விடயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

## மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரம்

பங்களூர் பேச்சு வார்த்தைகளின் போது இந்திய தரப்பினர் கீழ்க்கண்டவற்றை ஆலோசனைக்காக சமர்ப்பித்தனர் :-

பந்தி 4 :- மாகாண சபைகளின் அதிகாரப்பட்டியலில் இடம் பெறும் விடயங்கள் சம்பந்தமாக இலங்கைப் பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம் இந்திய யாப்பின் 249-ம் பிரிவிற்கு ஒத்த பிரிவினால் இலங்கையில் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

பந்தி 5: மாகாணசபை — மத்திய அரசு ஆகியவற்றின் பொது அதிகாரப்பட்டியலில் காணப்படும் விடயங்கள் சம்பந்தமாக பாராளு

மன்றம் சட்டம் இயற்ற முன்போ பின்போ — மாகாணசபை சட்டமியற்றும் அதிகாரம் — அத்தகைய ஒரு விடயத்தில் பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டத்தை திருத்தி அமைக்க மாகாணசபை கொண்டுள்ள அதிகாரம் ஆகியவை சம்பந்தமாக இந்திய அரசியல் யாப்பின் 254-ம் பிரிவிற்கு ஒத்த ஏற்பாடுகளை இலங்கை யாப்பில் சேர்க்கவேண்டும்.

இந்தியாவின் இவ்வாலோசனைகள் சம்பந்தமாக இலங்கை அரசு சிலமாற்றங்களை செய்ய ஒத்துக்கொண்டதை வரைபுப் பிரேரணைகள் வெளியீட்டில் காணலாம். ஆனால் இலங்கை இவ்வித சில மாற்றங்களை செய்ய ஒத்துக்கொண்ட போதிலும் அதன் அரசியல் யாப்பின் 13-ம் திருத்தச் சட்டத்தில் இவை இடம்பெறவில்லை. இலங்கை அரசு ஒரு நம்பிக்கைமோசடி செய்துள்ளது. இந்தியா ஏன் மௌனம் சாதிக்கிறது? இந்திய அரசு இதுசம்பந்தமாக என்ன சொல்ல இருக்கிறது?

## ( ஆ ) பொதுப்பட்டியல்

இந்திய மத்திய அரசு — மாநில அரசுகள் ஆகியவற்றின் அதிகார விடயங்கள் பட்டியலில் 52 விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஆகப்பதினாறு மட்டுமே இலங்கையின் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இலங்கையின் பொதுபட்டியலில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

இல: 5 திருமணம், மரணசாதனமின்மையும் உரிமை அடையும் முறையும் கூட்டுக் குடும்பம்—பிரிவிடல்.

இல: 6 கமக்காணி நீங்கலான பிற உடமைகள், உரிமை மாற்றம், உறுதிகள் ஆவணங்கள் பதிவு.

இல: 7 பங்குதாரர், முகவர் உட்பட்ட ஒப்பந்தங்கள் ..... கமத்தொழில் காணி.

இல: 8 வழக்கு தாக்கல் செய்யப்படக்கூடிய தீங்குகள்.

இல: 9 வங்குரோத்தும் — வருமதிகளை மிஞ்சிய செல்மதிகளும்

இல: 10 நம்பிக்கை சொத்துக்களும் — நம்பிக்கைப் பொறுப்பாளர்களும்.

இல: 11 A உயர் நீதி மன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதி மன்றங்களினதும் நீதி நிர்வாகம், அமைப்பு, ஆக்கம்.

இல: 15 அலைந்து திரிதல்.

இல: 16 விசரும் மனநிலைக்குறைபாடும்.

இல: 17 மிருகங்களுக்கு கொடுமை புரிதலை தவிர்த்தல்.

இல : 17 A காடுகள் (குறிப்பு — இலங்கைப்பட்டியலில் சமூக காடு கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது).

இல : 22 தொழிற்சங்கங்கள் தொழில் -- தொழிலாளர் பிணக்குகள்.

இல : 24 தொழிலாளர் நலன், தொழில் நிபந்தனைகள்...... தாய்மை நலன்கள்.

இல : 26 சட்டம், வைத்தியம் மற்றும் உயர்தொழில்கள்.

இல : 32 உள்நாட்டு நீர்வழிகளிலான கப்பல்சேவை போக்குவரத்து ......... 1-ம் பட்டியலில் தேசிய நீர்வழிகள் சம்பந்தமான ஏற்பாடு களுக்கமைய.

இல : 33 நிறைகளும் அளவைகளும்.

இல : 35 பொறிகளால் இயக்கப்படும் வாகனங்களும் அவற்றின் மீது விதிக்கப்படும் வரிகளுக்கான கோட்பாடுகளும்.

இல : 36 தொழிற்சாலைகள்.

இல : 37 கொதிகலன்கள்

இல : 44 நீதி விடயமான முத்திரைகள் மூலம் சேகரிக்கப்படும் வரி கள் அல்லது கொடுப்பனவுகள் நீங்கலாக ஏனைய முத்திரை வரி கள் ஆனால் முத்திரை வரியில் வசூலிக்கப்படும் வரிநீங்கலாக

இல : 48 இப்பட்டியலில் கூறப்பட்டுள்ள எந்த விடயம் சம்பந்தமா கவும் உயர்நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய சகல நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கமும் அதிகாரமும்.

இலங்கையின் பொதுப்பட்டியலில் காணப்படுவனவற்றில் குறைந்த பட்சம் கீழ்க்காணப்படும் இரு அதிகாரங்களாவது மாகாண சபை அதிகார விடயப்பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும் என்பது எமது கருத்து. அப்படிச் செய்வதன்மூலம் முரண்பாடுகளை தவிர்க்கலாம். அவையாவன :

இல : 11 பட்டினங்கள் கிராமங்களின் பெயர் மாற்றம்.

இல : 19 நாட்டுக்கடல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீன் பிடித்தல்.

மேற்சொன்னவை இந்திய யாப்பில் மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலிலேயே இடம்பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## (இ) ஒதுக்கப்பட்ட அதிகாரவிடயப்பட்டியல்

இந்திய மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் 99 விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இலங்கை அரசின் பட்டியலில் இவற்றில் 79 அப் படியே சொல்லுக்குச் சொல் இந்திய யாப்பின்படியே இருக்கின்றன

என்பது முக்கியமாகக்கவனிக்கப்படல் வேண்டும். கீழ்க்காண்பன பாராளுமன்ற சட்டத்தினுல் கட்டுப்படுத்தப்படும் எனக்கூறப்பட்டிருக்கிறது. ஆனுல் சட்டங்கள் குறிப்பிடப்படவில்லை.

## பாதுகாப்பும் தேசியபந்தோபஸ்தும்

(எச்) பாதுகாப்பு நோக்கத்துக்காக பாராளுமன்றத்தினுல் வெளிப்படுத்தப்பட்ட கைத்தொழில்கள்.

## துறைமுகங்கள்

(அ) துறைமுகங்களின் எல்லைவரையறை ..... பாரியதுறைமுகங்களென பாராளுமன்றத்தினுல் ஆக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது இப்போதுள்ள சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தினுல் வெளிப்படுத்தப்பட்ட துறைமுகங்கள் (எல்லை வரையறை என்பது தெளிவாக வியாக்கியானப்படுத்தப்படவேண்டும்)

## தேசிய போக்குவரத்து

(ஆ) தேசிய நெடுஞ்சாலைகள் என பாராளுமன்றச் சட்டத்தினுல் பிரகடனப்படுத்தப்படுபவை.

## (ஆ) ஆறுகளும் — நீர்வழிகள் முதலியனவும்

(இ) பொறிமுறையால்........தேசிய நீர் நிலையங்கள் என பாராளுமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட நீர்வழிகள் மீதான கப்பல் தொழிலும்.

(உ) விதிப்பயன்பாடு பொது நன்மைக்கு உகந்தது எனப் பாராளுமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்குகளுக்கு அமைய மாகாணங்களுக்கிடையிலான நதிகளின் அபிவிருத்தி முதலியன.

(எ) பாரளுமன்றத்தால் வேறுவிதமான ஏற்பாடுகள் செய்யப்படும் அளவிற்கு . ... ஆதனங்கள்.

## கனிப்பொருள்களும் சுரங்கங்களும்

(அ) எண்ணெய் படுமிடங்களையும் ...... தீப்பற்றுமியல்பினவெனச் சட்டத்தின்மூலம் பாராளுமன்றத்தினுல் .. .. பதார்த்தங்களும்

(ஆ) இலங்கை அரசாங்கத்தின்........ சட்டத்தின்மூலம் பாராளுமன்றத்தினுல்........ஒழுங்குபடுத்தல்

## உயர் தொழில் உத்தியோகங்களும் பயிற்சிகளும்

(அ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என சட்டத்தினுல் பிரகடனப்படுத்தப்பட்ட ...... நிறுவனங்கள்

(ஆ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை பாராளுமன்றத்தினுல் வெளியிடப்பட்டனவும் .... நிறுவனங்கள்

## தேசிய சுவடிக்கூடம் முதலியன

புராதன .... ; தேசிய முக்கியத்துவம்வாய்ந்தவை எனப் பாராளுமன்ற சட்டத்தினுல் . சின்னங்களும்

## ஏனைய விடயங்கள் ( இவை உட்பட )

(எ) எக் கைத்தொழில்கள் தொடர்பாக . .. சட்டத்தினுல் ..... அக் கைத்தொழில்கள்

(ஔ) இலங்கை . தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என பாராளுமன்ற சட்டத்தினுல் பிரகடனப்படுத்தப்பட்டனவுமான ......நிறுவனங்கள்

## ஏனைய கருத்துக்கள்

1. இந்திய அரசியல் யாப்பில் ஒவ்வொரு அதிகார விடயமும் தனித் தனியாக இலக்கமிடப்பட்டே பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனுல் இலங்கை அரசியல் யாப்பில் பல விடயங்கள் ஒரு தலைப் பின்கீழ் இணைக்கப்பட்டு "இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்" என்ற முன்னுரையுடன் பின்பு குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய வரைவு நிச்சயமாக தெளிவின்மை. பிணக்கு ஆகியவற்றிற்கு வழி வகுக்கும். உதாரணத்திற்கு மத்திய அரசு அதிகார விடயப்பட்டியலில் தலைப்பில் "தொலைக்காட்சி" குறிக்கப்பட்டுள்ளது ஆனுல் தனித்தனி விடயக்குறிப்பில் இடம் பெறவில்லை·

2. தமிழ் மக்கள் சம்பந்தமான செய்திகளை இலங்கை அரச வானெலியும் தொலைக்காட்சியும் வேண்டுமென்று திரித்து பொய்ப்பிரசாரம் செய்வது உலகறிந்த விடயம். அதனுல் இவ்விரு விடயங்களாவது பொது அதிகார விடயப்பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும்.

3. மாகாண சபைகள் நிதியைப்பெறுவதற்கான வழிகளை அடைய வங்கிகள், காப்புறுதிகள், தேசிய சேமிப்பு வங்கி என்பன — இந்திய மத்திய அரசுப் பட்டியலில் இருந்தபோதும் இலங்கையைப் பொறுத்தளவில் பொதுப்பட்டியலில் இடம்பெறவேண்டும்,

## 4. (அ) துறைமுகங்கள்

இலங்கை அரசின் பட்டியலில் பாரிய துறைமுகங்களே குறிப்பிடப் பட்டுள்ளனவாயினும் சிறிய துறைமுகங்கள் மாகாண சபைப்பட்டிய லில் இடம்பெறவில்லை. இது இந்தியாவை வெற்றிகரமாக ஏமாற்றிய தந்திரம் – அல்லது இந்தியா தான் 'ஏமாற்றப்படுவதற்கு' இசைந்த துரோகம். ஏனெனில் மத்திய அரசுப் பட்டியலில் ஒரு வாசகம் உண்டு. அதன்படி மாகாண அல்லது பொதுப்பட்டியலில் காணப்படாத ஏனைய எல்லா விடயங்களும் மத்திய அரசுக்கு சேர்ந்தவை. சிறு துறைமுகங் கள் என்ற விடயம் எந்தப்பட்டியலிலும் சேர்க்கப்படவில்லையாதலால் மேற்படி வாசகத்தின்படி இயல்பாக மத்திய அரசைச்சாரும். சுருக்க மாகச்சொன்னால் எந்தத்துறைமுகமும் மாகாண சபை அதிகாரத்துக் குள் வரா! இந்திய யாப்பின்படி பொதுப்பட்டியலில் 31-ம் இலக்கத் தில் சிறு துறைமுகங்கள் இடம் பெற்றுள்ளன. குறைந்த பட்சம் சிறு துறைமுகங்களாவது மாகாண அதிகாரப்பட்டியலில் இடம்பெற வேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம்.

## (ஆ) துறைமுகங்கள் — விமானப்பயணமும் — விமான நிலையங்களும்.

இவற்றின் இயக்கம் செயல்பாடு ஆகியன கொழும்பிலேயே மிகப் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன. இது ஏனைய பகுதிகளின் ஒத்த வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கின்றது. கொழும்பும் அதன் சுற்று டலும் பெருமளவு சனப்பெருக்கமடைந்துள்ளன. இதனால் பெரும் முதலீட்டாளர்கள் ஏனையபகுதிகளுக்கு சென்று முதலீடு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர். சம நிலையின்மை, தேவைகள் கிடைக்கப் பெறுமை, இழந்த சந்தர்ப்பங்கள் என்ற மனப்பான்மை வெளிப்படை யாக மக்களிடையே வளர்ந்துள்ளது. எனவே துறைமுகங்கள், விமான நிலையங்கள் தொடர்புடைய செயற் பாடுகளில் நியாயமான அளவு பிற பகுதிகளுக்குக் கொடுக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார வளம் எல்லா இடத்திற்கும் நியாயமாகப் பகிர்ந் தளிக்கப்படுவதாயிருக்கும். மாகாணங்களிலும் ஒத்த பொருளாதார அபிவிருத்தியைக் காணமுடியும்.

தமிழினத்தின் கருத்து நோக்குப்படியும் தமிழர் தாயகம் நன்மை கள் பெறவேண்டுமானால் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள துறை முகங்கள், விமானநிலையங்கள் ஊடாக போக்குவரத்து நடைபெற வேண்டும். ஆகவே இவ்விடயம் இன்னும் பேசித் தீர்க்கப்படாத விட யங்கள் பற்றிப் பேசப்படும்போது உரியவிதத்தில் கவனிக்கப்பட வேண்டும்.

## 5. தேசியப்போக்குவரத்து.

இலங்கையின் வரைபுப்பிரேரணைகளில் தேசிய போக்குவரத்து என்ற தலைப்பில் ஒதுக்கிய நிரலில் தரைமூலமான மனித—பொதி போக்கு வரத்து சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்திய மத்திய அரசுப் பட்டியலிலும் (இல : 30) தரைமூலமான போக்குவரத்து சேர்க்கப் படவில்லை. ஆனால் இலங்கையின் 13வது அரசியல் திருத்தத்தில் மத்திய அரசிற்கு தரைமூலமான போக்கு வரத்து உரிமை தேசிய போக்குவரத்து என்றதலைப்பில் கபடந்தனமாக சேர்க்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் இந்தக்கபடநாடகத்துக்கு என்னசமாதானம் சொல்லப்போகிறது?

## 6. (ஆ) ஆறுகள், நீர்வழிகள் ஆகியபிற

இது இந்திய மத்திய அரசின் பட்டியலின் 24-ம் இலக்க அதிகாரத்தில் உள்ளபடியே கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்திய மத்திய அரசுப்பட்டிய லில் சேர்க்கப்படாத விடயங்களுக்கு இந்திய பொதுப் பட்டியலில் இடம்வைத்து 32-ம் இலக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்திய பொதுப் பட்டியலின் 32-ம் இலக்க அதிகார விடயத்தை ஒத்த அதிகார விடயம் இலங்கை யாப்பில் இடம் பெறவில்லை. இதன் தாக் கம் என்ன? மேலே 4 (ஆ) பந்தியில் குறிப்பிட்டதைப்போல வேறு பட்டியல்களில் இல்லாத அதிகாரம் அனைத்தும் மத்திய அரசுக்கே உரியதாகுமல்லவா?

## 7. சட்டசபைகளுக்கான தேர்தல்:

இவ்விடயம் இந்தியப் பொதுப் பட்டியலில் 37-ம் இலக்கத்திலும் இந்திய மத்திய அரசுப்பட்டியலில் 72-ம் இலக்கத்திலும் பதியப்பட் டுள்ளது. ஆனால் இலங்கையின் அரசியல் யாப்பு திருத்தத்தில் பொதுப் பட்டியலில் இது பற்றி எந்தப்பதிவும் இல்லை.

## (இ) உயர்தொழில் உத்தியோகங்களும் பயிற்சிகளும்

இந்தியப்பட்டியலின் 65-ம் இலக்கப் பதிவு "மத்திய" முகவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது – "மாநில" முகவர்கள் பற்றியல்ல. இலங்கை யின் வரைவு பிரேரணைகளில் ஏற்பட்ட ஒரு தவறினால் அரசியல் யாப்புத் திருத்தத்திலும் இது இடம் பெற்றிருக்கலாம். எனில் இந்தப் பிழை திருத் தப்படல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்டுள்ளனவற்றிலிருந்து இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மாகாண சபை அமைப்பு முறை அறவே போதியதான தல்ல என்பது தெளிவு. அதுமட்டுமல்லாது கீழ்க்கண்ட விதத்தில் பல அடிமட்ட திருத்த வேலைகள் நிறையச் செய்யப்பட வேண்டும்.

1) வருங்காலத்தில் பாராளுமன்றம் ஆக்கும் சட்டங்கள் மூலம் கட்டுப் படுத்தப்படும் எனப்பல அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் இச் சட்டங்கள் யாவை என்பது தெளிவாக்கப்படல் வேண்டும்.

2) இலங்கை இப்பொழுது பலவின மக்கள் சமூகம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளபடியால் 'தேசிய நன்மை' 'பொது நன்மை' என்ற பதங்களுக்கான புதிய வியாக்கியானம் கொடுக்கப்பட வேண்டும்.

3) குறைபாடுகளையும் பிழைகளையும் இலங்கை அரசினுல் கபடத்தன மாக புகுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட பகுதிகளையும் நிவர்த்தி செய்து இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய தீர்க்கப்படாத விடயங்கள் பற்றித் தீர்வு காணப்படல் வேண்டும்.

சமீபத்தில் தான் ஜனுதிபதி தமது அமைச்சர்களிடமிருந்து அவர் கள் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்க யோசிக்கும் விடயங்கள் பற்றிய அறிக்கை கோரியிருந்ததாக செய்தி வந்தது. இந்தியாவின் முன்னுள் வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் ''குதிரைக்கு முன் வண்டியைப்பூட்டும் செயல்'' என வர்ணித்திருந்த குழப்பத்துக்கு இது ஒரு நல்ல உதாரணம்.

## (எ) இடைக்கால நிர்வாகம்

பங்களூர் பேச்சு வார்த்தைகளின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகமுக்கியமான முடிவுகளில் ஒன்று இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதென்பதாகும். வரைபுப் பிரேரணைகளில் கீழ்க்கண்டவை இருக்கின்றன:-

10. சமாதான உடன்படிக்கைக்கு **கையொப்பமிடுவோர்களின்** ஆலோசனையுடன் ஜனுதிபதி வடக்கு மாகாணத்துக்கு ஒரு நிர் வாகியையும் கிழக்கு மாகாண சபை அல்லது சபைகளுக்கு நிர் வாகி அல்லது நிர்வாகிகளையும் நியமிப்பார்.

10.1 நிர்வாகிக்கு உதவவும் ஆலோசனை கூறவும் ஒவ்வொரு மாகாணத் திலும் உள்ள பல்வேறு இனங்களையும் பிரதிபலிக்கக் கூடியதாக ஜனுதிபதி ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைச் சபையையும் நியமிப்பார். நிர்வாகி – ஆலோசனைச்சபையுடன் இயங்கும் நிர்வாகியாகப் பணியாற்றுவார். இடைக்காலத்தில் ஜனுதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஆலோசனைச்சபை யின் உதவியுடன் நிர்வாகி செயற்படுத்துவார்.

10.2 மாகாண சபை நிறுவப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவி ஏற்கும் வரை மாகாணத்தின் சிவில் நிர்வாகத்துக்கு

ஆலோசனைச் சபையின் உதவியுடன் இயங்கும் நிர்வாகி தலைவராயிருப்பார். அவர் சட்டம் ஒழுங்கு பேணப்படுவதற்கும் பொறுப்பானவராயிருப்பார்.

10.3 இடைக்கால நிர்வாகம் மாகாண சபை நிறுவப்படும் வரை சுமுகமாகவும் ஒழுங்காகவும் செயற்பட்டு மாகாண சபைகளிடம் அதிகாரத்தை கையளிக்கும் என உணரப்படும் அதே வேளையில் இடைக்கால நிர்வாகமும் சபையும் ஒழுங்காக செயற்படக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும் என்றும் கருதப்பட்டது. எனவே தேர்தல் பற்றிய பிணக்குகள் தேர்தல் ஆணைக் குழுவாலும் சிவில் நிர்வாகம் பற்றிய பிணக்குகள் ஜனாதிபதியாலும் தீர்த்து வைக்கப்படவேண்டும் என பிரேரிக்கப்பட்டது.

குறிப்பு: இக்கால கட்டத்தில் இலங்கை அரசாங்கம் கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாக பிரிக்கும் யோசனையை கொண்டிருந்தது. இந்த யோசனை பின்பு கைவிடப்பட்டது. இலங்கைத் தரப்பினர் கீழ்க்கண்ட ஆலோசனைகளை வழங்கினர்:

10.1 வடக்கு மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் ஒரு பிரதம நிர்வாகியை ஜனாதிபதி நியமிப்பார். பிராதன நிர்வாகியின் கடமைகள் வருமாறு:-

(அ) மாகாணத்தின் சகல சிவில் நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதும் குறிப்பாக சட்டம் ஒழுங்கு பேணல், தெருக்கள், புகையிரத வீதிகள், தந்திச்சேவை தொடர்புகளை மீட்பித்தல் மற்றும் சகல அத்தியாவசிய சேவைகளையும் வழங்கல்.

(ஆ) **மாகாண சபை நிறுவப்படுவதைத் தொடர்ந்து அம்மாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தும்போது மாகாணத்தின் தேர்தல் அலுவலராய் கடமையாற்றல்**

'இறுதியில் பங்களூர் மாகா நாட்டின் செயற்பாட்டுப் பத்திரங்களின் மீதான குறிப்பு' என்ற தலைப்பில் கீழ்க்கண்டபடி கூறப்பட்டுள்ளது.

## 10. இடைக்கால நிர்வாகி

"ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சாதாரண சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு நிர்வாகிக்கு வேண்டிய அதிகாரங்களை ஜனாதிபதி கொடுத்து கையளிப்பார். இந்த அதிகாரங்களின் தன்மை என்ன என்பதை அறிவதற்கு பங்களூரில் இலங்கை அரசு சமர்ப்பித்த ஆலோசனை 10.1 ஐ பார்க்கவும்.

10.3 தேர்தல் ஆணைக்குழு என்பது தேர்தல் ஆணையாளர் என்றிருக்க வேண்டும்.''

மேலே உள்ளனவற்றிலிருந்து ஒன்று தெளிவாக தெரிகிறது. ஒரு ஆலோசனைச் சபையின் ஆலோசனையுடனும் உதவியுடனும் இயங்கும் நிர்வாகி ஒருவரை நியமிக்க வேண்டுமென்பது இந்திய – இலங்கை உடன்படிக்கையின் ஒரு அங்கம். ஒரே ஒரு வேறுபாடுதான் இதில் உள்ளது. வடக்கு கிழக்கை இணைத்த மாகாண சபைக்கு அரசாங்கம் ஒத்துக்கொண்டபின் இரு மாகாணங்களுக்கும் ஒரு நிர்வாகி பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு ஆலோசனைச் சபையுடன் இயங்கவேண்டும் என்பதாகும். ஒப்பந்தத்தின் இந்த முக்கிய அங்கத்தை இலங்கை அரசாங்கம் இப்போது புறக்கணித்துள்ளது. இன்று இந்திய அரசு இடைக்கால அரசை – ஒப்பந்தத்தின்படி செயற்படுத்தும்படி இலங்கையை வற்புறுத்துவதற்கு பதிலாக இடைக்கால நிர்வாகம் இல்லை என்று கூறுகிறது. இலங்கை அரசு மட்டும் ஒப்பந்தத்தை மீறவில்லை. இந்திய அரசும் மீறியுள்ளது. இந்த இலட்சணத்தில் துவக்கு முனையை நீட்டிப் பிடித்துக்கொண்டு எந்த ஒப்பந்தத்தை புலிகள் இயக்கம் ஏற்கவேண்டுமென இந்திய அரசு சண்டித்தனம் பண்ணுகிறது? புலிகள் இயக்கத்தின் சம்மதத்தைப் பெறாமலே இந்தியா இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையா அல்லது இரு அரசுகளுமே கூட்டுச்சேர்ந்து முறித்து விட்டு – தமிழ் மக்கள் முதுகில் குத்திய முறிந்த ஒப்பந்தத்தையா புலிகள் இயக்கம் ஏற்கவேண்டும்? இதை இந்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

## வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்த இடைக்கால அரசமைப்பு இன்றியமையாதது.

இடைக்காலத்தில் ஏராளமான பணியாற்ற வேண்டியிருக்கிறதென்பது ஒரு புறமிருக்க மாகாண சபைக்கான தேர்தல்களை நடத்துவதற்கு இடைக்கால அரசு உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. ஏனெனில் பிரதம நிர்வாகியே இம்மாகாண சபையின் தேர்தல் அதிகாரியாகப் பணியாற்ற வேண்டும். இடைக்கால அரசை ஏற்படுத்த இலங்கை அரசு மறுப்பின் அது இந்திய – இலங்கை ஒப்பந்த மீறுதலாகும்.

இது மட்டுமல்லாமல் இடைக்கால அரசு உருவாக்கப்படவேண்டுமென்பதற்கு மேலும் அவசியமான பல காரணங்கள் உள. அவற்றுள் பிரதானமான சில வருமாறு:-

1. வரை பிரேரணைகளின் பிற்சேர்க்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டாலும் மாவட்ட அளவில் அரசாங்கத்தின் அதிகாரங்கள், கடமைகள், வேலைகளை நிறைவேற்ற

தற்போது நடைமுறையிலுள்ள நிர்வாக அமைப்பை மாவட்டங்களில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்குண்டு. **மாகாண சபைகளுக்கும் இத்தகைய மாவட்ட நிலையிலான நிர்வாக அமைப்பு அநேகமாக தேவைப்படலாம்.**

மேலே கூறப்பட்டதிலிருந்து மாகாண சபை தெரிவு செய்யப்பட்டபின் செயற்படுவதற்கு மாவட்ட நிலையிலான நிர்வாக அமைப்பு தேவை என்பது தெளிவாகிறது. எனின் இந்த நிர்வாக அமைப்பு இடைக்கால அரசினால் இடைக்காலத்திலே உருவாக்கப்பட வேண்டுமென்பது இயல்பானதல்லவா?

## 2. தமிழ் பொலிஸ் படையை உருவாக்க வேண்டிய தேவை

அமைதியையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் மீட்டும் கொண்டு வரவும் சிவில் நிர்வாகத்தை மீட்டும் கொண்டு வரவும் ஏன், தேர்தலைத்தான் நடத்துவதற்கும் அவசிய தேவையான (தமிழ்) பொலிஸ் படை மிக அத்தியாவசியமானது. சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மாதங்கள் பத்து கடந்துவிட்டபோதிலும் இத்தகைய பொலிஸ் படையை நிறுவ முயற்சி தானும் எடுக்கப்படவில்லை. இதற்குப்பதிலாக இலங்கை அரசு ஒரு றிசேர்வ் பொலிஸ் பிரிவை உருவாக்க ஆட்களைச் சேர்க்கிறது. இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் சிலர் இந்த 'றிசேர்வ்' பொலிசிற்குச் சேர்க்கப்பட்டு தற்போது பயிற்சி பெற்று நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவ்விடயம் சம்பந்தமாக மேலே சட்டம் ஒழுங்கு என்ற விடயத்தின்போது நாம் கூறியுள்ள கருத்துக்களை வாசகர்கள் கவனிப்பாராக. ஏன் ஒப்பந்தச் செயற்பாட்டை மீறி இலங்கை அரசாங்கம் தனித்து இயங்கமுடியாத றிசேர்வ் பொலிஸ் படைக்கு மட்டும்தான் ஆள் சேர்க்கிறது என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. ஒருவேளை மீண்டும் சிங்களப் பொலிஸ்சினரை எம்மத்தியில் அமர்த்துவதற்கா? அது எப்படியிருந்த பொழுதும் ஒரு தமிழ் பொலிஸ் படை உருவாக்குவது இத்தகைய மாற்றம் நிகழவிருக்கும் இடைக்காலத்தில் செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

## புனர்வாழ்வு புனருத்தாரண வேலைகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களிலே சமாதானத்தையும் சகஜ நிலையையும் கொண்டுவருவதற்கு பாரிய புனருத்தாரண புனர்வாழ்வு வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டும். மாகாணசபைத் தேர்தல்களை எதிர்பார்த்து இவ்வேலையை காலந்தாழ்த்தமுடியாது. நாங்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு தீர்க்கப்படும் வரை மாகாணசபைத் தேர்தல்களே நடத்தப்படமுடியாது. இந்நிலையில் செய்யக்கூடிய புத்தியுள்ள ஒரே காரியம் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதாகத்தான் இருக்கமுடியும்.

## இலங்கை அரசுமீது சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தீவிரவாத இளைஞர்கள் மீது சுமத்தும் கடப்பாடு ஒன்றுமட்டுந்தான். அதாவது அவர்கள் ஆயுதங்களை கையளிக்கவேண்டும். இதே நேரத்தில் குறித்த ஒப்பந்தம் இலங்கை அரசின் மீது விதிக்கும் ஒவ்வொரு கடப்பாட்டையும் நிறைவேற்ற இலங்கை அரசு தவறியுள்ளது. இலங்கை அரசை அதன் கடமைகளை நிறைவேற்றும்படி நிர்ப்பந்திப்பதற்கு பதிலாக இந்திய அரசு எதற்காக தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டுமென வலியுறுத்துகிறது என்பது விளங்கவில்லை. (இவ்வாயுதங்களை புலிகள் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டார்கள் எனக்கருத இடமுண்டு. எப்படி இருந்தபொழுதும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் தடைசெய்யப்பட்டு அவர்கள் உறுப்புனர் தாக்கப்படும்வரை அவர்களின் ஆயுதங்கள் செயலிழந்திருந்தனவே!) அதிலும் புலிகளுக்கு எதிரான (இது தமிழர்களுக்குஎதிராகவும் அமைகிறது) இராணுவ நடவடிக்கை நிறுத்தத்திற்கு ஏன் இந்தியா இந்த முன் நிபந்தனையை விதிக்கிறது என்பது விளங்கவில்லை.

ஒப்பந்தத்தின் 2.9-ம் பிரிவின்படி யுத்த நிறுத்தம் ஏற்பட்டதும் இராணுவமும் மற்றும் பாதுகாப்புப் படையினரும் 25-5-1987-ல் இருந்த முகாம்களுக்குள் வைத்திருக்கப்படுவர். இந்த ஏற்பாடு இயல்பாகவே புதிய முகாம்கள் அமைப்பதைத் தடை செய்கிறது. ஆனல் இன்று திருகோணமலை மாவட்டத்தில் என்ன நடைபெறுகிறது? தமிழ் அகதிகளை மீளக் குடியமர்த்துவதிலும் பார்க்க சிங்கள அகதிகளை மீளக் குடியமர்த்துவதிலேயே இலங்கை அரசு கண்ணுயிருக்கிறது. 1983-ல் கம்பல்துறை கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் அகதிகள் மீண்டும் தம் கிராமத்துக்குச் செல்லுவதற்கு தடைசெய்யப்படுவதாக வீரகேசரி இதழில் 27-2-1988-ல் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஒரு சிங்கள கிராமவாசிகள்மீதும் மீண்டும் திரும்பி வந்துகொண்டிருந்த சிங்கள அகதிகள்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதில் சில மரணங்கள்கள் சம்பவித்தன. இதற்கு ஒரு பழிவாங்கல் நடவடிக்கைபோல் ஒரு மினிபஸ்ஸில் பிரயாணம் செய்த தமிழ் முஸ்லீம் பிரயாணிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிங்களவர் மீதான இத்தாக்குதலைத் தொடர்ந்து இந்திய – இலங்கை இராணுவ வீரர் திருகோணமலை மாவட்டத்தில் கூட்டுரோந்து நடத்துவர் என ஒரு செய்தி வந்தது. ஆயினும் ராஜ்யசபாவில் இந்தச் செய்தியை அமைச்சர் நட்வர்சிங் மறுத்திருந்தார். ஆனல் 18-3-1988-ல் இலங்கை செய்தித் திணைக்களம் விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்றில் கிழக்கு மாகாணத்தில் தாக்குதலுக்குள்ளாகும் சிங்கள முஸ்லீம் கிராமங்களுக்

கும் பாதுகாப்பு வழங்குவதில் இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும் ஒத்துழைக்குமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது இலங்கை இராணுவம் திருகோணமலைப் பகுதியில் புதிய முகாம்கள் அமைத்து சேவையில் ஈடுபட்டிருப்பது யாவரும் அறிந்த செய்தி.

## ஒப்பந்த மீறல்கள் :

மார்ச் மாசத்தில் புதுடில்லிக்கு சென்று திரும்பிய அமைச்சர் காமினி திசநாயகா இலங்கை இராணுவம் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடாது என்றும் ஆனல் நிலைமைகளைக் கட்டுப்படுத்த அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கை இராணுவம் ஈடுபடவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இச்செய்தி 20-3-1988 திகதிய வீரகேசரியில் வெளிவந்தது. இந்த 'ஒழுங்கு' எம் மாதிரியானதாயிருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக குறிஞ்சான் குளம் என்ற இடத்தில் நடந்த சம்பவம் ஒன்று அமைந்துள்ளது. இச் சம்பவம் நடைபெற்றதை திருகோணமலையில் 18-3-88-ல் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் உதவி இணைப்பதிகாரி உறுதி செய்திருந்தார். இச்செய்தியின்படி இக்கிராமத்தில் வாழும் சிங்களவர்மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்ற தகவல் கிடைத்து இலங்கை இராணுவம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் முகாமைத் தேடிப் போய் — சில பெண் தீவிரவாதிகள் உட்பட பத்துப் புலிகளைக் கொன்று முகாமையும் தாக்கியுள்ளது. உதவி இணைப்பதிகாரி மேலும் பேசுகையில் சிங்களக் கிராமங்கள் மீது தாக்குதல் நடைபெற்றிருந்தபோதிலும் அந்தப் பகுதியில் இலங்கை இராணுவம் பலப்படுத்தப்படவில்லை என்று குறைப்பட்டிருக்கிறார். ஆனல் 21-3.88 திகதிய "வீரகேசரி" புதுடில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திற்கு 2500 இலங்கை இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. **இலங்கை இராணுவம் பலப்படுத்தப்படுவதென்பது ஒப்பந்தத்தின் 2.9-ம் பிரிவை மீறி புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதைக் காட்டுகிறது.** சிங்களக் கிராமவாசிகள்மீது தாக்குதல் நடைபெற்ருல் அவ்விடத்தில் ஆயிரக்கணக்கில் இந்தியப்படையினர் இருந்த போதிலும் இலங்கை அரசாங்கமும் அங்கே தனது துருப்புக்களைக் கிராமவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக விரைகிறது. ஆனல் தமிழர்கள் கொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தமுடியாத நிலையில் இந்தியப்படை இருந்தபொழுதும் — அதன் பலத்தை அவ்விடத்தில் கூட்டுவதற்குப் பதிலாக, அது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தேடி வேட்டையாடவும் அவர்களின் ஆயுதங்களைக் களைவதிலுமே தனது வீரர்களைப் பயன்படுத்துகிறது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் துன்பம்தான் எத்தகையது?

## முடிவுரை :

இறுதியாக இந்நூலின் துணைத்தலைப்பாக இருக்கும் 'இந்திய — இலங்கை ஒப்பந்தம் இனப் பிரச்சினைக்கு ஒரு நீண்டகாலத் தீர்வைத் தரமுடியுமா?' என்ற கேள்விக்கு வருவோம். இலங்கை அரசாங்கம் அதன் இனவாத — கபட கொள்கைகளைத் தொடரவும் இந்தியப் படை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான தனது இராணுவ நடவடிக்கையை தொடர்ந்துகொண்டு தனது பூகோள அரசியல் நலன்கள் பாதுகாப்பாக இருக்கின்றன என்ற திருப்தியில் ஆறுதலாக இருந்துகொண்டு, இந்திய அரசாங்கம் அதன் நடுவர் நிலையைக் கைவிட்டு இலங்கை அரசாங்கப் பக்கம் சாய்ந்தும் நிற்குமானால் எமது மறுமொழி "இல்லை" என்பதேயாகும். 7-2-88 திகதிய "வீக் என்ட்" (Week End) பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் என்ற நிருபர் ஜனாதிபதி மந்திரிசபைக் கூட்டத்தில் ஆற்றிய ஒரு உரையைச் செய்தியாகத் தந்துள்ளார். "இந்தியா எங்கள் பக்கமே நிற்கிறது. அதைப்பற்றிப் பயமோ பதட்டமோ அடையாதீர்கள்" என்று ஜனாதிபதி கூறியதாக இச்செய்தி கூறுகிறது.

இந்திய இலங்கை அரசாங்கங்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நேர்மையான பேச்சுவார்த்தைகளை நடத்தி உத்தேச மாகாண சபை அமைப்பில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்திக்க முன்வர வேண்டும். அதன் மூலம் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். இலங்கை அரசியல் யாப்பில் காணப்படும் சிங்களவர் சார்பான பௌத்த மதம், சிங்கக்கொடி, சிங்கள தேசிய கீதம் போன்றவற்றையும் நீக்கி இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதமர் ரஜீவ் காந்தி கூறியதுபோல ஐக்கிய இலங்கைக்குட்பட்ட பிராந்திய அரசை நிறுவ முன்வர வேண்டும். அதன் மூலம்தான் ஒப்பந்தத்தின் 1.2, 1.3, 1.4, 1.5 பந்திகளில் சொல்லப்பட்டுள்ள உயரிய இலட்சியங்களை நிறைவேற்றலாம். இப்படி நடைபெற்றால் மேலேயுள்ள கேள்விக்கு "ஆம்" என்று பதில் கூறலாம். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி இந்திய அரசாங்கம் கேட்குமுன், இலங்கை, இந்திய அரசாங்கங்கள்தான் ஒப்பந்தத்தை அதன் ஏற்பாடுகளுக்கமையவும் — நோக்கத்திற்கு அமையவும் செயற்படுத்த முதலில் முடிவு செய்யவேண்டிய நிலையிலிருக்கின்றன.

★

★ ★

இந்திய-இலங்கை ஒப்பந்தம் இலங்கை இனப்போராட்டத்திற்கு ஒரு நீண்ட கால தீர்வைக் காணக்கூடியதா?

* இலங்கை அரசு தனது இனவெறிக் கொள்கைகளையும் ஏமாற்று வித்தைகளையும் தொடருமானால் —

* இந்திய அரசு நடுவர் நிலையைக் கைவிட்டு இலங்கை அரசின் பக்கம் சார்ந்து நிற்குமானால் —

* தனது பூகோள அரசியல் நலவுரிமைகள் பாதுகாப்பான நிலையி லிருக்கின்றன என்ற திருப்தியில் இந்திய அரசு வாளாவிருக்க — அதே சமயம் இந்திய இராணுவம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ் பொதுமக்களுக்கு எதிராகவும் தனது இராணுவ நடவடிக்கையை தொடருமானால் —

மேற்படி கேள்விக்கு எங்கள் மறுமொழி **இல்லை** என்பதுதான்.

* இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேசி விவாதிக்க ஒத்துக்கொண்டு —

* அத்தகைய பேச்சுக்களின் போது நேர்மையையும் இதய சுத்தியையும் பேணி—

* மாகாண சபைத்திட்டத்திலேயுள்ள குறைபாடுகளை நீக்கவும் — திருத்தவும்—

* 29-7-1987-ல் கைச்சாத்தான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 1,2, 1·3, 1.4, 1.5 பந்திகளில் வெளியிடப்பட்டுள்ள உன்னத இலட்சியங்களை நிறைவேற்றக் கூடிய வகையில், ஐக்கியஇலங்கைக்குள் ஒரு மாநில தமிழரசை ஏற்படுத்தும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க —

இரு அரசாங்கங்களும் முன்வருமானால் மேற்படி கேள்விக்கு எமது மறுமொழி **ஆம்** என இருக்கும்,

*ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், யாழ்ப்பாணம்.*